"உன் தேவனைச் சந்திக்கும்படி ஆயத்தப்படு"

(ஆமோஸ் 4 : 12)

தேவஎக்காளம்

(செல்வின் குயிஸ் - (மனைவி) ஈனிட் செல்வின்)

''நம்முடைய சரீர மீட்பாகிய புத்திர சுவிகாரம் வருகிறதற்குக் காத்திருந்து நமக்குள்ளே தவிக்கிறோம்'' (ரோ 8 : 23) நமக்குள்ளே தவிக்கின்ற ஒரு காரியத்தைக் குறித்து அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் இங்கு குறிப்பிடுகின்றார். இந்த தவிக்கும் அனுபவத்தை இந்த நாட்களில் பிரசங்கிமார்கள் விலக்கி வைப்பதற்கு முயற்சிப்பதை நாம் பார்க்கின்றோம். உதாரணமாக, பூரண சரீர சுகத்தையும், செல்வச் செழிப்பையும் மேடைகளில்

Vol. No. 38 நவம்பர் - டிசம்பர் 2005 No. 11 to 12

நின்று பிரசங்கிக்கின்ற பிரசங்கிமார்கள் இந்த உலகத்தில் நாம் பாடுபடவும், சிலுவை சுமக்கவும் அழைக்கப்பட்டிருக்கின்றோம் என்ற அசைக்கமுடியாத, ஆணித்தரமான சத்தியத்தை வேண்டுமென்றே முற்றும் தட்டிக்கழித்து மறைத்து விடுகின்றனர். ''நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதின் பலனைப் புசிப்பாய்'' (ஆதி 3 : 17) என்று தேவ வார்த்தை அத்தனைத் திட்டமாகச் சொல்லுகின்றது. அப்படி சரீர சுகத்தையும், செல்வப் பெருக்கத்தையும் பேசும் அந்தப் பிரசங்கிமார்களின் நோக்கம் யாதெனில் நம்முடைய வாழ்வில் நாம் தவிர்க்க முடியாததும், நிச்சயமாக நாம் சந்தித்தே ஆகவேண்டும் என்கின்ற பாடுகளை நாம் தைரியமாகச் சந்திக்கும்படியான தேவ ஆலோசனைகளை நமக்குக் கூறாமல் சூழ்நிலைகளை நாம் எவ்வண்ணமாக மாற்றி அமைத்துக்கொண்டால் நாம் நிறையவே இந்த உலகத்தில் இன்பங்களை அனுபவித்து ஆனந்திக்கலாம் என்று நமக்குப் போதிக்கின்றனர். சாத்தானுடைய தந்திர சூழ்ச்சியால் வீழ்ந்து போன ஒரு உலகத்தின் தவிப்பு, சஞ்சலத்திலிருந்து நாம் ஒருக்காலும் தப்பித்துக் கொள்ளவே முடியாது. வீழ்ச்சிக்கு முன்னாலிருந்த பூரணமான ஆனந்தம், களிகூருதல், குதூகலம் நிறைந்த ஏதேன் பூங்காவுக்குள் திரும்பிச் செல்ல இனி நமக்கு வழியே இல்லை. தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படியாமல் போன காரணத்தால் உண்டான வீழ்ச்சியால் நாம் லோக யாத்திரை முடியும் வரை இந்த உலகத்தில் தவித்துக்கொண்டேதான் இருக்க வேண்டும். அல்லது நமக்கு தவிப்பிருந்தாலும், அதை வெளிக்குக் காட்டிக் கொள்ளாமல் எனக்கு தவிப்பில்லை என்று கூறி மற்றவர்களை ஏமாற்ற நாம் பொய்யாய் வேண்டுமானால் நாடகமாடி நடிக்கலாம். ஆனால், தேவ வார்த்தையின்படி நமக்கு தவிப்பு இருக்கவே இருக்கின்றது.

(2)

அமெரிக்காவிலுள்ள காலிபோர்னியா என்ற இடத்திற்கு அருகாமையிலுள்ள நாபா பள்ளத்தாக்கிலுள்ள திராட்ச தோட்டங்களைப் பார்வையிட்டு வந்த ஒரு மனிதர் என்னண்டை வந்து அந்த இடங்களிலுள்ள திராட்ச செடிகளில் சில 30 அடி முதல் 40 அடி வரை தங்கள் பிரதான வேரை பூமியின் ஆழத்திற்குள் தண்ணீரைத் தேடிக்கொண்டு சென்றிருப்பதாக அங்குள்ளவர்கள் தன்னிடம் சொன்னதாக என்னிடம் கூறினார். அந்த திராட்ச செடிகளின் வேர்கள் அப்படித் தங்கள் வேர்களை பூமியின் நிலப்பரப்புக்கு கீழே விட்ட காரியத்தைக் குறித்து நான் சில வாரங்கள் எனக்குள்ளாக ஆச்சரியத்துடன் சிந்தித்துக் கொண்டிருக்கையில் பரிசுத்த ஆவியானவர் என்

உள்ளத்தில் ''நீ இந்தக் காரியத்தைக் குறித்து உனது தினசரி தியானச் செய்தியில் எனது ஜனத்துக்கு எழுது'' என்று சொன்னார்.

கர்த்தருடைய வார்த்தைகளை தினமும் அதிகமாக வாசித்து தியானிப்பதாலும், தினமும் அதிகமான நேரத்தை கர்த்தருடைய பரிசுத்த பாதங்களில் ஜெபத்தில் செலவிடுவதின் மூலமாகவும், எல்லாக் காரியங்களிலும் பரிசுத்த ஆவியானவரை மாத்திரம் சார்ந்திருப்பதாலும் ஒரு கிறிஸ்தவன் தனது ஆவிக்குரிய வேர்களை ஆழமாக செலுத்தி ஒரு கனி நிறைந்த வாழ்க்கையை நிச்சயமாக வாழ முடியும்.

(3)

எனக்கு இரண்டு கிறிஸ்தவ ஸ்திரீகளைத் தெரியும். அவர்கள் இருவருடைய கணவன்மாரும் அவர்களைத் தள்ளிவிட்டனர். அவர்கள் இருவரும் மிகவும் கண்ணீரின் வாழ்க்கையில் சென்று கொண்டிருந்தனர். அதின் காரணமாக அவர்களில் ஒரு ஸ்திரீ ஆண்டவர் பேரில் கடுமையான கோபமும், கசப்பும் கொண்டு அவரை வெறுக்க ஆரம்பித்தார்கள். அதைத் தொடர்ந்து அவர்கள் அசுத்தமான சினிமாப்படங்களைப் பார்க்கவும், அதிகமான அளவு மதுபானம் குடிக்கவும், நன்றாகப் புசிக்கவும் இன்னும் பல தேவனுக்குப் பிரியமற்ற காரியங்களைச் செய்யவும் தொடங்கினார்கள். அதின் எதிர் விளைவாக எரேமியா தீர்க்கன் சொன்னது போல ''அந்தர வெளியில் கறளையாய்ப்போன செடியைப் போல'' (எரேமியா 17 : 6) தேவனுடைய செழுமையை அவர்கள் காண முடியாமல் கனியற்றவர்களானார்கள். ஆனால், கணவனால் கைவிடப்பட்ட அடுத்த சகோதரி தன் இருதயத்தில் கணவனுடைய பிரிவினால் ஆழ்ந்த துயரம் கொண்டவர்களாக இருந்தபோதினும், கர்த்தர் தனது வாழ்வில் அனுமதித்த சிலுவையைக் குறித்து அவர் பேரில் கசப்பின் எண்ணம் கொள்ளாமல் தனது வாழ்வின் துயரங்களைத் தன்னைப்போல வாழ்வில் கணவன்மார்களால் தள்ளப்பட்ட மக்களை ஆற்றித் தேற்றி அரவணைக்கும் பணியில் ஈடுபடுத்தக் களம் இறங்கினார்கள். ஆ, தேவன் அவர்களை அநேகம் ஆதரவற்ற அபலைப் பெண்களுக்கு எத்தனை ஆசீர்வாதமாகப் பயன்படுத்தினார் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்! அந்த மகத்தான ஊழியத்தின் காரணமாக அந்த சகோதரி தன்னளவில் தன்னுடைய அருமை ஆண்டவருடைய அன்பை ஆழமாகவும், நெருக்கமாவும் அறிந்து ஆனந்தித்ததுடன் கண்ணீரைப் பானமாகப் பருகிய ஆயிரக்கணக்கான மற்ற அநாதை அபலைகளின் வாழ்விலும் தேவ

சமாதானம், பரிசுத்த ஆவியானவரின் சந்தோசம், கர்த்தரில் திடநம்பிக்கை வைத்தல் போன்ற பிரகாசமான ஒளியை ஏற்றினார்கள்.

வாழ்க்கையில் பாடுகள், நெருக்கங்கள், தவிப்புகளின் ஊடாகப் பயணம் செய்து கொண்டிருக்கும் தேவப் பிள்ளையே, அவைகளை உனது வாழ்வில் அனுமதித்த உன் அன்பின் ஆண்டவர் மேல் முறுமுறுத்து ஆண்டவரே ஏன்? ஆண்டவரே எதற்காக? ஆண்டவரே எத்தனை காலம்? ஆண்டவரே இப்படியுமா எனக்கு? என்ற தேவையற்ற கேள்விக்கணைகளை கர்த்தர் மேல் ஞானமில்லாமல் தொடுக்காமல் அந்த அன்பர் அனுமதித்த அந்தப் பாடுகளின் பின்னணியத்திலுள்ள அவருடைய மறைவான தேவாசீர்வாதத்தைக் கண்டு கொள்.

இப்படிப்பட்ட எண்ணற்ற பயனுள்ள தேவச்செய்திகளை தனது ''அனுதினமும் இயேசுவுடன்'' (Every Day With Jesus) என்ற ஆங்கில தினசரித் தியானச் செய்தியில் எழுதி வரும் தேவ மனிதர் செல்வின் குயிஸ் அவர்களின் சுயசரிதையை இந்த தேவ எக்காளப் பதிப்பில் இரத்தினச் சுருக்கமாக தேவப் பிள்ளைகளாகிய உங்களுக்கு மொழிபெயர்த்து தருவதில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.

எனது 75 ஆம் வயதில் நான் எழுதுகின்ற இந்த எனது சுய சரிதையானது முழுமையான உண்மையும், எந்த ஒரு கலப்பில்லாத தெளிவான விபரணங்களடங்கியதாகவுமிருக்கின்றது. எனது வாழ்க்கையை ஆனந்த மகிழ்ச்சி மற்றும் ஆசீர்வதிக்கப்பட்ட நினைவுகளால் நிறைந்து வழியச் செய்த என் பரலோக அன்பின் தந்தையை நான் எனது உளமார வாழ்த்தி அவருக்கு நன்றி தெரிவிக்கின்றேன். உண்மைதான், நான் எனது வாழ்வில் கொஞ்சம்கூட விரும்பாத கடும் கசப்பின் நினைவுகளைக் கொண்டிருக்கின்றபோதினும் ரோமர் 8 : 28 ன்படி அனைத்துக் காரியங்களையும் அதினதின் காலத்தில் வெகு நேர்த்தியாகச் செய்கின்ற தேவன் எனது வாழ்வில் எனக்கு நேரிட்ட ஒவ்வொரு இருதய வியாகுலங்களையும், தாங்கொண்ணா கிலேசங்களையும், புலம்பல்களையும் நான் களிப்புடன் துள்ளிக் குதித்து கிருபையின் மேல் கிருபை பெற்றுக் கடந்து செல்ல அதிசய அற்புதமாக என்னை வழிநடத்தினார்

தேவன் நமது வாழ்க்கையில் என்ன செய்து கொண்டிருக்கின்றார் என்பதை நாம் பார்த்துக் கொண்டே, பார்த்துக் கொண்டே அவரை நாம் உற்று நோக்கியவர்களாக முன்னேறிக்கொண்டே இறுதியில் பரலோகம் சென்றுவிட வேண்டும் என்று சி.எஸ்.லீவிஸ் என்ற தேவ மனிதர் சொன்னார்.

அந்த தேவ மனிதர் சொன்ன காரியத்தையே நான் எனது பூவுலக வாழ்வின் 75 ஆம் வயதில் செய்து கொண்டிருக்கின்றேன். தேவன் ஏன் இதை என் வாழ்வில் அனுமதிக்க வேண்டும்? இந்த அசாதாரணமான கால தாமதத்திற்கு தேவன் இடம் அளித்தது எதற்காக? அவர் அனுமதித்த இந்தக் கொடும் தடை நான் முன்னோக்கிச் செல்ல வகை செய்யும் படிக்கட்டாக எப்படி மாற முடியும்? என்ற தேவையற்ற கேள்விகளை எல்லாம் நான் எனக்குள்ளாகக் கேட்டு நான் என்னைக் குழப்பிக் கொண்டிராமல் தேவன் அனைத்துக் காரியங்களையும் செவ்வையாகச் செய்வதற்காக அதற்கான வழிமுறைகளை ஒழுங்கு செய்து கொண்டிருப்பார் என்ற நினைவு எனக்கு வந்தபோது எனது இருதயமானது தேவனைப்பற்றிய துதி ஸ்தோத்திரங்களால் நிறைந்தது.

நான் இந்த உலகத்துக்குள் பிரவேசித்தது முதல் இதுவரை அது எத்தனையாக மாற்றம் பெற்றுவிட்டது? அந்தக் காலத்தில் வெகு சொற்பமான மக்களே தொலை பேசி கருவிகள் வைத்திருந்தனர். ஆனால் இன்று நீங்கள் இங்கிலாந்து தேசத்தில் எந்த ஒரு இடத்தில் ஒரு கடிதத்தை அஞ்சல் பெட்டியில் போட்டாலும் அடுத்த நாளே அதின் விலாசதாருக்கு அந்தக் கடிதம் போய்ச் சேர்ந்துவிடும் என்பதை நீங்கள் நிச்சயமாக நம்பலாம். அந்த நாட்களில் விவாக ரத்து என்பது அபூர்வமாகவிருந்தது. ஒரு திருமணம் முறிந்து போய்விட்டது என்று நீங்கள் அத்தனை எளிதாகச் சொல்ல முடியாது. அதற்கான தகுதியான ஆதாரமாகிய விபச்சாரத்தை வெட்ட வெளிச்சமாக திருச்சபைக்கு நீங்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும்.

நான் எனது வாழ்க்கைச் சரித்திரத்தை 21 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப பகுதியில் எழுதத் தொடங்கியிருப்பதற்குப் பதிலாக 20 ஆம் நூற்றாண்டின் மத்தியில் நான் எழுதியிருப்பேனானால் ஒரு டைப்ரைட்டரில் சம்மட்டி வைத்து அடிப்பது போல நான் எனது கரங்களின் விரல்களைக் கடினமாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். ஆனால் பாருங்கள், இப்பொழுது ஒரு கம்பியூட்டருக்கு முன்பாக நான் அமர்ந்து எனது மனவிருப்பம் போல வித்தியாசமான கோணங்களில் எனது சுயசரிதையின் செய்திகளை மிகச் சுலபமாக, அதே சமயம் மிகவும் விரைவாகக் கஷ்டமின்றி டைப் செய்துவிட முடிகின்றது.

எனது வாழ்க்கையை நான் திரும்பிப் பார்க்கும் போது ஒரு கதை எனது நினைவுக்கு வருகின்றது. அதுவேதான் எனது வாழ்வின் மொத்த அடக்கம் என்பதை எவரும் எளிதில் கண்டு கொள்ளலாம். அந்தக் கதையின் ஆரம்பம் எங்கு என்பது எனக்குத் தெரியாத போதினும் அந்தக் கதையில் ஒரு மனிதன்

ஒரு சொப்பனம் காண்கின்றான். அந்தச் சொப்பனத்தில் அவன் ஒரு செங்குத்தான மலை உச்சியின் விழிம்பில் நின்று கொண்டிருக்கின்றான். அவனுக்குக் கீழாக உள்ள கெடு பாதாளத்தின் காட்சி அவனை நடுநடுங்கப் பண்ணுகின்றது. அந்த நேரத்தில் திடீரென தேவனுடைய குரல் வானத்திலிருந்து ''இன்னும் உச்சியின் விழிம்பிற்குச் செல்'' என்று தொனிக்கின்றது. அதற்கு அந்த மனிதன் ''நான் இன்னும் நகர்ந்து முன் செல்லுவேனானால் மகா ஆபத்தானது'' என்று பதில் கொடுக்கின்றான். ''பரவாயில்லை, இன்னும் விழிம்பிற்கு கடந்து போ'' என்று தேவன் குரல் கொடுக்கின்றார். ''ஐயா, நான் விழுந்து அதோகதியாகிவிடுவேனே'' என்கின்றான் அந்த மனிதன். ''இல்லை, இன்னும் நகர்ந்து செல்'' என்கின்றது தேவனுடைய சத்தம். கர்த்தருடைய சத்தத்திற்கு அந்த மனிதன் கீழ்ப்படிந்து சற்று முன்னேறும் சமயத்தில் திடீரென தேவனுடைய கரம் பின்னாலிருந்து அவனை அப்படியே முன்னுக்கு தள்ளிவிடுவதையும், இப்பொழுது அவன் செங்குத்தான கெடு பாதாளத்தில் விழுந்து நொறுங்கிப்போவதற்குப் பதிலாக கழுகைப்போலத் தனது செட்டைகளை அடித்து ஆனந்தமாக பறந்து செல்லுவதைப் போன்று ஆகாயத்தில் அவன் பறப்பதைக் கண்டு தனக்குள்ளே ஆனந்தப் பரவசம் அடைகின்றான்.

எனது வாழ்க்கை முழுவதிலும் இதுவேதான் திரும்பத் திரும்ப நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. தேவன் என்னை தமக்காக பெரிய காரியங்களைச் செய்யச் சொல்லுகின்றார் என்பதை நான் மனதார உணருகின்றேன். ஆனால், எனது பயத்தின் காரணமாக நான் அவரை நம்பி அவருடைய கட்டளைகளை நிறைவேற்றுவதற்கு தயக்கம் காண்பிக்கின்றேன். அப்படிப்பட்ட ஒவ்வொரு சமயமும் நான் மேற்கண்ட மனிதனைப்போன்று மலை உச்சியின் விழிம்பிற்குக் கடந்து சென்று அதற்கப்பால் அன்பின் கர்த்தரால் முன்னுக்குத் தள்ளப்பட்டு ஆனந்தமாக வானவீதியில் நான் எனது செட்டைகளை அடித்துப் பறந்து செல்லுகின்றேன்.

எனது சுயசரிதையை உங்களுக்குச் சொல்லும் நான், உங்களுடைய மற்றும் என்னுடைய பூவுலக வாழ்க்கையானது எத்தனை ஆச்சரியமும், அளவிடமுடியாததுமான தேவனுடைய மாட்சிமையான ஈவு என்பதை நான் எக்காலத்தும் இல்லாதவிதத்தில் என்னளவில் உணருகின்றேன். கர்த்தர் கொடுத்த அந்த அற்புத ஈவை அவருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமையாகப் பேணிப் பராமரித்துக் காப்பது நம்மேல் விழுந்த கடமையாகும். மானிட வாழ்க்கை என்ற அந்த மகத்தான வெகுமதி ஏதோ தற்செயலாகவோ அல்லது

எதிர்பாராதவிதமாகவோ ஆண்டவரால் நமக்கு கொடுக்கப்படவில்லை. கர்த்தர் கொடுத்த வாழ்க்கை என்ற அந்த ஈவை நமது மார்போடணைத்து முத்தமிட்டு அதற்காக நாம் நம் தேவனுக்கு நமது இருதயத்தின் ஆழத்திலிருந்து நமது நன்றியையும், ஆழ்ந்த அன்பையும் தெரிவிப்போம்.

இந்த உலகத்தில், ஆண்டவருடைய இரட்சிப்பின் பரிசுத்த திட்டங்களை செயல்படுத்தும் காரியத்தில் தேவன் எனக்குக் கொடுத்த பங்கிற்காகவும், சலுகைக்காவும், சிறப்பான சுதந்திரத்திற்காகவும் நான் அவருக்கு எத்தனை நன்றியுடையவனாக இருக்கின்றேன் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்!

எனது சுயசரிதை தேவ மக்களாகிய உங்களுடைய சரிதையைவிட எந்த விதத்திலும் மேலானதல்ல. ஒருக்கால் எனது சரித்திரம் சற்று வித்தியாசமாகத் தோன்றலாமே தவிர உங்களைவிட சிறந்ததல்ல. இப்பொழுது நான் உங்களை எனது சுய சரிதைக்குள் கொண்டு செல்லப்போகின்றேன்.

எனது பிறப்பு, நான் கர்த்தருக்காக பிரதிஷ்டை செய்யப்பட்டது

தெற்கு வேல்ஸ் நாட்டிலுள்ள டவ்லாஸ் என்ற பட்டணத்திற்கு அருகிலுள்ள ஒரு சிறிய மலையின் உச்சியிலுள்ள ஒரு சின்ன கிராமத்தில் 1928 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 27 ஆம் தேதி நான் பிறந்தேன். நான்கே நான்கு எளிய வீடுகள் மாத்திரமே அந்தக் கிராமத்தில் இருந்தன. ஏப்பிரல் 27 ஆம் தேதி என்பது அந்த நாட்களில் ''என்னை மறந்துவிடாதே'' என்ற ''காதலர் தினமாக'' அனுசரிக்கப்பட்டு வந்தது. அந்த காதலர் தினத்தில்தான் நான் பிறந்தேன்.

எனது பெற்றோர் என்னுடைய அம்மாவுடைய தாய் தந்தையரின் வீட்டில் உள்ள 2 அறைகளில் வாழ்ந்து வந்தனர். தங்களுடைய பொருளாதார கஷ்டங்களின் காரணமாக தங்களுக்கென்று சொந்தமாக ஒரு வீட்டைக் கட்டிக் கொள்ளவோ அல்லது ஒரு சௌகரியமான வீட்டை வாடகைக்கு அமர்த்திக் கொள்ளவோ எனது பெற்றோருக்கு இயலாமல் போய்விட்டது. எனது தகப்பனார் நிலக்கரிச் சுரங்கத்தில் மின்சாரப் பணியாளனாக இருந்தார்கள். எனது தாயார் ஐசுவரியமுள்ள தனவந்தர்களின் வீடுகளில் சமையல் மற்றும் வீடுகளைச் சுத்தம் செய்யும் வேலைகளைச் செய்து வந்தார்கள். எனது தாயார் தனது 14 ஆம் வயதிலேயே தனது உலகக் கல்வியிலிருந்து நின்று கொண்டு விட்டார்கள். எனது தகப்பனார்

6 பேர்களுடன் பிறந்தவர்கள். ஆனால், என்னுடைய தாயார் 12 பேர்களுடன் பிறந்தவர்கள். எனது பெற்றோர் சாதாரணமானவர்களாக இருந்த போதினும் உயர்ந்த குணாதிசயங்களைக் கொண்டவர்களாக இருந்தார்கள். நிறைய எண்ணிக்கையுள்ள குடும்பங்களிலிருந்து பெற்றோர் வந்திருந்தபடியால் குடும்ப பந்தபாசங்களுக்கு அவர்கள் மிகவும் கண்ணியம் கொடுத்து வந்தார்கள். நல்ல ஒழுக்கசீலம் கொண்ட மக்களாக அவர்கள் விளங்கினார்கள்.

நான் பிறந்த சில வாரங்களில் எனது பெற்றோர் எங்கள் கிராமத்திலிருந்து 3 மைல்கள் தொலைவிலுள்ள ஃபாச்சர் என்ற கிராமத்திலுள்ள சிறிய தேவாலயத்திற்கு என்னைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்பதற்காகக் கொண்டு சென்றார்கள். அந்த ஆலயத்தில் எனக்கு எனது பெற்றோர் ''செல்வின்'' என்ற பெயரைக் கொடுத்தனர். செல்வின் என்ற பெயருக்கு எங்கள் வேல்ஸ் மொழியில் ''தெளிவான குரல்'' என்பது பொருளாகும். இந்தப் பெயரை எனது பெற்றோர் எனக்கு இட்டதின் காரணம் பின் நாட்களில் நான் எனது குரலை இயேசு இரட்சகரின் நற்செய்தியினை உலகத்தினருக்கு அறிவிக்க வேண்டுமென்ற எதிர்பார்ப்புடன்தான் என்று பின் நாட்களில் அவர்கள் என்னிடம் கூறினார்கள். அதற்காக அவர்கள் ஜெபித்து வந்ததாகவும் எனக்குச் சொன்னார்கள். அந்த ஆலயத்தில் அப்பொழுது குருவானவராக இருந்தவர்கள் எனது தாயாரின் சகோதரியின் கணவர் டேவிட் தாமஸ் என்பவராவார். அவர்கள் என்னைத் தனது மார்போடணைத்து எனக்காக ஜெபித்த பின்னர் சற்று அமைதிக்குப் பின்னர் ''கர்த்தாவே, இந்தக் குழந்தை ஒரு நாள் உமது மகிமையின் சுவிசேஷத்தை உலகுக்கு அறிவிக்கும் ஒரு பிரசங்கியாக காணப்பட நீர் கிருபை செய்யும்'' என்று ஆண்டவரை மன்றாடிக் கேட்டுக் கொண்டதாக அந்த ஆராதனையில் கலந்து கொண்ட சிலர் மூலமாக பின் நாட்களில் நான் கேள்விப்பட்டேன்.

மேற்கண்ட எனது பெரிய தந்தை (பெரியப்பா) அத்தனை தெளிவான பரம தரிசனத்துடன் எனக்காக அந்த தேவாலயத்தில் ஆண்டவரிடம் ஏறெடுத்த மன்றாட்டைக் குறித்து நான் காலாகாலமாக ஆழ்ந்து தியானித்து வந்திருக்கின்றேன். ''நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது'' (யாக் 5 : 16) என்று தேவ வார்த்தை கூறுகின்றது. அந்த தேவ மனிதர் அன்று தேவாலயத்தில் எனக்காக ஏறெடுத்த அந்த அர்ப்பணிப்பின் ஜெபமானது தேவனுடைய திருவுளத்தில் காணப்பட்ட நோக்கத்தை அப்படியே பிரதிபலிப்பதாக இருந்தது.

எனது பெரியப்பா தீர்க்கத்தரிசனமாக அந்த தேவாலயத்தில் என்னைத் தமது கரங்களில் ஏந்தி எனக்காக ஏறெடுத்த அந்த அர்ப்பணிப்பின் ஜெபத்தை நான் உலகமெங்கிலும் பிரசங்கிக்கும் கூட்டங்களில் அவ்வப்போது கூறி வந்திருக்கின்றேன். அப்படி நான் மலேசியாவிலுள்ள கோலாலம்பூர் பட்டணத்தில் ஒரு கூட்டத்தில் சொன்னபோது அந்தக் கூட்டத்திலிருந்த ஒரு சிறுவன் தனக்கு அருகிலிருந்த தனது பெற்றோரிடத்தில் ''செல்வின் குயிஸ்'' ஐ அவருடைய பெரியப்பா அவர் குழந்தையாக இருந்தபோது கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து ஜெபித்தது போல தன்னையும் அவனுடைய பெற்றோர் ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து ஜெபித்ததுண்டுமோ?'' என்று கேட்டிருக்கின்றான். அதற்கு அவனுடைய பெற்றோர் ''ஆம் மகனே'' என்று அவனுக்குப் பதில் கொடுத்திருக்கின்றனர். சற்று நேர இடைவெளிக்குப் பின்னர் அவன் தனது பெற்றோரிடம் திரும்பவும் ''நீங்கள் என்னை ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து ஜெபித்திருப்பீர்கள், அதை நான் ஒத்துக் கொள்ளுகின்றேன். ஆனால், தேவனுடைய சுவிசேஷத்தை உலகத்தினருக்கு அறிவிக்கும் ஒரு பிரசங்கியாக நான் மாறவேண்டும் என்று நீங்கள் எனக்காக ஜெபித்தீர்களா? '' என்று கேட்டுள்ளான். அதற்கு அவனுடைய பெற்றோர் ''இல்லை'' என்று சொல்லவே அவன் அந்தக் கூட்டத்தில் அழுது கொண்டே ''நான் பெரியவனாக வளர்ந்த பின் நான் ஒரு பிரசங்கியாக மாறுவேன். நீங்கள் என்னை அந்த குழந்தைப் பருவ ஒப்புக் கொடுத்தலின் போது கட்டாயம் செல்வின் குயிஸ் உடைய அங்கிள் ஜெபித்தது போல எனக்காக ஜெபித்திருக்க வேண்டும்'' என்று துக்கத்துடன் சொன்னானாம்.

கூட்டம் முடிந்த பின்னர் அந்தப் பையனின் பெற்றோர் அவனை என்னண்டை அழைத்து வந்து ''ஆண்டவர் தங்கள் மகனை ஒரு பிரசங்கியாக வரும் காலங்களில் மாற்றும்படியாக'' என்னை ஜெபிக்கக் கேட்டார்கள். நான் சற்று நேரம் அமைதியாக இருந்த பின்னர் எனது கரங்களை அவனின் தலையில் வைத்து ஜெபித்தேன். அவனுடைய பரிசுத்த வாஞ்சையை தேவ ஆவியானவர் நிறைவு செய்யப் போவததாக என் உள்ளத்தில் உணர்த்தவே நான் மிகுந்த ஆர்வத்தோடு அவனுக்காக ஜெபித்தேன். நான் ஜெபித்து முடிக்கவும் அவனுடைய முகத்தில் ஒரு அசாதாரண தேவப் பிரசன்னத்தின் ஒளி இருப்பதைக் காண முடிந்தது. கர்த்தருக்கே மகிமை. நிச்சயமாகவே ஆண்டவர் அந்த மகனை பின் நாட்களில் தம்முடைய வல்லமையான பாத்திரமாக எடுத்துப் பயன்படுத்துவார் என்பதில் எனக்கு எந்த ஒரு சந்தேகமுமே கிடையாது.

எனது குழந்தைப் பிராய நினைவுகள்

எங்கள் கிராம மக்கள் நிலக்கரி தோண்டி எடுக்கும் வேலையிலேயே ஈடுபட்டிருந்தனர். அந்நாட்களில் சுரங்கத் தொழிலாளிகளுக்கு குறைவான சம்பளம் கொடுக்கப்பட்டபடியால் தொழிலாளிகள் அதை எதிர்த்து ஒரு பெரிய வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். அதின் காரணமாக அம்மக்கள் பெரிதும் கஷ்டப்பட்டனர். அந்த நாட்களில் பணத்தைக் காண்பது என்பது அபூர்வமாக இருந்தது. குடும்பங்களில் வறுமை, வியாகுலம், துயரங்கள் இருக்கவே செய்தது. ஒரு கோடை காலத்தில் எங்கள் சிறிய கிராம மக்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து பக்கத்து ஊரிலுள்ள ஐஸ் கிரீம் விற்கும் மனிதனை எங்கள் ஊருக்கு அதைக் கொண்டு வரவேண்டாம் என்று சொல்லி தடுத்து நிறுத்திவிட்டார்கள். காரணம், கிராமத்துக் குழந்தைகள் அதை வாங்க இயலாததால் அவனுடைய ஐஸ் கிரீமைப் பார்த்து ஏக்கம் அடைவார்கள் என்பதற்காகத்தான். பிள்ளைகள் தங்கள் சப்பாத்துக்களின் கிழிந்த ஓட்டைப் பகுதியை காகித அட்டையை வைத்து மறைத்துக் கொண்டனர். அந்த நாட்களில் எங்கள் வீட்டில் நாங்கள் சாப்பிட போதுமான ஆகாரம் இருக்காது. பிள்ளைகளாகிய நாங்கள் எங்கள் வயிறு திருப்தியாகச் சாப்பிட மேஜையில் ஆகாரம் இல்லாத வறுமை நிலையிலும் எனது தகப்பனார் நாங்கள் ஆகாரம் சாப்பிடுவதற்கு முன்னர் எங்களுக்கு முன்பாக ருசி நிறைந்த விதவிதமான ஆகார வகைகள் ஏராளமாகக் குவிந்து இருப்பதைப் போன்ற தேவ அன்பின் மன நிறைவுடன் அன்பின் ஆண்டவருக்கு இரு கரங்குவித்து நன்றி துதி செலுத்துவார்கள். அல்லேலூயா.

எனது 5 ஆம் பிறந்த நாளில் ஃபாச்சர் என்ற இடத்திலுள்ள பள்ளிக்கூடத்தில் எனது பெற்றோர் என்னைச் சேர்த்தார்கள். எனது தாயார் என்னை பள்ளிக்கூடத்தின் முகப்பு வாயிலில் விட்டுவிட்டுச் சென்றுவிடுவார்கள். அவர்கள் போனதும் திரும்பவும் அவர்கள் வந்து என்னை வீட்டிற்கு அழைத்துச் செல்லுவார்களா என்ற சந்தேகத்தில் நான் அழுவேன். அந்தப் பள்ளியை நான் அதிகமாக நேசித்தேன். மலை உச்சியிலுள்ள எனது வீட்டிலிருந்து தினமும் இரண்டரை மைல் தூரம் நான் நடந்து அந்தப் பள்ளிக்கு வரவேண்டும். அப்படி நான் நடந்து வந்து படிப்பதை பெரிய கஷ்டமாக நான் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், குளிர் கால மாதங்களில் குறிப்பாகப் பனிப்பொழிவுள்ள நாட்களில் நான் மிகவும் கஷ்டப்பட வேண்டியதாகவிருந்தது. பிள்ளைகளாகிய நாங்கள் பள்ளிக்குச் செல்லும்போது கர்த்தருடைய ஜெபத்தை எங்கள் வேல்ஸ் மொழியில்

சொல்லிவிட்டே செல்ல வேண்டும். அப்படியே நாங்கள் அந்த நாளை முடிக்கும்போதும் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லியே நித்திரைக்குச் செல்ல வேண்டும். ஃபாச்சர் கிராமத்தில் ஒரு பள்ளிக்கூடமும், நான்கு சிறிய தேவாலயங்களும், ஒரு ரயில்வே நிலையமும், ஒரு மதுபானக்கடையும் இருந்தது. எனது குழந்தைப் பருவ நினைவுகளில் ஒரு முக்கியமான நினைவு என்னவெனில் எனது தகப்பனார் தனது ஜெப வேளையில் நீண்டதொரு மிஷனரிகளின் பட்டியலை வைத்து அவர்களுக்காக ஜெபித்து வந்ததுதான். அந்தச் சமயத்தில் இந்தியாவிலிருந்து யோனத்தான் எட்வர்ட்ஸ் என்ற ஒரு சுவிசேஷகர் எங்களுடைய தேவாலயத்திற்கு வந்து இந்தியாவில் தேவனுடைய சுவிசேஷத்தை அறிவிக்க மிஷனரிகள் அத்தியந்த அவசியம் என்று மனதுருக்கமாகப் பேசியபோது எனது தகப்பனாரும், தாயும் தங்களை அந்த மிஷனரிப் பணிகளுக்கு ஒப்புவித்தனர். பின்னர், அந்த அர்ப்பணிப்பு அந்த நேரம் ஏற்பட்ட ஒரு உந்துதலின் காரணமாக ஏற்பட்டது என்பதை அறிந்து அதைக் கைவிட்டுவிட்டனர்.

எனக்கு 6 வயதான போது எனது பெற்றோர் 100 மைல்கள் தொலைவிலுள்ள பர்மிங்காம் என்ற தொழிற்சாலைகள் நிறைந்த பட்டணத்திற்கு திடீரென இடம் பெயர்ந்தார்கள். தாங்கள் இருந்த இடத்தில் நிலக்கரித் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் தொடர்ந்து நடந்து கொண்டிருந்தபடியினாலும், நிலைமை வர வர மோசமானதாலும் பெற்றோர் இந்த முடிவுக்கு வந்தார்கள். நான் சிறுவனாக இருந்தபோது பர்மிங்காம் பட்டணம் கொஞ்சம் கூட எனக்குப் பிடிக்காது. காரணம், அங்குள்ள ஏராளமான தொழிற்கூடங்கள் எழுப்புகின்ற புகையால் ஆகாய மண்டலம் எப்பொழுதும் கருமை படர்ந்தே காணப்படும். அந்தப் பட்டணத்தில் நாங்கள் 3 வருட காலம் மட்டுமே வாழ்ந்தோம். அந்தக் குறுகிய காலத்தில் அந்தப் பட்டணத்தைக் குறித்து ஏற்பட்ட நினைவுகள் எனக்கு அதிகமாக ஒன்றுமில்லை. எனினும், ஒரு சம்பவத்தைக் குறித்த நினைவு இன்றும் எனக்கு பசுமையாக உள்ளது.

நாங்கள் பர்மிங்காம் பட்டணத்திற்குக் குடிபெயர்ந்த சொற்ப நாட்களில் நாங்கள் தங்கியிருந்த இடத்திலுள்ள பாப்திஸ்து சபையில் சேர்ந்து நாங்கள் அதின் அங்கத்தினர்களானோம். அந்தச் சபையின் கிறிஸ்தவர்கள் எனது தகப்பனாரை நல்லதொரு பிரசங்கியாராகக் கண்டு கொண்டு மற்ற பாப்திஸ்து சபைகளில் ஓய்வு நாட்களில் பிரசங்கம் செய்யும்படியாகக் கேட்டுக் கொண்டனர். குருவானவர்களுக்கு சம்பளம் கொடுத்து அவர்களை

சபைகளை கவனிக்கச் சொல்ல பண வசதி இல்லாதபடியால் அந்த ஏற்பாட்டைச் செய்திருந்தனர். அப்படியே எனது தகப்பனார் ஓய்வு நாட்களில் மற்ற பாப்திஸ்து ஆலயங்களில் சென்று பிரசங்கித்து வந்தார்கள். அவர்கள் சென்ற ஒரு குறிப்பிட்ட ஆலயத்தில் 2 விருத்தாப்பிய பாட்டிமார்கள் ஆலயத்தின் முன் ஆசனத்தில் அமர்ந்திருப்பார்கள். எனது தந்தை பிரசங்கிக்க ஆரம்பித்த உடனே அவர்கள் இருவரும் ஆழ்ந்த நித்திரையில் மூழ்கிவிடுவார்கள். கதைகளைத் தத்ரூபமாகச் சொல்லுவதில் எனது தகப்பனார் தலை சிறந்ததோர் மனிதராவார். ஒரு ஓய்வு நாளில் நானும் எனது தகப்பனாரும் அதே தேவாலயத்திற்குச் சென்றோம். ஆலயத்துக்குள் நாங்கள் நுழையும்போதே எனது தகப்பனார் என்னிடம் ''இன்றைக்கு அந்த பாட்டிமார்கள் பிரசங்க சமயத்தில் தூங்கும் பட்சத்தில் அவர்களுக்கு நல்லதொரு ஆச்சரியம் அவர்களுக்குக் காத்திருக்கின்றது'' என்று சொன்னார்கள். அந்தப்படியே எனது தகப்பனார் பிரசங்க பீடம் ஏறி பிரசங்கம் செய்ய ஆரம்பித்த உடனேயே அந்தப்பாட்டிமார்கள் இருவரும் நன்கு தூங்குவிட்டனர். அந்த வேளை தனது பிரசங்கத்தில் வரக்கூடிய ஒரு கதையை எனது தகப்பனார் இப்படிச் சொன்னார்கள். ஒரு பெண் தனது வீட்டின் அறையில் படுத்திருந்தபோது எதிர்பாராதவிதமாக நெருப்பு அவள் வீட்டைச் சூழ்ந்து கொண்டுவிட்டது. தன்னைக் காப்பாற்றும்படியாக அவள் தனது அறையின் தெரு ஜன்னலைத் திறந்து தெருவில் சென்று கொண்டிருந்த மக்களைப் பார்த்து ''நெருப்பு'' ''நெருப்பு'' என்று அவள் பலமாகக் கூக்குரலிடத் தொடங்கினாள். அவள் எப்படி சத்தமிட்டிருப்பாள் என்பதை சபையினருக்கு விளக்கமாக காண்பிக்க எனது தகப்பனார் தனது இரண்டு உள்ளங்கைகளையும் ஒன்று சேர்த்து ஒரு கூடு போல அமைத்து அந்த உள்ளங்கைக்குள் ''நெருப்பு'' ''நெருப்பு'' என்று ஒரு பெரிய சத்தமிட்டார்கள். அவ்வளவுதான், எனது தந்தைக்கு முன்னால் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த அந்த இரு பாட்டிமாரும் திடு திப் என்று அலறி அடித்துக் கண்விழித்தார்கள். அந்த நாளிலிருந்து அவர்கள் ஆலயத்தின் ஆராதனை சமயத்தில், விசேஷமாக எனது தகப்பனாரின் பிரசங்கத்தில் தூங்கியிருப்பார்கள் என்று நான் நிச்சயமாக நினைக்கவில்லை.

இரண்டாம் உலகப்போர் தொடங்கிய சமயமான 1939 ஆம் வருடம் பர்மிங்காம் பட்டணத்திலிருந்து என்னுடைய தாத்தா, பாட்டி வசித்து வந்த கிராமத்திற்கு அருகிலுள்ள ஃபாச்சருக்கே நாங்கள் திரும்பி வந்து ஒரு வீட்டை வாடகைக்கு அமர்த்தி அதில் குடியிருந்தோம். மீண்டும் நான் பிறந்த கிராமத்திற்கு அருகிலுள்ள ஃபாச்சர் என்ற இடத்திற்குத் திரும்பி வந்து

சேர்ந்தது எனக்கு மிகுந்த சந்தோசத்தை அளித்தது. அங்கு எனக்கு நிறைய நண்பர்கள் இருந்தனர். சூரியன் அஸ்தமனமானதும் தெருவின் உச்சியில் இருந்த ஒரு பிரகாசமான விளக்கு கம்பத்தின் வட்ட வடிவ ஒளியின் அடியில் நண்பர்களாகிய நாங்கள் ஒன்று சேர்ந்து விளக்கின் ஒளியில் நீண்ட நேரம் விளையாடிக் கொண்டிருப்போம். பின்னர் எனது நண்பர்கள் ஒவ்வொருவரின் பெற்றோர் அவர்களை படுக்கைக்கு வரும்படியாக அழைக்கவே ஒவ்வொருவராக நாங்கள் அனைவரும் கலைந்து செல்லுவோம்.

நானும் எனது நண்பர்களும் ஃபாச்சரிலுள்ள ரயில்வே நிலையத்தின் தண்டவாளத்தில் ஒரு பென்னி நாணயத்தை வைத்துவிட்டு ஒரு ரயில் வண்டி அதைக் கடந்து செல்லும் வரைக் காத்திருப்போம். ரயில் போனதும் நாங்கள் வைத்த அந்த ஒரு பென்னி நாணயம் ஓக் மரத்தின் மிகவும் மெல்லிய அகலமான இலையைப்போன்று நசுக்கப்பட்டிருப்பதைக் கண்டு பெரும் வியப்படைவோம்.

ஃபாச்சர் கிராமத்தின் ஜனத்தொகை 2000 க்கும் குறைவாகவே இருக்கும். கிராமத்தின் பெரும்பாலான மக்கள் நிலக்கரி சுரங்கத் தொழிலாளிகளேதான். அந்தக் கிராம மக்கள் அனைவரும் மிகவும் நெருக்கமாகப் பின்னிப் பிணைக்கப்பட்டிருந்தனர். எனது இளம் பிராயம் முழுவதும் ஒரு கிராமத்தில் செலவிடப்பட்டிருப்பதற்காக நான் என் ஆண்டவருக்கு துதி செலுத்துகின்றேன். காரணம், அந்தக் கிராம வாழ்வில் நான் தனிமையாக இல்லை, மற்றொருவரை சார்ந்திருக்கின்றோம் என்ற ஒரு பாச உணர்வின் பிணைப்பு என்னில் ஏற்பட்டது. எல்லாவற்றிற்கும் மேலாக இந்தக் கிராமத்தில்தான் நான் ஆண்டவர் இயேசுவின் சீடனாக மாற தீர்மானம் எடுத்தேன். அந்த தேவ தீர்மானம் ஏதோ ஒரு சொற்ப காலத்திற்காக அல்ல, என்று நிலைத்திருக்கக்கூடிய முடிவில்லாத நித்தியத்திற்கான தீர்மானமாக அது அமைந்தது. அல்லேலூயா.

நம்முடைய வாழ்வின் பலதரப்பட்ட அநேக நினைவுகளில் நமது குழந்தைப் பருவ நினைவுகள் என்றும் நீங்காமல் நம்மில் நிலைத்திருக்கக் கூடியவைகளாகவிருக்கின்றன. நாம் நமது பிறந்த வீட்டைவிட்டு ஒருக்கால் கடந்து வெளியே வந்துவிட்ட போதினும் அந்த வீட்டின் நினைவுகள் நம்மோடேயே என்றும் ஒட்டிக் கொண்டிருக்கின்றது. ''நம்முடைய வாழ்க்கையின் காரை எத்தனை வேகமாகவும், எத்தனை தூரம் வரை நாம் ஓட்டிக்கொண்டு வந்திருந்தாலும் நம்முடைய வாழ்வின் நினைவுகளிலிருந்து நாம் ஒருக்காலும் தப்பிச் செல்லவியலாது. அந்த நினைவுகள் வாழ்க்கை என்ற

காரின் பின் கண்ணாடியில் துலாம்பரமாக எப்பொழுதும் தெரிந்து கொண்டேதானிருக்கும்'' என்று மால்கோம் என்ற பிரசித்திபெற்ற எழுத்தாளன் கூறுவதை நான் கேட்டிருக்கின்றேன். எத்தனை உண்மையான வார்த்தைகள் அவைகள்!

நான் பிறந்த என்னுடைய சிறிய கிராமத்தில் எங்களுடைய குடும்பத்தின் அநேக அன்பான மக்கள் இப்பொழுது இல்லாத போதினும் நான் தெற்கு வேல்ஸ்க்கு எப்பொழுதாவது பிரசங்கம் செய்யப் போனால் அல்லது அங்குள்ள எனது தாயார் அல்லது சகோதரியைக் காணக் காரில் செல்லும் போது எனது காரை எனது கிராமத்திற்கு ஓட்டிச் சென்று அதை மலை உச்சியில் கொண்டு போய் நிறுத்தி வைத்துவிட்டு, காரிலிருந்து இறங்கி நான் சிறு பிராயத்தில் வாழ்ந்த எனது கிராமத்தை நீண்ட நேரம் என் கண்கலங்கப் பார்த்துக் கொண்டேயிருப்பேன். அப்பொழுது எனது குழந்தைப் பருவ நினைவுகள் அலை அலையாக வந்து என் உள்ளத்தில் மோதிக் கொண்டேயிருக்கும்.

நான் 12 வயதுடைய சிறுவனாக இருந்தபோது அந்தக் கிராமத்தில் என் தாத்தா வீட்டில் நிகழ்ந்த பழைய சம்பவங்களை நான் நினைத்துப் பார்ப்பேன். அந்தப் பழைமை நினைவுகளை நான் எப்படி அத்தனை எளிதாக மறக்க முடியும்? அப்பொழுது நிகழ்ந்த சம்பவங்களின் ஊடாகத்தான் நான் எனது எதிர்கால கிறிஸ்தவ வாழ்வின் மாட்சியை உற்று நோக்க முடிந்தது. எனது தாத்தாவும், பாட்டியும் கிராமத்திலுள்ள சிலரை சில முக்கியமான சமயங்களில் தங்கள் வீட்டிற்கு இரவு காலங்களில் விருந்துக்கு வரவழைப்பார்கள். எனது பாட்டி, வீட்டின் எண்ணெய் விளக்கை நன்கு சுத்தம் செய்து எரிய வைப்பார்கள். வீட்டிற்கு வரவழைக்கப்பட்டவர்கள் 15 அடி நீளம் 5 அடி அகலமான பைன் மரத்தால் செய்யப்பட்ட அழகான மேஜையைச் சுற்றிலும் அமர்ந்திருப்பார்கள். மேஜை மீது வேல்ஸ் தேசத்தின் கேக்குகளும், ரொட்டி, வெண்ணெய் தடவப்பட்ட பிஸ்கட்டுகளும், பாலாடைக்கட்டிகளும் வைக்கப்பட்டிருக்கும். அந்தப் பட்சணங்களுடன் ஊற்ற ஊற்றக் குறையாமல் வந்து கொண்டிருக்கும் பெரிய தேநீர் பானக் கெட்டிலும் வைக்கப்பட்டிருக்கும்.

அந்த நீண்ட மேஜையைச் சுற்றிலும் எனது தாத்தாவும், பாட்டியும், கிராமத்திலுள்ள அவர்களுடைய நண்பர்களும், இனஜனபெந்துக்களும் என்ன காரியங்களைக் குறித்துப் பேசுகின்றார்கள் என்று நான் ஆழ்ந்து கவனிப்பேன். அவர்கள் 1904, 1905 ஆம் ஆண்டுகளில் வேல்ஸ் தேசத்தில்

ஏற்பட்ட ஆச்சரியமான எழுப்புதலின் அக்கினியைக் குறித்தே மிகுந்த பக்தி உணர்வோடு பேசிக் கொண்டிருப்பார்கள். வேல்ஸ் நாட்டில் அப்பொழுது ஏற்பட்ட அந்த எழுப்புதலில் பரிசுத்த ஆவியானவர் வல்லமையான கிரியையகளை நடப்பித்தார். அந்த எழுப்புதல் ஆரம்பித்த 6 மாதங்களில் 100,000 மக்கள் தேவனுடைய இரட்சிப்பின் சந்தோசத்தைப் பெற்று கிறிஸ்தவர்களாக மாற்றம் பெறுவதற்கோ அல்லது தங்கள் ஆவிக்குரிய வாழ்வை கர்த்தருக்குள் திரும்பவும் உயிர்ப்பித்துக் கொள்ளுவதற்கோ தேவாலயங்களை நோக்கித் தீவிரித்து வந்தனர். பரிசுத்த ஆவியானவரின் வல்லமை அத்தகையதாகவிருந்தது. சுரங்கத் தொழிலாளிகள் நிலக்கரியைத் தோண்டி எடுப்பதற்காக கூண்டுகளில் பூமியின் மார்பகத்திற்குள் கீழே இறங்கும் முன்னர் கூடி தேவ சமூகத்தில் கண்ணீரோடு ஜெபித்தனர். பூமியின் வயிற்றுக்குள் இருந்து நிலக்கரியைத் தோண்டி எடுத்துக் கொண்டிருக்கும் வேளையிலேயே சுரங்கத் தொழிலாளிகள் தேவன் தங்களுடைய பாவங்களிலிருந்து தங்களை இரட்சிக்கும்படியாகக் கதறி அழுது ஜெபித்தார்கள். அவர்கள் தங்கள் பகற்கால சுரங்க வேலைகளை முடித்துவிட்டு மாலையில் பூமியின் மேற்பரப்பிற்கு வரும்போது நிலக்கரி தூசி படிந்த அவர்களுடைய கருமை நிற முகத்தில் அவர்கள் தேவனை நோக்கி கதறி அழுத கண்ணீரின் கோடுகள் தெளிவாகக் காணப்பட்டன.

வேல்ஸ் நாட்டுப் பள்ளிகளில் படிக்கும் சிறு பிள்ளைகளும் கூட தங்களுடைய வகுப்பில் தங்களுடைய சிறிய டெஸ்க்கிற்கு முன்பாகத் தங்கள் தலையைத் தாழ்த்தி அழுதார்கள். அவர்கள் அழுவதைக் கண்ட ஆசிரியை அதின் காரணத்தைக் கேட்டபோது ''டீச்சர், நான் இரட்சிக்கப்பட விரும்புகின்றேன்'' என்று சொன்னார்கள். மதுபானக் கடைகள் மூடப்பட்டன. கிறிஸ்தவக் கூட்டங்களைப் பகடி செய்து, அவைகளைப் பரியாசம் செய்ய வந்த குண்டர்களும், குடிகாரர்களும் அந்தக் கூட்டத்தில் அமர்ந்து தங்களை அறியாமல் உள்ளம் உருகி அழுது ஜெபிக்கத் தொடங்கினார்கள். மிகுந்த பலசாலிகளான மனிதர் கூட சிறு குழந்தைகளைப்போல உட்கார்ந்து தங்களுடைய பாவங்களுக்காக மனங்கசந்து அழுதார்கள். விளையாட்டு மைதானங்களில் பொழுதுபோக்கிற்கான விளையாட்டுகள் நடைபெறவில்லை. மக்கள் தங்களுடைய பழைய கடன்களை எல்லாம் திரும்பச் செலுத்தினார்கள். குற்றங்கள், தீச்செயல்கள் நடைபெறவில்லை. அதின் காரணமாக நீதிமன்றங்களில் வழக்குகள் வராதபடியினால் நீதிபதிகளுக்கு அரசாங்கம் வெள்ளைக் கையுறைகளைக் கொடுத்து அவர்களை சும்மா அமர வைத்தது.

அந்தப் பேராச்சரியமான எழுப்புதலை தேவன் வேல்ஸ் நாட்டில் திரும்பவும் நடப்பிக்கும்படியாக எனது தாத்தா பாட்டியும், அவர்களண்டை வீட்டிற்கு வந்த ஊரிலுள்ள அன்பான தேவ மக்களும் ''தேவனே, உமது கிரியையை திரும்பவும் நடப்பியும், திரும்பவும் நடப்பியும்'' என்று மிகுந்த வியாகுலத்தோடு ஜெபித்தார்கள். அந்தக் காட்சியைக் கண்ட என் உள்ளத்தில் அந்த நாளிலேயே ஒரு பெரிய உணர்த்துதல் ஏற்பட்டது. அந்தப் பரிசுத்த உணர்வே பின் நாட்களில் ''உலக எழுப்புதல் பணி இயக்கத்தை'' (Crusade for World Revival) நான் தேவகிருபையால் தோற்றுவிக்க ஏதுவாகவிருந்தது.

என் இளவயதின் பாவங்களை நினையாதேயும்

மாதத்தின் 2 ஓய்வு நாட்களில் எனது பெரியப்பா டேவிட் தாமஸ் அவர்கள் எங்கள் ஊர் தேவாலயத்தில் பிரசங்கிப்பார்கள். அவர்கள் சற்று குள்ளமாக இருப்பார்கள். அவர்கள் என்ன பிரசங்கித்தார்கள் என்பது எனது நினைவில் இல்லை. ஆனால் அவர்களுடைய பிரசங்கம் எனக்கு நன்கு பிடிக்கும். தனது பிரசங்கத்தில் எந்த ஒரு வேடிக்கை வார்த்தையையோ அல்லது எல்லாரும் சிரிக்கக்கூடிய கதைகளையோ அவர்கள் ஒருக்காலும் சொல்லவே மாட்டார்கள். தனது பிரசங்க செய்தியில் மிகவும் கண்ணும் கருத்துமாகவிருப்பார்கள். அடிக்கடி அவர்கள் என்னைச் சந்தித்து கர்த்தருக்கு என்னை ஒப்புக்கொடுக்கும்படியாகக் கெஞ்சிக் கேட்பார்கள். அப்பொழுதெல்லாம் நான் அவர்களுடைய அந்த வார்த்தையை அல்லத்தட்டிவிடுவேன். சில சமயங்களில் அவர்கள் என் தலைமேல் கை வைத்து ''தேவன் உன்னை ஒரு நாள் ஒரு பெரிய பிரசங்கியாராக மாற்றப்போகின்றார் என்று நான் விசுவாசிக்கின்றேன்'' என்று சொல்லுவார்கள். அந்த வார்த்தை எனக்குக் கொஞ்சம் கூட பிடிக்காது. நான் ஒரு நடிகனாக மாறவேண்டும் என்று இருக்கும்போது பிரசங்கி பட்டம் நமக்கு என்னத்திற்குத் தேவை என்று நான் எனக்குள் எண்ணுவேன்.

எனது பெரியப்பா டேவிட் அவர்களின் மனைவி ரோஸ் அவர்களை எனக்கு ரொம்ப பிடிக்கும். ஏற்கெனவே நான் எழுதினது போல அவர்கள் எனது தாயாரின் உடன் பிறந்த சகோதரி ஆவார்கள். சரியான வாயாடி, முழுமையான உலகமும் கூடத்தான். ஆலயத்தில் என்னுடைய பெரியப்பா தன்னுடைய பிரசங்கத்தை சற்று நீட்டிக்கொண்டு போனால் போதும், எனது பெரியம்மா ரோஸ் சபை மக்களுக்குத் தெரியாமல், மிகவும் தந்திரமாக தனது கடிகாரக் கரத்தை சற்று உயர்த்தி பெரியப்பா கண்டுகொள்ளும்படியாக தனது கைக்கடிகாரத்தை சுட்டிக் காண்பிப்பார்கள். அவ்வளவுதான், பிரசங்கம்

எத்தனை விறுவிறுப்புடனும், வேகமாகவும் சென்று கொண்டிருந்தாலும் பெரியப்பா திடுதிப் என்று தனது தேவச் செய்தியை முடித்துக் கொண்டு பிரசங்க பீடத்திலிருந்து இறங்கிவிடுவார்.

நான் எனது வாழ்க்கையில் எத்தனையோ தவறுகள் செய்திருந்தபோதினும் நான் எனது தீய வாழ்க்கையை எனது அன்புள்ள பெற்றோருக்காக கட்டாயம் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று தீர்மானங்கள் எடுத்த நாட்களும் இருக்கவே செய்தது. நான் எனக்குள்ளாக இனி சத்தியம் செய்யமாட்டேன், இனி புகை பிடிக்கமாட்டேன், திருடமாட்டேன், பொய் பேச மாட்டேன், நல்ல ஒழுக்கமாக நடப்பேன் என்று தீர்மானித்த போதினும் எனது நண்பர்களுடைய கூட்டமைப்பில் நான் சேர்ந்துவிட்டால் உடனே நான் எனது பழைய பாவ நிலைக்குத் திரும்பிவிடுவேன்.

மாதத்தின் மற்ற 2 ஓய்வு நாட்களிலும் வெளியிலிருந்து வரும் பிரசங்கிமார்கள் எங்கள் ஊர் ஆலயத்தில் பிரசங்கிப்பார்கள். அந்தப் பிரசங்கிமார்கள் வந்துவிட்டால் வழக்கம் போல அவர்கள் பிரசங்கம் நரக அக்கினியாகவே இருக்கும். அக்கினியும், கந்தகமும் அந்த பிரசங்கங்களில் பற்றி எரியும். அதில் குறிப்பிட்ட ஒரு பிரசங்கியார் எப்பொழுதும் நரகத்தைக் குறித்தேதான் பேசுவார். அதைக் குறித்து நான் தவறாக இங்கு குறிப்பிடவில்லை. அப்படிப்பட்ட நரகப் பிரசங்கிமார்களை இன்று நம்மிடையே நாம் காண்பது அரிதாகவிருக்கின்றது. நமது சபைகளுக்கு அப்படிப்பட்ட தேவ ஊழியர்களே இன்று அத்தியந்த தேவை. அந்தப் பிரசங்கியார், ஒரு திருட்டுக்கூட்டமாக ஆலயத்தின் கடைசிப் பெஞ்சில் அமர்ந்திருக்கும் வாலிபப் பையன்களான எங்களைப் பார்த்து ''வாலிபரே, நீங்கள் இந்தக் கிருபையின் காலத்தில் மனந்திரும்பாத பட்சத்தில் எரிநரகத்தில் கண்விழிப்பீர்கள் என்பதை உங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறுவார். அந்தக் காலத்தில் பெண்கள் தங்கள் தலையில் பெரிய தொப்பி அணிந்து ஆலயத்துக்கு வருவார்கள். மேற்கண்ட நரகப் பிரசங்கியார் அந்தப் பெண்களை நோக்கிப் பேசும் கண்டிப்பான வார்த்தைகளைக் கேட்க மனமற்று அவர்கள் தங்கள் தொப்பியின் முகப்புக்குள் தங்கள் முகத்தை மறைத்து பிரசங்கியாரின் பார்வையிலிருந்து தப்பிக்கொள்ளுவார்கள்.

எங்கள் ஊர் ஆலயத்தில் நான் கலந்து கொண்டு வந்த ஓய்வுநாள் பள்ளி வகுப்பிலிருந்து எனது கீழ்ப்படியாமை மற்றும் ஒழுங்கீனமான துஷ்டத்தனம் காரணமாக ஒரு மாத காலம் நான் நீக்கம் செய்யப்பட்டிருந்தேன். அதின் காரணம் இதுவேதான். வாரந்தோறும் ஓய்வு நாள் பள்ளி வகுப்புகள்

ஆரம்பமாவதற்கு முன்பு எல்லா பிள்ளைகளும் ஒன்று கூடி சில பல்லவிகளைப்பாடி ஜெபித்து, அதன் பின்னர் எங்கள் வயதுக்குத்தகுந்தவாறு அந்தந்த ஓய்வு நாள் வகுப்புக்குச் செல்லுவோம். அப்படி ஒரு ஓய்வு நாளில் ஓய்வு நாள் பள்ளிப் பிள்ளைகளாகிய நாங்கள் எல்லாரும் ஒன்று கூடி பல்லவிகளைப் பாடிக் கொண்டிருக்கும் வேளையில் நான் எனது குறும்புத்தனத்தில் எனது இருக்கையை ஓய்வு நாள் பள்ளி ஆசிரியை பக்கமாக நகர்த்தி அருகில் வந்து ஒரு பாட்டுப் புத்தகத்தின் தாட்களை துண்டு துண்டாகக் கிழித்து ஒருவருக்கும் தெரியாமல் அந்த சிறிய காகிதத் துண்டுகளை அவர்கள் கழற்றி வைத்திருந்த தொப்பியின் மறைவான விழிம்புக்குள் போட்டேன். பாடல் புத்தகத்தின் அநேக தாட்களை நான் கிழித்து இந்தவிதமாகச் செய்துவிட்டேன். ஆலயத்துக்குள் நடந்த ஓய்வு நாள் பள்ளி வகுப்பிற்குப் பின்னர் அந்த ஆசிரியை ஆலய ஆராதனை முடிந்து வெளியே செல்லும்போது சற்று பலமான காற்று வீசத்தொடங்கியது. அந்தக் காற்றில் தொப்பியின் மடிப்புக்குள் மறைவாக இருந்த காகிதத் துண்டுகள் கொஞ்சம் கொஞ்சமாகக் காற்றில் பறக்க ஆரம்பித்தது. அதைக் கண்ட ஆலயத்துக்கு வந்த சபை மக்கள் அனைவரும் அந்த ஓய்வு நாள் பள்ளி ஆசிரியைப் பார்த்து பலமாகச் சிரிக்கத் தொடங்கினார்கள். மிகவும் வெட்கப்பட்டுப்போன அந்த ஆசிரியை, இந்த துஷ்டத்தனமான காரியத்தைச் செய்த குற்றவாளி நான் என்பதை உடனே யூகித்துக் கண்டு கொண்டு விரைந்து எங்கள் வீட்டிற்கு வந்து நான் செய்த காரியத்தையும் அதின் காரணமாக இனிமேல் என்னை தனது ஓய்வு நாள் பள்ளியில் அனுமதிக்கப் போவதில்லை என்றும் கோபாவேசத்துடன் கூறினார்கள். அதின் காரணமாக ஒவ்வொரு வாரமும் ஓய்வு நாள் பள்ளி வகுப்புகள் நடக்கும்போது நான் ஆலயத்தில் ஓரிடத்தில் தனியாகவே ஒரு மாத காலம் உட்கார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

எனது 13 வயதுக்கும் 16 வயதுக்கும் இடைப்பட்ட வருடங்களில் என்னில் காணப்பட்டத் தவறான காரியங்கள் எனது பெற்றோருக்கு மிகுந்த துயரத்தைக் கொண்டு வருவதாக இருந்தது. எனது சட்டையில் சிகரெட் புகை நாற்றத்தை கண்டு கொண்ட என் பெற்றோர், நான் எனது ஆவிக்குரிய காரியங்களில் எந்த ஒரு விருப்பத்தையும் காண்பிக்காததைக் குறித்து மிகவும் கவலைப்பட்டனர். ஒரு கோடை கால நாளின் மாலை வேளையில் நான் எனது படுக்கை அறையிலிருந்து எனது சிகரெட்டைப் பற்ற வைத்து புகையை ஜன்னல் வழியாக வெளியே விட்டுக் கொண்டிருந்தேன். அந்தச் சுருள் சுருளான வட்ட வடிவ புகை திரும்பவும் வீட்டுக்குள் வருவதை நான்

அறியாதிருந்தேன். ஆனால், எனது தகப்பனார் அதைக் கண்டு கொண்டு நேராக எனது படுக்கை அறைக்கே வந்து என்னைக் கையும் மெய்யுமாகக் கண்டு பிடித்தார்கள். தனது கோபத்தின் காரணமாக மூர்க்கமாக அவர்கள் என்னை அடித்துத் தண்டிக்காமல் ஒரு தகட்டால் எனது காலில் அழுத்தி கிள்ளிவிட்டார்கள். அந்தத் தகடு எங்கள் வீட்டுச் சமையல் அறையின் சுவரில் ''தேவனே, ஒவ்வொரு மணி நேரமும் நீர் எனக்குத் தேவை'' (I need THEE every hour) என்ற அருமையான ஒரு வாசகத்துக்குக் கீழாகத் தொங்கிக் கொண்டிருக்கும்.

எனது நண்பர்களோடு நான் சேர்ந்துவிட்டால் பெரிய வீர தீர செயல்களை செய்ய வேண்டும் என்று நான் துடிதுடிப்பேன். இதின் காரணமாக நான் ஒரு கேடான காரியத்திலிருந்து மற்றொரு கேடான காரியத்தைச் செய்ய நான் முற்பட்டேன். போன்ற்லாற்றன் என்ற இடத்திலிருந்த நீதிமன்றத்திற்கு முன்னர் நான் அநேக தடவைகள் வேறு காரணங்களுக்காக நின்று கொண்டிருந்தேன். அதை அந்த நீதிமன்றக் காவலர்கள் தவறாகப் புரிந்து கொண்டு எனது பெற்றோரிடம் வந்து அதைக் குறித்து என் மீது குற்றம் சாட்டினார்கள். அந்தக் காரியம் உண்மையில் எனது பெற்றோருக்கு அதிக வேதனையைக் கொடுப்பதாகவிருந்தது. அப்பொழுது அவர்கள் ''நீ ஏன் இந்தக் காரியங்களை எல்லாம் செய்கின்றாய்? உன் இருதயத்தை ஆண்டவர் இயேசுவுக்கு ஒப்புக் கொடுக்கமாட்டாயா? அப்படியானால், அவர் உனக்கு உனது எல்லா தீய காரியங்களையும் மேற்கொள்ளத் தேவையான பெலனை உனக்குக் கட்டாயம் தருவார்'' என்று சொன்னார்கள்.

நான் இளைஞனாக இருந்தபோது எனது வாழ்வின் ஒரே குறிக்கோள் இந்த உலகம் அளிக்கும் அனைத்து பாவ இன்பங்களால் என்னை திருப்தியாக்குவதாகவே இருந்தது. ஆனால், எனது இருதயத்தின் தாகத்தை உலகத்தின் பாவ இன்பங்கள் ஒருக்காலும் திருப்தி செய்ய முடியாது என்பதைக் கண்டு கொள்ள எனக்கு வெகு காலம் பிடிக்கவில்லை.

தேவன் என்னைக் கிருபையாகச் சந்தித்தது

நான் எனது 16 ஆம் பிறந்த நாளை ஆரம்பிப்பதற்கு சற்று முன்பதாக தேவன் எனது வாழ்வில் மிகுந்த வல்லமையோடு கிரியை நடப்பிக்கத் தொடங்கினார். 1944 ஆம் ஆண்டின் ஆரம்ப மாதம் ஒன்றில் ஒரு நாள் இரவு வேளை நான் எங்கள் ஊரிலுள்ள ஒரு நடன அரங்கத்தில் நடந்து

கொண்டிருந்த நடனத்தைக் கண்டு களிப்பதற்காக இருள் நிறைந்த தெருக்களின் வழியாக நடந்து சென்று கொண்டிருந்தேன். அப்பொழுது இரவு 8 மணி இருக்கும். நான் சென்று கொண்டிருந்த பாதையில் நாங்கள் செல்லும் ஆலயம் இருந்தது. நான் சென்ற அந்த நேரத்தில் வழக்கமாக அங்கு நடைபெறும் ஜெபக்கூட்டம் நடந்து கொண்டிருந்தது. இருளான அந்த நேரத்தில் நான் அந்த ஆலயத்தைக் கடந்து சென்று கொண்டிருந்தபோது எனது தகப்பனாருடைய குரல் எனது காதுகளில் தெளிவாக விழுந்தது. அந்தக் குரல் என்னை அப்படியே தடுத்து நிறுத்தியது. ஆம், அந்த ஆலயத்திலிருந்து எனது தகப்பனார் எனது மனந்திரும்புதலுக்காக தேவனிடம் உள்ளம் உருகி அங்கு நடந்து கொண்டிருந்த ஜெபக்கூட்டத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தார்கள். எனது பக்தியுள்ள தகப்பனார் எங்கள் வீட்டிலும் பல தடவைகள் எனது மனந்திரும்புதலுக்காக ஜெபிப்பதை நான் பார்த்திருக்கின்றேன். ஆனால், அந்த நாளில் அந்த ஆலயத்தில் அவர்கள் மிகவும் வித்தியாசமான விதத்தில் வியாகுலப் புலம்பலோடு எனக்காக ஜெபிப்தை நான் கவனித்தேன். அந்த உருக்கமான ஜெபம் என் உள்ளத்தை ஊடுறுவிச் சென்றதுடன் என்னை அந்த இடத்திலேயே அது அப்படியே தடுத்து நிறுத்தவும் செய்தது. இனி நான் என்ன செய்வது?

நான் ஆலயத்துக்குள்ளாகத் துரிதமாகச் சென்று எனது பாவங்களை அறிக்கையிட்டு இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும்படியாக எனக்குள்ளிருந்து ஒரு குரல் பேசியது. அதற்கு எதிர்மாறாக மற்றொரு குரல் அந்த இடத்தில் அப்படியே கொஞ்ச நேரம் நின்று காத்திருந்து அந்தப் பரிசுத்த உணர்வு என்னைவிட்டுக் கடந்து செல்லும் வரை பொறுமையாக இருக்கச் சொன்னது. நான், சாத்தானுடைய அந்த ஆபத்தான குரலுக்கே செவிசாய்த்து அந்த பரிசுத்த நினைவு என் உள்ளத்திலிருந்து கடந்து சென்றதன் பின்னர் நான் அந்த ராக்காலத்தில் நடன அரங்கத்திற்குச் செல்லத் தொடங்கினேன். நான் அந்த நடன அரங்கத்திற்குச் சென்றதும் என்னில் ஏதோ மாற்றம் ஏற்படுவதை நான் அறிந்தேன். அந்த நடன அரங்கத்தின் ஒளி விளக்குகள் எல்லாம் ஒளி மங்கி எரிவதைக் கண்டேன். பற்பலவிதமான இசைக் கருவிகளின் தாளங்களோடு அங்கு பாடப்பட்ட பாடல்களில் ஏதோ ஒன்று இல்லாதிருப்பதை நான் கவனித்தேன். அந்த முழு நடன அரங்கத்தில் அப்பொழுது நடந்து கொண்டிருந்த அனைத்து நிகழ்ச்சிகளும் ஒரு தலை கீழ் மாற்றத்துடன் எனக்கு எந்த ஒரு பாவ சந்தோசத்தையும் கொடுக்க முடியாதவைகளாகத் தென்பட்டது. தேவன் என்னை அழைப்பதால் அவைகள் எல்லாம் எனக்கு அர்த்தமற்றவைகளாகத் தெரிந்தன.

அதைத் தொடர்ந்து வந்த வாரங்கள் எனக்கு இன்னும் கடினமானதாகத் தெரிந்தது. உலகத்தின் உல்லாசங்களுக்கும், அவைகள் அளிக்கும் இன்பங்களுக்கும் நான் எத்தனை அதிகமாக என்னை ஒப்புவித்தேனோ அத்தனைக்கு அதிகமாக நான் நிர்ப்பந்தனாக என்னைக் கண்டேன். அவைகள் எதுவும் என்னை திருப்தி செய்யத் திராணியற்றவைகளாகக் காணப்பட்டன. ஏமாற்றுதல், திருடுதல், பொய் பேசுதல், சத்தியம் செய்தல், புகைப்பழக்கம், சூதாட்டம், நடன அரங்கம், கால்பந்து, நீண்ட வட்ட வடிவ கால் பந்து விளையாட்டு இப்படிப் பற்பலவிதமான உலக உல்லாசங்களுக்கு நான் கடந்து சென்று கொண்டிருந்தாலும் அவைகள் எதுவும் முந்தைய நாட்களைப் போல என்னை இப்பொழுது பரவசப்படுத்தக் கூடாதவைகளாகக் காணப்பட்டன. இப்படி நான் பல வாரங்களாக பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்தேன். இராக்காலங்களில் நான் கண்விழித்து என்னில் நடந்து கொண்டிருக்கும் விந்தையான மாற்றங்களைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

நான் இரட்சிப்பின் பாத்திரமானது

1944 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் ஒரு ஓய்வு நாள் இரவு நான் எனது பெற்றோருடன் ஆலயத்துக்குச் சென்றேன். அன்று மழை கொட்டு கொட்டெனெக் கொட்டிக் கொண்டிருந்தது. அந்த நாளில் ஆலயத்தில் பிரசங்கிக்கக்கூடிய பிரசங்கியார் மலைக்கு அப்பால் 6 மைல்கள் தொலைவிலிருந்து கடினமாக சைக்கிள் ஓட்டி மலையைக் கடந்து ஆலயத்திற்கு வரவேண்டும். ஆராதனை ஆரம்பமாகிவிட்டது. அவர் அன்று வரக்கூடுமா என்று யாவரும் சந்தேகத்துடன் நினைத்துக் கொண்டிருக்கும் வேளையில்தானே அவர் கால் நடையாக நடந்து வந்து ஆலயத்துக்குள் நுழைந்துவிட்டார். இனி சொல்லவே வேண்டாம், அந்தப் பிரசங்கியார் அடுத்து வரும் 2 மணி நேரங்களுக்கு குறையாமல் ஆராதனையைக் கட்டாயம் நடத்தியே முடிப்பார்.

ஆலயத்தின் கடைசி வரிசை இருக்கைகள் வாலிபர்களுக்கென்றே ஒதுக்கப்பட்டிருக்கும். எனக்கு அருகில் எனது குழந்தைப் பருவ காலத்திலிருந்தே எனது நண்பனான ரோனால்ட் லீவிஸ் என்பவன் அமர்ந்திருந்தான். நாங்கள் சென்ற ஆலயத்தின் மூப்பர்களில் ஒருவருடைய மகனாகவும் அவன் இருந்தான். நாங்கள் இருவரும் நெருங்கிய சிநேகிதர்களாகவிருந்தபோதினும் நான் செய்கின்ற பாவ காரியங்களில் எல்லாம் அவன் கலந்து கொள்ளவே மாட்டான். எனினும் அவன்

ஆண்டவரை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளாதவனாகவே இருந்தான்.

அந்த ராக்காலத்தில் அந்த ஆலயத்தில் நடைபெற்ற ஆராதனை முழுவதும் ஒரு வித்தியாசமான விதத்தில் எனக்குக் காணப்பட்டது. பிரசங்கியாருடைய வார்த்தைகள் எல்லாம் ஒரு நூதனமான விதத்தில் என்னைக் கவர்ச்சிப்பதாகவிருந்தது. அந்தப் பிரசங்கியார் ஒரு வல்லமையுள்ள தேவ ஊழியர் என்று எண்ணுவதற்கில்லை. அவர் ஒரு சாதாரண மனிதர்தான்.

அவரை நான் சில தடவைகள் பார்த்தும், அவருடைய செய்திகளைக் கேட்டும் இருக்கின்றேன். ஆனால், அந்த நாளில் அவருடைய முகம் தேவ வல்லமை பெற்று பிரகாசிப்பதை நான் ஆச்சரியத்துடன் கவனித்தேன். அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகள் கன்மலையை நொறுக்கும் சம்மட்டி போல என் இருதயத்தை ஊடுருவிச் செல்லுவதாகவிருந்தது. அவர் வாயிலிருந்து புறப்பட்ட இந்த வார்த்தைகளை நான் மறப்பதற்கில்லை '' இந்த ராக்கால வேளையே தேவன் உன்னைத் தம்மண்டை இழுக்கும் கடைசி இராக்கால நேரமாகும். இயேசு இரட்சகரண்டை வா. அவர் உன்னுடைய எல்லாப் பாவங்களையும் உனக்கு மன்னித்து உன்னைத் தம்மண்டை இழுத்துக் கொள்ளுவார். அவர் உன்னோடு வாசம் செய்வார். தமக்கு ஊழியம் செய்யத்தக்கதான உன்னத பெலனை அவர் உனக்குத் தருவார்'' என்று அவர் சொன்னார். இதே வார்த்தைகளையும், இதைப்போன்ற அநேக வார்த்தைகளையும் அவர் கடந்த கால நாட்களில் ஆலயத்தில் பிரசிங்கித்திருந்தபோதினும் அந்த நாளில் அந்த வார்த்தைகள் தனது முழு ஆளுகையையும் என்மேல் செலுத்துவதாகவிருந்தது.

''எனக்குள் என்ன நடக்கின்றது? என்று நான் என்னையே நிதானிக்கத் தொடங்கினேன். கண்ணீர் எனது கண்களில் பெருகி நின்றது. வாழ்க்கையில் நான் அழுதது அபூர்வமான காரியமாகும். அதிலும், நான் ஆலயத்தில் எக்காலத்தும் அழுததே இல்லை. பரிசுத்த ஆவியானவருக்கு எதிராக நான் கட்டிய எனது வலுவான கோட்டைகள் எல்லாம் அந்த இராக்காலத்தில் விழுந்து நொறுங்கிப் போவதை நான் கண்டேன். என் இருதயம் நொறுங்குவதை நான் அன்று காண முடிந்தது. தங்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுப்போர் முன் எழுந்து வரலாம் என்று பிரசங்கியார் சொன்னபொழுது முதன் முதலில் நான்தான் எழுந்து முன்னோக்கி நகரத் தொடங்கினேன். அந்த ஆலயம் மிகவும் சிறியதாகும். பின் பக்கத்திலிருந்து முன்னுக்குச் செல்லுவதானால் 10 வினாடி நேரத்துக்குள்ளாகச் சென்றுவிடலாம். ஆனால், அந்த இரவு வேளை நான் முன் நடந்து செல்லுவது என்பது ஒரு மைல் தூரம் நடந்து போவது போல எனக்குத் தெரிந்தது. எனது வாழ்வில் நான் நடந்த மிகவும் ஆச்சரிய அற்புதமான இரட்சிப்பின் நடை அது. நான் முன் எழுந்து வருவதைக் கவனித்த சபையின் குருவானவராகிய எனது பெரியப்பா டேவிட் தாமஸ் அவர்கள் தனது இருக்கையிலிருந்து கீழே இறங்கி வந்து என்னை வரவேற்றார். அவருடைய கரங்கள்தான் நான் சிசுவாக இருந்தபோது தனது மார்போடணைத்து என்னைக் கர்த்தருக்கு ஒப்புவித்தது. அதே கரங்கள்தான் இப்பொழுது என்னை ஆசை ஆவலோடு அரவணைக்க வந்தது. கர்த்தருக்கே மகிமை.

என்னைப்போல ஆண்டவருக்கு தங்களை ஒப்புக்கொடுக்க என் நண்பன் ரோனால்ட் லீவிசும், அவனுடைய சகோதரி மேரியும் இன்னும் என்னோடிருந்த சில வாலிபரும் ஆக மொத்தம் 10 பேர்கள் அந்த இரவு காலத்தில் எங்களைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்தோம். குருவானவராகிய எனது பெரியப்பா அவர்கள் என் அருகில் வந்து ''என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்'' (எரே 33 : 3) என்ற தேவனுடைய வார்த்தையை எனக்கு வாசித்துக் காண்பித்தார்கள்.

நான் அந்த சிறிய ஆலயத்தின் கிராதியிலேயே முழங்காலூன்றி சிசுவைப் போலத் தேம்பித் தேம்பி எனது பாவங்களுக்காக மனங்கசந்து அழுது தேவன் என்னுடைய பாவங்களை எல்லாம் எனக்கு மன்னிக்கும்படியாகக் கெஞ்சி பாவ மன்னிப்பின் நிச்சயத்தையும், தேவ சமாதானத்தையும் பெற்றுக்கொண்டேன். நான் ஆண்டவருடைய

இரட்சிப்பின் பாத்திரமான ஃபாச்சரிலுள்ள சிறிய தேவாலயத்தை நீங்கள் இந்தச் செய்தியில் காணக்கூடும்.

ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்

பொதுவாக ஓய்வு நாள் ஆராதனை முடிந்ததும் ரிம்னி என்ற இடத்திற்குச் சென்று அங்குள்ள பெண் பிள்ளைகளோடு உல்லாசம் பேசி மகிழும் நான் இப்பொழுது வீடு நோக்கி ஓடி வருகின்றேன். நான் இரட்சிப்பின் பாத்திரமாக மாறிவிட்டதை அறிந்த எனது பெற்றோர் கர்த்தரில் களிகூர்ந்தார்கள். நான் அன்று இரவு எனது படுக்கையில் படுத்தவனாக அடுத்து என்ன சம்பவிக்கப் போகின்றதோ என்ற ஆச்சரியத்துடன் எண்ணிக் கொண்டிருந்தேன். பழைய பாவங்களான புகைப் பழக்கம், பொய், தூஷணம், திருட்டு, சத்தியம் செய்தல், சூதாட்டம், நடன அரங்கம் யாவுக்கும் விடைகொடுக்கலானேன். இனி என்னுடைய பழைய பாவ நண்பர்களுக்கு நான் தேவனுடைய பிள்ளையானேன் என்ற செய்தியை எப்படிப் பகிர்ந்து கொள்ளுவது என்று நான் எனக்குள் யோசித்தேன்.

அடுத்த நாள் காலை வேளையில் எனது வேலைக்குச் செல்லுவதற்காக ரயில் நிலையம் சென்றேன். அங்கிருந்து நான் ரயிலைப் பிடித்து 20 நிமிடப் பயணத்திற்குப் பின்னர் டவ்லாஸ் என்ற பட்டணத்தை வந்தடையவேண்டும். நான் ரயில் ஏறினதும் எனது நண்பர்கள் எல்லாரும் வழக்கம்போல தங்களுடைய சிகரெட்டுகளை புகைக்க ஆரம்பித்தனர். நான் புகைக்கும்படியாக எனக்கும் தங்கள் சிகரெட்டுகளைக் கொடுத்தனர். ஆனால் நான் அதை வாங்கிப் புகைக்கவில்லை. நான் புகைக்காத காரணத்தை அவர்கள் என்னிடம் கேட்டபோது முந்தின நாள் இரவு நான் என்னை ஆண்டவருக்கு ஒப்புவித்துவிட்டதைக் கூறினேன். அதைக் கேட்ட அவர்கள் எல்லாரும் என்னை ஏளனம் பண்ணும் விதத்திலான அமைதிக்குள்ளானார்கள். அவர்கள் கிறிஸ்தவ மார்க்கத்தைக் குறித்து என்னுடன் வாக்குவாதம் செய்ய ஆரம்பித்தனர். நான் அவர்களுக்கு எந்த ஒரு பதிலும் பேசாமல் ஜெபித்துக்கொண்டே இருந்தேன். எனினும், முந்தின நாள் இரவு ஆலயத்தில் நடந்த காரியத்தை அவர்களிடம் விளக்கமாகச் சொன்னேன்.

என்னோடு ரயிலில் பிரயாணம் செய்த எனது சில பழைய நண்பர்கள் எனக்கு முன்பாக ஓடிச்சென்று யந்திர தொழிற்கூடத்தில் என்னுடன் வேலை செய்கின்றவர்களிடம் நான் என்னைக் கர்த்தருக்கு ஒப்புவித்துவிட்ட

காரியத்தைக் குறித்துச் சொல்லிவிட்டார்கள். எனவே நான் யந்திர தொழிற்சாலைக்குச் சென்று அதின் கதவைத் திறந்ததும் ''பிரசங்கியாரே, உமக்கு எங்கள் காலை வந்தனம், இன்றைக்கு நீர் எங்களுக்கு என்ன பிரசங்கம் பண்ணுவீரோ?'' என்றும், அவர்களில் சிலர் ''உனக்கு நாங்கள் ஒரு மாத கால தவணை தருகின்றோம்'' என்றும் வேறு சிலர் ''உனக்கு நாங்கள் ஒரு வார கால கெடு தருகின்றோம் அதற்குள் காரியங்கள் எல்லாம் சரியாகி நீ பழைய நிலைக்கு வந்துவிடுவாய்'' என்றும் சொன்னார்கள். நான் என்னைக் கர்த்தருக்கு ஒப்புவித்தவிட்ட காரியத்தையும், இனிமேல் நான் அவர்களுடைய காற் பந்து குழுவில் கூட சேரப் போவதில்லை என்றும் கூறிவிட்டேன். அவர்கள் எல்லாரும் அந்த நாள் முழுவதும் என்னைக் கேலியும், கிண்டலும் செய்து கொண்டே இருந்தனர். அந்த சூழ்நிலையைக் கையாள்வது எனக்குக் கடினமாகவிருந்தபோதினும் கர்த்தர் அதை வெற்றியோடு கடந்து வர உதவி செய்தார். நாட்கள் கடந்து செல்லச் செல்ல நான் எனது பக்தி வாழ்வில் உறுதியாய் நிற்பதையும், ஆவிக்குள்ளாக நான் உற்சாகமாக முன்னேறுவதையும் கண்ட என் நண்பர்கள் என்னைக் கனம்பண்ண ஆரம்பித்தனர். அத்துடன் வாழ்க்கையில் பிரச்சினைகள் நிரம்பிய அவர்கள் தங்களுக்காக ஜெபிக்கும்படியாக என்னைக் கேட்டார்கள். அந்த நாட்களில் நான் எனது ஒவ்வொரு நாளையும் ''ஆண்டவரே, எனக்கு முன்னாலுள்ள உலகத்தை வித்தியாசமான விதத்தில் நீர் என்னைக் காணும்படியாகச் செய்தீர். இந்த உலகம் உமது அதிசயங்களை என் மூலமாகக் காணும்படியாக நீர் என்னை மாற்றி அமையும்'' என்று நான் ஜெபித்து வந்தேன்.

எனது மனந்திரும்புதலின் ஆரம்ப கால வாரங்கள் மிகுந்த ஆனந்த களிகூருதலோடு கடந்து சென்றன. அன்பின் ஆண்டவர் இன்றும் உயிரோடு இருக்கின்றார் என்பதை மற்றவர்கள் எனக்குச் சொன்னதினால் மட்டும் அல்ல, நானே என் இருதயத்தில் அவரைப் பெற்று அவரை அனுபவித்து ஆனந்தித்து வந்தேன். நான் தெருக்களில் நடந்து செல்லும்போது அரூபியான அந்த அன்பின் ஆண்டவரோடு ஐக்கியம் கொண்டு அவரோடு பேசிக்கொண்டே சென்றேன். வேதாகமம் எனது மனந்திரும்புதலின் புதிய வாழ்க்கையில் ஆனந்த இசை முழக்கத்தை ஏற்படுத்தி வைத்தது. அந்த தேவனுடைய வேதாகமத்தை எனக்குக் கிடைத்த ஒரு பெரிய கௌரவ பொக்கிஷமாகத் தூக்கிச் சுமந்து சென்றேன். கர்த்தருடைய வார்த்தையைக் குறித்து அறிய அதிகமாக ஆவல் கொண்டேன். எனக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் அதை ஆசை ஆவலோடு வாசித்து தியானித்தேன். ஆவிக்குரிய காரியங்களில் இன்னும் அதிகமாக வளரவும், அவைகளை அதிகமாகக் கற்றுக்கொள்ளவும் ஆவல்

கொண்டு ஆலய ஆராதனைகளிலும், கன்வென்ஷன் கூட்டங்களிலும், இதர கிறிஸ்தவ பக்தி முன்னேற்ற காரியங்களிலும் நான் தீவிரமாகக் கலந்து கொண்டேன். அதற்காக நான் எங்கள் ஊரில் மாத்திரமல்ல, வெளி ஊர்களுக்கும் போய் அங்கு நடந்த கிறிஸ்தவ நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன்.

அக்கினி அபிஷேகம் பெற்றுக் கொண்டது

எனது மனந்திரும்புதலுக்கு சில வாரங்களுக்குப் பின்னர் நான் முழுமையாக மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டேன். ஆலயத்தில் என்னோடு கூட அந்த இராக்காலத்தில் தங்களைக் கர்த்தருக்கு ஒப்புவித்த அனைவருமே இந்த ஞானஸ்நானத்தை என்னுடன் கூட எடுத்துக் கொண்டார்கள். இந்த ஞானஸ்நானத்திற்குப் பின்னர் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்காக நாங்கள் எங்கள் போதகரால் ஆயத்தம் செய்யப்பட்டோம். இந்த பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறித்து எனக்குள் சந்தேகம் இருந்தமையால் அதைக் குறித்து எனது குருவானவரிடம் கேட்டு எனது சந்தேகத்தை தெளிவுசெய்து கொண்டேன். ஒரு வாரத்தின் கடைசியில் எங்கள் இடத்திலிருந்து 20 மைல்கள் தொலைவிலுள்ள பிரைன்வார் என்ற இடத்தில் ஹேண்டல் பிரைஸ் என்ற சுவிசேஷகர் அக்கினி அபிஷேகத்தைக் குறித்துப் பிரசங்கிக்கின்றார் என்று நான் கேள்விப்பட்டு அவர் கூட்டத்தில் கலந்து கொள்ளுவதற்காக நான் அங்கு சென்றேன். அந்த இளம் சுவிசேஷகர் தனது செய்தியில் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தைக் குறித்தும், அதைப் பெற்றுக் கொள்ளுவதின் அத்தியந்த அவசியம் குறித்தும் தேவனுடைய வசனங்களின் விளக்கங்களோடு மிகுந்த ஆரவாரமாகப் பேசிக் கொண்டிருந்த சமயம் நான் அந்தக் கூட்டத்தின் நடுவில் எழுந்து நின்று '' உங்களுடைய செய்தியின் முடிவு வரை காத்திருக்க என்னால் முடியாது. நான் இப்பொழுதே பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட வாஞ்சித்துக் கதறுகின்றேன். தயவு செய்து எனக்காக உடனே ஜெபியுங்கள்'' என்று கூறினேன். எனது குறுக்கிடுதலின் வார்த்தைகளால் அந்த தேவ மனிதர் கொஞ்சம் கூட கோபம் கொள்ளாமல் மிகுந்த பொறுமையுடன் ''நல்லது, நீங்கள் நிற்கும் இடத்திலேயே அப்படியே உங்கள் கரங்களை உயர்த்திக் கர்த்தரை ஸ்தோத்திரியுங்கள்'' என்று சொன்னார். நான் அவர் சொன்னபடியே செய்தபோது பரத்திலிருந்து வல்லமை இறங்கி வந்து என் ஆத்துமாவை ஆட்கொண்டது. ஒரு பெரிய வல்லமையும், சர்வவல்ல தேவனின் தைரியமும் அந்த நிமிடமே என்னில் பிரவேசித்தது. தேவனுடைய சுவிசேஷத்தை

பெருந்திரளான ஜனத்திற்கு மிகுந்த வல்லமையோடு பிரசங்கிக்கக்கூடிய ஒரு விசேஷித்த தைரியம் என்னில் ஏற்பட்டிருப்பதை என்னால் நன்கு உணர்ந்து கொள்ள முடிந்தது. ஒரு ஆவிக்குரிய தைரியத்தோடு நான் அந்த இடத்திலிருந்து மிகுந்த மகிழ்ச்சியோடு கடந்து சென்றேன். அன்று அந்த இடத்தில் நான் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியானவரின் வல்லமை இன்று வரை என்னில் நிலைத்திருப்பதை என்னால் நன்கு உணர முடிகின்றது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக.

என்னையே சமூலமாய் ஒப்புவித்தேன் நேசருக்காய்

1946 ஆம் ஆண்டு எனது 18 ஆம் வயதில் நான் எங்கள் இங்கிலாந்து தேச மன்னர் ஆட்சியின் கட்டளைப்படி அவரது பட்டாளத்தில் சேர அழைக்கப்பட்டேன். இங்கிலாந்து தேசத்து ஒவ்வொரு குடிமகனும் அந்த 18 ஆம் வயதில் ராணுவ சேவைக்குச் சென்றாக வேண்டும். அந்த நாட்களில் தேசத்தில் நிலக்கரித் தேவை அதிகமாக இருந்தபடியால் ராணுவத்தில் பணி புரியாமல் நிலக்கரிச் சுரங்கத்திலும் அதற்குப் பதிலாக வேலை செய்யலாம் என்ற ஒரு மாற்றுக் கட்டளை இருந்தது. அதின்படி அநேக வாலிபர்கள் பட்டாளத்தில் வேலை செய்வதற்குப் பதிலாக நிலக்கரியைத் தோண்டி எடுக்கும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். கர்த்தருடைய கிருபையால் நிலக்கரிச் சுரங்க வேலைக்காக நான் வெகு தூரம் செல்ல வேண்டிய தேவை எனக்கு ஏற்படவில்லை. எங்கள் வீட்டிலிருந்து 5 மைல் தொலைவிலேயே ஒரு நிலக்கரிச் சுரங்கம் இருந்தது. எனது தாயாருக்கு அந்த நிலக்கரிச் சுரங்கத்திலுள்ள ஒரு நபரைத் தெரியும். அவருடைய உதவியைக் கொண்டு நிலக்கரிச் சுரங்கத்தின் பிரதான என்ஜினியரிடம் பேசி நிலக்கரி சுரங்கத்தில் நிலக்கரியைத் தோண்டி எடுக்கும் எந்திரங்களை செப்பனிடும் பூமிக்கடியிலுள்ள எந்திரத் தொழிற்சாலையில் எனக்கு ஒரு வேலையை வாங்கிக் கொடுத்தார்கள். அதின் காரணமாக நான் மற்ற சுரங்கத் தொழிலாளிகளைப் போல கஷ்டப்பட்டு நிலக்கரியை கூடைகளில் நிரப்பிச் சுமக்க வேண்டிய கடின வேலை எனக்கு கிடைக்கவில்லை. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

நான் அறிய மிகவும் ஆரம்ப நாட்களிலிருந்தே எனது தகப்பனார் தனது மகனாகிய நான் எந்த ஒரு சூழ்நிலையிலும் நிலக்கரி சுரங்கத்தினுள் இறங்கிவிடக்கூடாது என்று தங்கள் முழு இருதயத்தோடு ஆசைப்பட்டார்கள். பொதுவாக நிலக்கரி சுரங்கத் தொழிலாளிகள் அனைவருமே தங்கள் காலத்திற்குப் பின்னர் தங்கள் பிள்ளைகள் தங்களைப்

பின் தொடர்ந்து மரண ஆபத்துக்கள் நிறைந்த நிலக்கரி சுரங்க வேலைகளில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளக் கூடாது என்று மனதார விரும்பினார்கள். நிலக்கரி தோண்டி எடுக்கும் யந்திரங்களை எந்தவிதமாகக் கையாள்வது, அவைகளை எவ்வண்ணமாக பழுது பார்ப்பது போன்ற வேலைகளை கொஞ்ச நாட்களுக்கு எனக்கு பூமியின் மேல் மட்டத்திலிருந்தே கற்றுக் கொடுத்தார்கள். அதின் பின்னர் அந்த யந்திரங்கள் வேலை செய்யக்கூடிய பூமிக்கடியில் என்னை இறக்கினார்கள். நான் நிரந்தரமாக பூமிக்கடியில் உள்ள நிலக்கரிச் சுரங்கத்தில் இரவு 10 மணியிலிருந்து காலை 6 மணி வரையான இரவு வேலைக்கென்று நியமிக்கப்பட்டேன். அந்த வேலையை நான் அதிகமாக விரும்பினேன். அதின் ஒரே காரணம், என்னோடு கூட ஒரு கூட்டம் தேவப் பிள்ளைகள் என்னைப் போல நிலக்கரிச் சுரங்கத்திற்குள் வேலைக்காக வந்தனர். நான் அவர்களை வேலை செய்யப் போகும் சமயத்திலேயோ அல்லது வேலை முடிந்து மேலே வரும் நேரத்திலேசந்தித்து உரையாட முடிந்தது. அந்தச் சந்திப்பு வேளைகளில் ஆண்டவர் எங்களுடைய வாழ்வில் இடைபட்ட விசுவாசத்துக்கடுத்த பரிசுத்த காரியங்களை நாங்கள் ஒருவருக்கொருவர் பரிமாற்றம் செய்து கொண்டோம். அந்த அற்புதமான சந்திப்புகளை நான் ஒருக்காலும் மறக்க முடியாது. அப்படி நான் அங்கு சந்தித்த கர்த்தருடைய பிள்ளைகள் ராபர்ட் ஓவன், எடி ஈவான்ஸ், டேவ் ஈவான்ஸ் மூவரும் பின் நாட்களில் என்னைப் போல சுவிசேஷ பிரசங்கிகளாகப் புறப்பட்டுச் சென்றனர்.

நான் அந்த நிலக்கரிச் சுரங்கத்தில் வேலைசெய்து கொண்டிருந்த நாட்களில்தான் தேவன் என்னைத் தமது ஊழியத்திற்கு அழைத்தார். இந்தவிதமான அழைப்பை நான் இங்கு குறிப்பிடுவதால் என்னை சந்தேகக் கண்களுடன் பார்க்கும் மக்களும் உண்டு என்பதை நான் அறிவேன். இப்படித் தங்களை கர்த்தர் தம்முடைய சுவிசேஷ நற்செய்தியை மக்களுக்குப் பிரசங்கிக்க அழைத்தார் என்று சொல்லுபவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றி பக்தி வினயமான பாசாங்கு செய்பவர்கள் என்று அந்த மக்கள் கூறுகின்றனர். ஒரு மனிதனோ அல்லது ஸ்திரீயோ பொது ஜனக்கூட்டத்தில் தங்களுக்கு தைரியமாகப் பேசும் ஒரு பேச்சாற்றல் இருந்தால் அவர்கள் தேவனுடைய சத்தியங்களை மக்களுக்குச் சொல்ல வேண்டியதுதான். அதைத் தவிர்த்து ஒரு அற்புதமான நாடக மேடை அழைப்பு வரும் வரை அவர்கள் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்று அவர்கள் சொல்லுகின்றார்கள். அவர்களுடைய இந்தவிதமான வாதிடும் வார்த்தைகளில் ஒருக்கால் ஏதோ இருககலாம். ஆனால், பல நூற்றாண்டு காலங்களாக உள்ள கிறிஸ்தவ

திருச்சபை சரித்திரத்தில் தேவன் தமது ஜனத்தை தம்முடைய பரிசுத்த ஊழியத்தைச் செய்வதற்காக அவ்வப்போது குரல் கொடுத்து அழைத்திருப்பதை நாம் கவனிக்கலாம். நீதிமன்றங்கள், அலுவலகங்கள், மீன்பிடித் தொழில், உழவுத் தொழில், மருத்துவம், மேய்ச்சல் தொழில், கூடாரத் தொழில், சுரங்கம் இப்படிப்பட்ட பல்வேறு வேலைகளில் ஈடுபட்ட மக்களைத் தேவன் தமது உன்னதமான பணிக்காக குரல்கொடுத்து அழைத்திருப்பதை நாம் தெளிவாகக் காண முடியும். 20 ஆம் நூற்றாண்டின் மாபெரும் பிரசங்கிமார்களில் ஒருவரான மார்ட்டின் லாயிட் ஜோன்ஸ் என்ற தேவ மனிதரை அவர் பிரசித்திபெற்ற மருத்துவராகவிருந்த சமயம் தேவன் தமது சுவிசேஷ பணிக்காகக் குரல் கொடுத்து அழைத்தார். இறுதியாக அந்த தேவ மனிதர் இங்கிலாந்து தேசத்திலுள்ள மகா புகழ்பெற்ற வெஸ்ட் மினிஸ்டர் தேவாலயத்தின் பரிசுத்த குருவானவரானார். அநேக ஆயிரங்களுக்கு அவர் மிகுந்த ஆசீர்வாதமாகத் திகழ்ந்தார்.

தேவன் என்னைத் தமது முழு நேர பணியாளனாக அழைப்பதற்கு முன்னர் ஒரு சம்பவமும் நடந்தது. அதாவது ஒரு சனிக்கிழமை மாலை நேரம் நியூபோர்ட் என்ற இடத்திலுள்ள கிராஸ்கேஸ் கிராமத்தில் உள்ள தேவாலயத்தில் நடைபெற்ற ஜெபக்கூட்டத்தில் நான் கலந்து கொண்டேன். ஜேம்ஸ் சால்ற்றர் என்ற மிஷனரி அந்த நாளின் கூட்டத்தில் பேசினார். அந்த ராக்காலக் கூட்டத்தில் அவர் தனது பிரசங்கத்துக்காக எடுத்துக்கொண்ட தலைப்பு ''மேரியும், அவர்களுக்கு தேவனால் வெளிப்படுத்தப்பட்ட பரம வெளிப்பாடும்'' என்பதுவே. தேவன் ஏதாவது விசேஷமான காரியங்களை தனி மனிதர்களைக் கொண்டு நிறைவேற்ற சித்தம் கொள்ளும்போது அந்தக் காரியங்களை அவர்களாகவே காலப்போக்கில் கண்டு கொள்ளட்டும் என்று விட்டுவிடாமல் அதைக் குறித்து அந்த நபர்களிடம் முன்கூட்டியே கூறிவிடுவார் என்று அவர் சொன்னார். அதற்கு உதாரணமாக மரியாள் அம்மையார் வயிற்றில் அவதரித்த ஆண்டவருடைய பிறப்பைக் கூறினார். ஆண்டவராகிய இயேசு இரட்சகர் மரியாள் அம்மையார் வயிற்றில் அவதரிக்கப் போவதை நாளடைவில் அவர்களே தனது சரீரத்தில் ஏற்படக்கூடிய ஆச்சரியமான மாற்றங்களைக் கொண்டு கண்டு கொள்ளட்டும் என்று விட்டுவிடாமல் அவருடைய மானிட அவதாரத்தை முன்பே மரியாளுக்கு தெளிவுபடக் கூறிவிட்டார். அப்படியே தமது ஊழியத்தைச் செய்யும்படியாக தனி மனிதரை தேவன் விரும்பும்போது அந்தக் காரியத்தை அவர் அவர்களுக்கு முன்கூட்டியே வெளிப்படுத்திக் கொடுத்துவிடுகின்றார்

என்று தனது செய்தியில் குறிப்பிட்டார். அன்று அவர் அங்கு கொடுத்த அந்த தேவச் செய்தி மிகவும் வல்லமையுள்ளதாக இருந்தது.

அவருடைய செய்திக்குப் பின்னர் தங்களை ஆண்டவருடைய முழு நேர ஊழியத்திற்காக ஒப்புக்கொடுப்போரை முன் எழுந்து வரும்படியாக ஜேம்ஸ் சால்ற்றர் உருக்கமாக அழைப்பு விடுத்தார். அந்தச் சமயத்தில் கீழ்க்கண்ட பல்லவி ஆலயத்தில் பாடப்பட்டது:-

ஆண்டவரின் சேவைக்காக உன் வாழ்வை
பலிபீடத்தில் இன்று வைப்பாயா?
அவர் அழைக்கும் அன்புக் குரல்
இன்று உன்னண்டை வருவதை நீ கேட்கவில்லையா?
அறுவடைக்கு ஆயத்தமாய் தானியக் கதிர்கள்
தலை வணங்கி நிற்பதை நீ காணவில்லையா?
வெண் தானியக் கதிர்களை அறுக்க ஆளில்லை
அறுவடையாளர்களைத் தேடுகின்றார் அன்பின் நேசர் ஆவலாக!

மேற்கண்ட பல்லவி பாடப்படும் போது என்னை அறியாமல் நான் எழுந்து முன் சென்றேன். ஆண்டவர் என்னை ஒரு மிஷனரியாக ஏதாவது இருண்ட கண்டத்திற்கு அனுப்பிவிடுவாரோ? அதின் காரணமாக அந்த நாட்டின் கானகங்களில் நாமே நமது வழிகளை நமது கரத்திலுள்ள வெட்டுக் கத்தியால் வெட்டி வழித்தடங்களை உண்டு பண்ணிக் கொண்டு செல்லவும், முதலைகள், சிங்கங்கள், நச்சுப் பாம்புகள், இராத்தூக்கத்தைக் கெடுக்கும் கொடிய கொசுக்கள் வாழும் இடங்களில் நாம் வாழ வேண்டியதாகிவிடுமோ என்றெல்லாம் நான் அஞ்சினேன். எனினும், நான் அந்த எதிர்மறை எண்ணங்களை எல்லாம் அப்பால் உதறித் தள்ளிவிட்டு கர்த்தருக்கு என்னை முற்றும் ஒப்புவித்தவனாக சபையினருக்கு முன்பாக நான் நின்று கொண்டிருந்தேன். என்னோடு கூட பல வாலிபர்களும் கர்த்தருக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களாக நின்று கொண்டிருந்தனர்.

நான் வீட்டிற்கு வந்ததும் எனது பெற்றோரிடம் நான் என்னை ஆண்டவருடைய முழு நேர ஊழியத்திற்கு ஒப்புவித்துவிட்டதைச் சொன்னதுடன் பக்கத்திலுள்ள சிறிய மலைக்கு நான் அன்றைய தினம் சென்று ஜெபிக்கப் போவதையும் கூறினேன். அது ஒரு அருமையான கோடைகால இரவு. நான் பக்கத்திலுள்ள மலைக்கு ஏறிச் சென்று ஜெபிப்பதை என் பெற்றோர் தடைசெய்யவில்லை. எங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள அந்த சிறிய

மலையில் நான் ஏறி அதின் உச்சிக்குச் சென்று அந்த நாளின் சாயங்கால வேளை கொடுக்கப்பட்ட தேவச் செய்தியையும், நான் என்னை முழுநேர ஊழியத்திற்காகக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து முன் சென்ற நிகழ்ச்சியையும் தேவ சமூகத்தில் ஆராய்ந்தேன். அந்த இடத்திலேயே நான் என்னை ஆண்டவருக்கு இவ்வண்ணமாக ஒப்புக்கொடுத்தேன். ''அன்பின் பரம தகப்பனே, எனது முழு வாழ்க்கையும் உமக்கே சொந்தம். நீர் என்னை எந்த எந்த விதமாக உமது பரிசுத்த நாமத்திற்கு மகிமையாகப் பயன்படுத்தச் சித்தங்கொள்ளுவீரோ அந்த வழிகளில் எல்லாம் நீர் என்னை எடுத்துப் பயன்படுத்தும். நீர் என்னை ஒரு மிஷனரியாக எடுத்து பயன்படுத்த சித்தங்கொள்ளுவீரானால் அப்படியே செய்யும்'' என்று நான் ஆண்டவரிடம் அந்த மலை உச்சியிலிருந்து சொன்னேன். இப்பொழுது நான் ஆண்டவர் தமது வார்த்தைகளின் மூலமாக எனக்கு ஏதாவது வெளிப்படுத்துவாரா என்று நினைத்தவனாக கரத்திலிருந்த வேதாகமத்தைத் திறந்தேன். அங்கே நமது முற்பிதாவாகிய ஆபிரகாம் தனது குமாரன் ஈசாக்கை மோரியா மலையில் பலி செலுத்தக் கொண்டு சென்ற காரியமும் அதைக் குறித்த வர்ணனையும் விளக்கப்பட்டிருந்தது (ஆதி 22 :1-14) ஆபிரகாம் தேவனுடைய சித்தத்திற்கும் அவருடைய நோக்கத்திற்கும் எத்தனை மனப்பூர்வமாகத் தன்னைக் கையளித்து அந்த மோரியா மலையில் நின்று கொண்டிருந்தார் என்ற பரிசுத்த உணர்வு என்னில் அந்த வேளை பற்றி எரிந்தது. புதிய ஏற்பாட்டிலும் அப்போஸ்தலானாகிய பரிசுத்த பவுல் இப்படிப்பட்ட ஒரு பலி செலுத்துதலுக்கு நம்மைக் குரல் கொடுத்து அழைக்கின்றாரே என்று நான் அந்த வேளை யோசித்துப் பார்த்தேன். அந்தப் பகுதியை நான் அந்த வேளை திறந்து வாசிக்க வெளிச்சம் போதுமானதாக இல்லாதபடியால் நான் அதை வாசிக்க முடியாதே போனாலும் ரோமர் 12 : 1 ஆம் வசனத்திலுள்ள ''அப்படியிருக்க சகோதரரே நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்'' என்ற வசனத்தை நான் சொல்லொண்ணா பரவசத்துடன் தியானித்தவனாக நான் ஜெபித்துக் கொண்டிருந்த இடத்தைச் சுற்றிலும் கிடந்த சிறிய சிறிய கற்களையும், காய்ந்து போன தாவரங்களின் சறுகுகளையும், செடி கொடிகளையும் ஒரு பலி பீடமாக அமைத்து அந்த பலிபீடத்தில் நான் அப்படியே என்னை முற்றுமாக தேவனுக்கு என்னை அர்ப்பணித்தவனாக ஈசாக்கைப் போல நீண்ட நெடுஞ்சாண் கிடையாக அந்த முழு இராவும் நான் கட்டிய அந்த பலிபீடத்தில் கிடந்தேன். நான் அப்படிக் கிடந்தது எனது முதுகைப் பலமாக அழுத்திக் குத்தி வேதனையை

உண்டாக்கும் கரடு முரடான கற்களின் மேல் படுத்திருந்தேன் என்பதை நீங்கள் நினைவில் கொள்ள வேண்டும். பொழுது புலர்ந்ததும் திரும்பவுமாக ஆண்டவர் என்னை எப்படிப் பயன்படுத்த சித்தங் கொள்ளுவாரோ அப்படியே பயன்படுத்துமாறு அந்த அன்பின் ஆண்டவருக்கு என்னை முழுமையாகக் கையளித்துவிட்டு வீட்டுக்கு வந்தேன்.

கிராஸ்கேஸ் கிராம ஆலயத்தில் நான் என்னைக் கர்த்தருடைய முழு நேர ஊழியத்திற்கு ஒப்புக்கொடுத்த நிகழ்ச்சியும், எங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள மலை உச்சிக்கு நான் ஏறிச்சென்று இரா முழுவதும் நான் என்னைக் கர்த்தருக்கு ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்த காரியமும் பின் வந்த நாட்களில் பலமாக என் உள்ளத்தில் எதிர் ஒலி கொடுத்துக் கொண்டே இருந்தது. அதின் பின்னர் நான் வழக்கம்போல எனது சுரங்க வேலைக்குப் போய் வந்து கொண்டிருந்தேன். அன்றைய தினம் இரவு வேலைக்காக நான் சுரங்கத்துக்குள் சென்றேன். பொதுவாக இரவு 2 மணிக்கு தொழிலாளிகள் யாவருக்கும் 30 நிமிட நேர சிறிய ஓய்வு உண்டு. நான் அந்த ஓய்வு நேரத்தை என்னுடன் சுரங்கத்துக்குள் கொண்டு சென்றிருந்த புதிய ஏற்பாட்டை வாசித்து தியானித்து ஜெபிப்பதற்காக சுரங்கத்தின் முற்றும் ஆள் நடமாட்டம் இல்லாத பகுதிக்குச் சென்று ஜெபித்துக் கொண்டிருந்தேன். பூமியின் ஆழமான அந்தப் பாதாளப் பகுதியில் அந்த இராக்காலத்தின் அமைதியும் ஒரு வித விந்தையான அமைதலான பெருமூமூச்சின் சப்தமும் கேட்டுக்கொண்டே இருந்தது. சுரங்கங்களில் வேலை செய்வோருக்கு அந்த சப்தத்தைக் குறித்து நன்கு தெரியும். அந்த நேரம் ''எனது ஊழியத்தைச் செய்ய நீ எனக்குத் தேவை'' என்ற தேவ வார்த்தை இடிமுழக்கம்போல எனது இருதயத்தில் ஒலிப்பதை நான் கேட்டேன். அந்த தேவ வார்த்தையின் வல்லமை எப்படிப்பட்டதாக அந்த நேரம் எனக்கு இருந்தது என்பதை 50 ஆண்டுகள் கடந்து சென்ற இந்த நாளில் ஒரு சிறிதளவு கார் மேகத் தடையின்றி நான் பூரணமாக உணரக்கூடியவனாகவிருக்கின்றேன்.

கர்த்தர் என்னைத் தமது ஊழியத்திற்கு அழைத்த காரியத்தை நான் எனது பாஸ்டரிடம் சொன்ன போது ''தேவன் தமது ஊழியத்திற்கு உன்னை அழைக்காமல் ஏன் தாமதித்துக் கொண்டிருக்கின்றார் என்று நான் சில காலங்களாகவே யோசித்து வந்து கொண்டிருந்தேன். நான் எத்தனையாக ஆச்சரியம் அடைகின்றேன் என்பதை உன்னிடம் சொல்ல இயலாதவனாக இருக்கின்றேன்'' என்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள். அத்துடன் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய ஒரு வேதாகம கல்லூரிக்கும் சென்று

வேதாகம பயிற்சி எடுத்துக்கொள்ளும்படியாக அவர்கள் எனக்கு தேவ ஆலோசனை கொடுத்தார்கள்.

அந்தப் பாஸ்டருடைய ஆலோசனையின்படி இப்பொழுது நான் பிரசங்கம்பண்ணும் பயிற்சியையும் நானாகவே எடுத்துக்கொள்ளலானேன். அதின்படி நான் எனது முதல் பிரசங்கத்தை ஆயத்தம் செய்து அந்தப் பாஸ்டருடைய ஒரு சிறிய தேவாலயத்தில் பிரசங்கிக்க முயற்சித்தேன். லூக்கா 17 ஆம் அதிகாரத்திலுள்ள 10 குஷ்டரோகிகளின் சரித்திரத்தையே நான் அந்த வாராந்திர புதன் இரவு ஜெப ஆராதனையில் பிரசங்கித்தேன். 20 நிமிடத்திற்காக நான் செய்தி ஆயத்தம் செய்து கொண்டு போய் 7 நிமிடத்துக்குள்ளேயே நான் எனது பிரசங்கத்தை வியர்வை வடிய வடிய பிரசங்கித்து முடித்திருந்தேன். அது எனக்கு மிகுந்த ஏமாற்றத்தை அளித்தாகவிருந்தது. இனிமேல் எனது வாழ்வில் பிரசங்கம் என்பதே செய்யப்போவதில்லை என்று திட்டமாக நினைத்துக்கொண்டு ''ஆண்டவரே, என்னை உமது அழைப்பிலிருந்து விடுதலையாக்கிவிடும்'' என்று அவரைப் பார்த்துக் கெஞ்சினேன். எனினும், நான் அந்த நாள் இரவில் மிகுந்த தேவ சமாதானத்தோடு நித்திரை செய்து எனது வாழ்வில் ஒரு புதிய அத்தியாயம் மறு நாளில் ஆரம்பமாகும் என்று விசுவாசித்தேன்.

எழுப்புதல் வாலிபன்

எனது முதல் பிரசங்க முயற்சி ஆலயத்தில் வெட்கத்துடன் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அடுத்து வந்த மாதங்களில் நான் பல்வேறு விதமாக எனது பிரசங்கங்களை ஆயத்தம் செய்யத் தொடங்கினேன். மலை உச்சிகளுக்கு நான் தனியனாக ஏறிச் சென்று அங்கு கூட்டம் கூட்டமாக புல்மேயும் ஆடுகளுக்கும், பசுமாடுகளுக்கும், குதிரைகளுக்கும் நான் பிரசிங்கித்தேன். சொல்லப்போனால் எந்த எந்த ஜீவராசிகள் உயிர் உள்ளவைகளாகவிருந்து மலையடிவாரத்தில் நகர்ந்து அசைகின்றதோ அவைகளுக்கெல்லாம் நான் பிரசிங்கித்தேன். பின் வந்த நாட்களில் ஒரு மெதடிஸ்ட் சபை கண்காணிப்பாளர் தங்களது சபைகளில் வந்து பிரசங்கிக்கும்படியாக என்னை அழைத்தார். நான் மெதடிஸ்ட் சபையைச் சார்ந்தவனாக இல்லாதபோதினும் அவருடைய அழைப்பை அன்புடன் ஏற்றுக்கொண்டு அவர்களுடைய ஆலயங்களில் போய் பிரசங்கித்தேன். அதின் காரணமாக எனது பிரசங்கங்கள் வரவர சீரும் சிறப்புமாக இருந்ததுடன் விசேஷமாக சற்று நீண்ட நேரமுடையதாகவும் இருந்தது.

ஒரு சமயம் நான் ஒரு ஆலயத்திற்குச் சென்றிருந்தேன். அந்த ஆலயத்தில் அப்பொழுது பாஸ்டர்களுக்கான ஒரு மாதாந்திர ஆராதனை நடந்தது. அக்கம்பக்கத்திலுள்ள பாஸ்டர்கள் எல்லாரும் அதில் கலந்து கொண்டனர். அந்த ஆராதனையில் பிரசிங்கிக்க வேண்டிய குறிப்பிட்ட கர்த்தருடைய ஊழியர் வராதபடியால் ஆலயத்தில் வந்து கலந்துகொண்டிருந்த என்னைப் பிரசிங்கிக்க முடியுமா என்று ஆராதனையை நடத்திய போதகர் எனக்கு ஒரு துண்டுச் சீட்டை அனுப்பியிருந்தார். நான் அவருடைய விருப்பத்தை மறுக்க மனமற்றவனாக அந்த வேண்டுகோளுக்கு இணக்கம் தெரிவித்தேன். பிரசங்க சமயம் வந்தபோது போதகர் என்னை சபையினருக்கு அறிமுகப்படுத்தி வைத்ததுடன், எந்த ஒரு முன் அழைப்பும் இல்லாமல் வெறும் 30 நிமிட கால அவகாசம் மட்டுமே எனக்குக் கொடுத்து பிரசங்கம் செய்யும்படியாக கேட்டிருப்பதால் என்னிடம் விசேஷமாக எதையும் எதிர்பார்க்க வேண்டாம் என்று அந்தப் போதகர் சபை மக்களைக் கேட்டுக் கொண்டார்.

நான் அதற்கு முன்னர் பல நாட்களாக ஏசாயா 6 ஆம் அதிகாரத்தை நான் வாசித்து தியானித்து வந்திருந்ததால் ''யாரை நான் அனுப்புவேன்? யார் என் காரியமாய்ப் போவான்?'' என்ற அந்த அதிகாரத்திலுள்ள தேவனுடைய வார்த்தையைக் கொண்டு பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையால் அந்த ஆலயத்தில் 45 நிமிட நேரம் பேசினேன். இதற்கு முன்பாகவும் நான் இதே வசனத்தை பல தடவைகள் வேறு ஆலயங்களில் பேசி வந்திருந்த போதினும் அந்த நாளில் அந்தச் செய்தி மிகுந்த தேவ வல்லமையுடையதாகவிருந்தது. ஆராதனை முடிந்ததும், ஆராதனையில் கலந்து கொண்ட போதகர்கள் '' நான் தேவனால் நிச்சயமாக பிரசிங்கிக்கும்படியாக அழைக்கப்பட்டவன் என்பது தெள்ளந்தெளிவான உண்மை என்றும் அதற்கான எங்கள்எல்லாருடைய ஜெபங்களும் உங்களுக்கு உண்டு'' என்றும் சொன்னார்கள். கர்த்தருக்கே மகிமை.

கர்த்தர் என்னை பயன்படுத்துகின்றார் என்பதை அறிந்ததும் சபைகள் என்னை தங்கள் ஆலயங்களில் பிரசிங்கிக்கும்படியாக அடுத்தடுத்து அழைத்துக்கொண்டேயிருந்தார்கள். எனது டயரியில் பல மாதங்களுக்கு நான் பிரசிங்கிக்கும்படியான தேவாலயங்களின் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. ஆண்டவருக்குத் துதி உண்டாவதாக. நான் எதைக் குறித்துச் சபையில் பிரசிங்கிப்பது? என்று தேவ சமூகத்தில் நான் தியானிக்கும் வேளைகளில் எல்லாம் நான் சிறுவனாக எனது தாத்தா, பாட்டி வீட்டில் இருக்கும்போது அவர்களுடைய சமையலறை சாப்பாட்டு மேஜையில் சாப்பிட அமர்ந்திருந்த விருந்தாளிகளுடன் அவர்கள் கலந்து கொண்ட வேல்ஸ் நாட்டில் 1904, 1905

ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட மாபெரும் ஆச்சரியமான எழுப்புதல் குறித்த செய்திகளை நான் என் நினைவுக்குக் கொண்டு வந்து அந்த எழுப்புதலூட்டும் செய்திகளை எனது பிரசங்கங்களில் அடிக்கடி குறிப்பிட்டேன். அது மக்களுடைய உள்ளங்களை கர்த்தருக்குள் மிகவும் அனல் ஊட்டி ஏவி எழுப்பிவிடுவதாகவிருந்தது. எழுப்புதலையே நான் எனது பிரசங்கங்களில் மையமாக வைத்து பேசி வந்ததால் எனது பிரசங்கங்களைக் கேட்டோர் என்னை ‘‘எழுப்புதல் வாலிபன்’’ என்று அழைத்தனர். ஒரு போதகர் எனது சபை பாஸ்டருக்கு எழுதிய கடிதத்தில் ‘‘உங்கள் சபையிலுள்ள அந்த வாலிபனை நாங்கள் எங்கள் சபைக்குப் பிரசிங்கிக்க அழைக்க விரும்புகின்றோம். அந்த வாலிபனுடைய பெயரை நான் மறந்துவிட்டேன். அவன் நல்ல அழகிய கண்களை உடையவன். அவன் எப்பொழுதும் எழுப்புதலைக் குறித்தேதான் பேசுவான். அவன் வருகின்ற சமயம் அவனது அக்கார்டியனை எடுத்துக்கொண்டு வர மறக்க வேண்டாம் என்று சொல்லுங்கள்’’ என்று எழுதியிருக்கின்றார்கள். நான் எங்கு பிரசிங்கிக்கச் சென்றாலும் எனது பியானோ அக்கார்டியனை என்னுடன் எடுத்துக்கொண்டுதான் செல்லுவேன். பிரசங்கத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சபையினருக்கு ஒரு சில பல்லவிகளை நான் எனது அக்கார்டியன் உதவியால் பாடி அல்லது சபையினருக்கு சில பல்லவிகளைச் சொல்லிவிட்டுத்தான் பிரசங்கத்தை ஆரம்பிப்பேன்.

நாட்கள் செல்லச் செல்ல மெதடிஸ்ட் சபைகளிலுருந்து எனக்கு மாதத்தில் 3 ஓய்வு நாட்களுக்கு பிரசிங்கிக்க அழைப்புகள் வந்தன. அவர்களுடைய ஆலயங்களில் நான் பிரசிங்கிப்பதற்காக தெற்கு வேல்ஸிலிருந்து மேற்கு வேல்ஸ்க்கும், சில சமயங்களில் நான் மத்திய வேல்ஸ் வரைக்கும் பிரயாணம் செய்தேன். உங்களிடம் ஒரு துக்ககரமான உண்மையைச் சொல்ல ஆசைப்படுகின்றேன். ஆரம்ப கால நாட்களில் எனது பிரசங்கங்கள் ஆத்தும பாரமற்றவிதமாக ஏதோ ஒரு யந்திர மயமான பிரசங்கங்களாக இருந்தன. ஜீவிக்கின்ற கிறிஸ்து இயேசுவை பிரசிங்கிப்பதற்கு மாறாக பிரசங்கம் செய்வதை ஒரு கலையாகவும், மக்களுடைய பாராட்டுதலைப் பெற்றுக் கொள்ளவும் பிரசிங்கித்தேன். எனது தேவ ஊழியத்தில் நான் அதை கொடிய இருண்ட நாட்களாகவே கருதுகின்றேன். அந்த இருண்ட நாட்களை நான் எவ்வண்ணமாக மேற்கொள்ளுவது என்று நான் சிந்தித்துக் கொண்டிருந்த நாட்களில் ஒரு ஆச்சரிய அற்புதமான பிரகாரமாக அது என்னைவிட்டுக் கடந்து செல்ல தேவன் எனக்கு உதவி செய்தார். அது ஒரு சோக நிகழ்ச்சியாகும்.

ஒரு நாள் நள்ளிரவு நேரம் நான் நிலக்கரி சுரங்கத்தில் இருந்தேன். என்னுடனே கூட மற்றொரு வாலிபனும் வேலை செய்து கொண்டிருந்தான். கைவிடப்பட்ட ஒரு சுரங்கத்திலிருந்த விலை மதிப்புள்ள காற்றுக் குழாய்களை துரிதம் துரிதமாக அப்புறப்படுத்துவதே எங்கள் வேலையாக இருந்தது. எந்த நேரமும் சுரங்கத்தின் மேற் பகுதி இடிந்து விழும் நிலையில் இருந்ததால் நாங்கள் பயத்தோடும், நடுக்கத்தோடும் எங்கள் வேலையைத் துரிதம் துரிதமாகச் செய்து கொண்டிருந்தோம். என்னோடு வேலை செய்தவன் நல்ல அழகான வாலிபன். உலக நேசம் கொண்டவனாகவும், உலக மாயைகளின் காரியங்களில் சிக்குண்டவனாக இருந்தபோதினும் நல்ல அன்பும், இரக்கமும் உடையவனாக அவன் இருந்தான். நாங்கள் இருவரும் அந்த நள்ளிரவு நேரத்தில் அந்த இடத்தில் பலவிதமான காரியங்களைக் குறித்துப் பேசிக்கொண்டோம். இயேசு இரட்சகரை அவன் அறிந்து கொள்ளுவதன் அவசியத்தைக் குறித்து நான் அவனிடம் உடனடியாகப் பேசும்படியாகப் பரிசுத்த ஆவியானவர் என்னைப் பலமாக அந்த வேளை உணர்த்தினார். நான் அந்தக் காரியத்தைக் குறித்து பின்னர் ஒரு நாள் அவனிடம் பேசுவேன் என்று கூறிவிட்டு என் உள்ளத்தில் உண்டான ஆவியானவரின் உணர்த்துதலை நான் அல்லத் தட்டிவிட்டேன். நான் அப்படி ஆண்டவரைக் குறித்து அந்த வாலிபனுடன் பேசியிருந்தால் ஒரு 15 நிமிட நேரம் மட்டும் ஆகியிருக்கும். ஆனால், அந்தோ, சரியாக 15 நிமிட நேரத்திற்குப் பின்னர் சுரங்கத்தின் மேற்பகுதியிலிருந்து ஒரு பெரும் பாறை பெயர்ந்து வந்து விழுந்து அவனை நசுக்கிப்போட்டது. அந்தப் பாறையை என்னால் நகர்த்த முடியாததால் நான் அலறி அடித்துக்கொண்டு சுரங்கத்துக்குள் ஓடி மற்றவர்களுக்கு அதை அறிவித்தேன். சுமார் 7 பேர் சேர்ந்து அந்தப் பாறையை கஷ்டப்பட்டு நகர்த்தினார்கள். அந்தக் கோரக் காட்சியை என்னால் மறக்க முடியாமற் போனபடியால் 2 முழு வாரங்களுக்கு நான் சுரங்கத்தினுள் வேலைக்கே செல்லவில்லை. அந்த நாளிலிருந்து எனது பிரசங்கங்களிலும் தனி நபர்களிடத்தில் இரட்சிப்பைக் குறித்துப் பேசும்போதும் மிகுந்த ஆத்தும பார உணர்த்துதலோடு நினையா நேரம் சந்திக்கும் மரணத்தை முன் நிறுத்தி பயத்தோடு தேவனுடைய சத்தியத்தைப் பகிர்ந்து கொண்டு வருகின்றேன்.

வேதாகம கல்லூரிக்குச் செல்லுவதற்கான ஆயத்தம்

இந்த நாட்களில் ஒரு முக்கியமான சம்பவம் நடந்தது. எங்களுடைய பாஸ்டர் எங்கள் ஆலயத்துக்கு ஜாண் வாலேஸ் என்ற ஸ்காட்லாந்து தேச பரிசுத்த தேவ மனிதரை வந்து ஆவிக்குரிய கூட்டங்கள் நடத்தும்படியாகக்

கேட்டுக் கொண்டார்கள். ஜாண் வாலேஸ் என்பவர் பிரிஸ்டோல் வேதாகம கல்லூரியின் தலைவராக இருந்தார். அவர் ஒரு வல்லமையான பிரசங்கியாகவும், சிறந்த வேத விற்பன்னராகவும் விளங்கினார்கள். அந்த நாட்களில் பிரிஸ்டோல் வேதாகம கல்லூரி இங்கிலாந்தின் வேல்ஸ் பள்ளத்தாக்குகளில் மிகவும் புகழ் பெற்றதாகக் காணப்பட்டது. ஜாண் வாலேஸ் எங்கள் சபையில் வந்து கூட்டங்கள் நடத்தின சமயம் எங்கள் சபையின் பாஸ்டர் என்னை அவருக்கு அறிமுகப்படுத்தி வைத்து நான் அவர்கள் வேதாகம கல்லூரியில் வந்து படிக்கப் போகும் விபரத்தை அவருக்குச் சொன்னார். அதைக் கேட்ட அந்த தேவ மனிதர் மிகவும் சந்தோசம் அடைந்தார். ''பல ஆண்டு காலம் நீங்கள் எங்கள் கல்லூரியில் படிக்க அவசியமில்லை. மூன்று ஆண்டு காலத்தில் நாங்கள் உங்களுக்குத் தேவ ஊழியத்தை கர்த்தருக்கு மகிமையாக செய்யக்கூடிய சிறப்பான வேதாகம கல்வியை அளித்துவிடுவோம். எங்கள் கல்லூரியில் உள்ள வேதாகம விரிவுரையாளர்கள் கர்த்தருடைய ஊழியங்களில் நல்ல அனுபவம் பெற்ற தேவ பக்தர்கள். அதுமட்டுமல்ல தேவனுடைய வார்த்தைகளையும் சிறப்பாகப் போதிக்கும் கிருபா வரங்கள் பெற்றவர்கள் என்று கூறினார்.

அதற்கப்பால் நான் எனது பெற்றோருடனும், எனது குருவானவரான பெரியப்பா டேவிட் தாமஸ் அவர்களுடனும் கலந்து பேசி உலகப் பிரகாரமான எனது சுரங்க வேலையை விட்டுவிட்டு பிரிஸ்டோல் வேதாகம கல்லூரியில் சேருவது என்ற முடிவுக்கு வந்தேன். அதற்கான போதுமான பண வசதி பெற்றோரிடம் இல்லாத போதினும் அவர்கள் எனக்காக கஷ்டப்பட்டுத் தேவையான பணத்தை அந்தந்த நாட்களில் வேதாகம கல்லூரிக்குக் கொடுப்பதாக உறுதி கூறினார்கள். நான் வேதாகம கல்லூரியில் சேருவதற்கு சுமார் ஓராண்டுக்கும் கூடுதலான கால அவகாசம் இருந்ததால் அந்த நாட்களில் எனது பெரியப்பா டேவிட் தாமஸ் அவர்கள் வரப்போகும் வேதாகம கல்லூரி வாழ்க்கைக்காக என்னைப் பயிற்றுவித்தார்கள். (I want to teach you to steal, to drink, to lie and to swear) என்று அவர்கள் என்னிடம் சொன்னபோது நான் மிகுந்த ஆச்சரியத்துடன் அவர்கள் முகத்தை உற்றுப் பார்த்த உடனே அவர்கள் என்னைப் பார்த்து சிரித்துக் கொண்டே ''ஒவ்வொரு நாளும் காலத்தை நீ எவ்வண்ணமாகத் திருடி (ஸ்டீல்) தேவனுடைய புத்தகத்தைப் படிப்பதற்கு அதைச் செலவிடவேண்டும் என்று நான் உனக்குச் சொல்லுவேன். களங்கமில்லாத அந்த ஜீவ தண்ணீரை நீ எவ்வண்ணமாகக் குடித்துப் (டிரிங்) பூரிக்க வேண்டும் என்பதுடன் உனது படுக்கையில் படுத்துக் (லை) கொண்டு அந்த ஜீவ வார்த்தைகளை எவ்வண்ணமாக நீ தியானிக்க வேண்டும் என்றும்

அந்தக் காரியத்தைச் செய்ய தேவகிருபையைக் கொண்டு நீ எப்படியாக உறுதி (ஸ்வியர்) எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்கள். அவர்கள் என்னை அவ்விதமாகப் படிக்கச் சொன்ன புத்தகம் ''நீதிமொழிகளின்'' புத்தகமாகும்.

''நீதிமொழிகளின் புத்தகமானது ஞானத்தைப் பெற்றுக் கொள்ளுவதைக் குறித்துப் பேசுகின்றது. நீ அந்தப் புத்தகத்தை ஆழமாக வாசித்து தியானித்து ஞானவானாக வேண்டும். நீ பெற்ற ஞானத்தை மற்ற மக்களுக்கும் பகிர்ந்து கொடுக்க வேண்டும். இந்த உலகத்தின் திரள் திரள் கூட்டத்தினருக்கு இந்த உலகத்தில் எவ்வண்ணமாகத் தங்களுக்கு ஒரு பிழைப்பைத் தேடிக் கொள்ள வேண்டும் என்று தெரியும். ஆனால் அந்தோ, அவர்களுக்கு நித்திய பேரின்ப வாழ்வை சுதந்தரித்துக்கொள்ளுவதற்கு எப்படி வாழ வேண்டும் என்ற வகை தெரியாது. இந்த உலக வாழ்க்கைக்கான அனைத்துக் காரியங்களும் அவர்களுக்குத் தண்ணீர் பட்ட பாடமாகும். ஆனால், பரத்தின் ஞானம் அவர்களுக்குக் கிடையாது. நீதிமொழிகளின் புத்தகத்தை நீ எவ்வளவாக நேசித்து வாசித்து அதின் சத்தியங்களை உனது நடைமுறை வாழ்க்கைக்கு கொண்டு வந்து அப்பியாசம் செய்வாயோ அந்த அளவிற்கு உனது கிறிஸ்தவ வாழ்க்கை ஒளி வீசும். அதற்கு நான் உத்திரவாதம் அளிக்க முடியும்'' என்று சொன்னார்கள்.

அதையடுத்து அடுத்து வந்த சில மாதங்களுக்கு நீதிமொழிகளின் புத்தகத்தை மட்டும் வாசித்து தியானிப்பதற்கு நான் காலம் செலவிட்டேன். அந்தப் புத்தகத்திலிருந்து எனது பெரியப்பா கேட்ட கேள்விகளுக்கு நான் விடையளித்தேன். அந்தப் புத்தகத்தின் பல பகுதிகளையும் நான் மனப்பாடமாகப் படித்தேன். வேதாகமத்தில் வேறு எந்த ஒரு புத்தகத்தையும் நான் அவ்விதமாக வாசித்து தியானிக்கவில்லை என்றே சொல்லுவேன். அதின் காரணமாக பின் வந்த எனது தேவ ஊழியங்கள் மிகுந்த வல்லமை யுடையவைகளாகக் காணப்பட்டது. நீதிமொழிகளின் புத்தகத்தை நான் சிறப்பாகப் படித்து தேர்ச்சி பெற்றதும் எனது பெரியப்பா டேவிட் தாமஸ் அவர்கள் என்னைப் பார்த்து ''வேதாகம கல்லூரிக்குப் போவதற்கு முன்பாக மற்றுமொரு மாசிறந்ததொரு போதனையை நீ கற்றுக்கொள்ள விரும்புவாயா?'' என்று என்னைப் பார்த்துக் கேட்டார்கள். நான் எனது விருப்பத்தை அவர்களுக்குத் தெரிவித்தபோது அவர்கள் ''ஆண்டவருடைய பரிசுத்த வேதாகமத்திலிருந்து நீ அதிகமான நன்மையைப் பெற்றுக் கொள்ள வாஞ்சிப்பாயானால் அதை வாசிக்க வேண்டும், அதைக் கருத்தூன்றிப் படிக்க

வேண்டும், அதை தியானிக்க வேண்டும். அதில் வெகு ராஜ சிறப்பான மகத்துவம் என்னவெனில், ஆண்டவருடைய வார்த்தைகளை இருதயத்தில் வைத்து தியானிப்பதில்தான் அடங்கிக் கிடக்கின்றது'' என்று சொன்னார்கள். வேத வசன தியானம் என்பது நாம் வாசித்த வேத பகுதிகளை அப்படியே நமது ஆத்துமத்தில் வைத்து ஜீரணம் செய்து கிறிஸ்தவ நடைமுறை வாழ்வில் அதை அப்படியே வெளியே கொண்டு வருவதுதான். வேத வசன தியானம் குறித்து எனது பெரியப்பா எனக்குக் கூறிய சிறந்த தேவ ஆலோசனைகளுக்காக நான் அவர்களுக்கு என் வாழ்நாள் முழுவதும் கர்த்தரில் நன்றி கடன்பட்டுள்ளேன்.

பிரிஸ்டோல் வேதாகம கல்லூரி நாட்கள்

பிரிஸ்டோல் வேதாகம கல்லூரியில் நான் சேர்ந்து சில மாதங்களிலேயே எனது வாழ்க்கையில் மிகவும் ஆச்சரியமான ஒரு அனுபவம் ஏற்பட்டது. இங்கிலாந்து தேசத்தின் மிகச் சிறப்பான பிரசங்கிகளில் ஒருவரான பண்டிதர் வில்லியம் எட்வின் ஸாங்ஸ்றறர் என்பவரை நான் சந்தித்ததுதான் அந்த ஆச்சரிய அனுபவம். ஒரு மத்தியானம் சாப்பாட்டு வேளையில் எங்கள் வேதாகம கல்லூரித் தலைவர் ஜாண் வாலேஸ் என்பவர் ''பிரிஸ்டோல் பட்டணத்தில் உள்ள தேவாலயத்தில் புகழ்பெற்ற பண்டிதர் வில்லியம் எட்வின் ஸாங்ஸ்றறர் பேசுகின்றார் என்றும், வேதாகம கல்லூரி மாணவர்கள் அவருடைய தேவச் செய்தியைக் கேட்பது சாலச் சிறந்தது'' என்றும் சொன்னார்கள். எட்வின் ஸாங்ஸ்றறர் லண்டன் மா நகரத்திலுள்ள பேர்பெற்ற வெஸ்ட்மினிஸ்டர் மத்திய தேவாலயத்தில் குருவானவராக இருந்தார். என்னோடு பயின்று கொண்டிருந்த மாணவர்களோடு அவருடைய பிரசங்கத்தைக் கேட்பதற்காக நான் சென்றேன். ''கர்த்தரைத் துதிப்பது நலமானது'' (சங் 92 : 1) என்ற தேவ வசனத்தின் பேரில் அன்று அவர் பிரசிங்கித்தார். அவர் தனது பிரசங்கத்தை எப்படி ஆரம்பிக்கின்றார்? ஆரம்பித்த பின்னர் எந்த எந்த உட்பிரிவுக்குள் செல்லுகின்றார்? காரியங்களை எப்படி விளக்குகின்றார்? அவருடைய பிரசங்கத்தின் முடிவுரை எவ்விதமாக அமைகின்றது? என்பதை எல்லாம் மாணவர்களாகிய நாங்கள் மிகவும் கருத்தோடு கவனிக்கும்படியாக எங்கள் கல்லூரியின் தலைவர் ஜாண் வாலஸ் எங்களிடம் சொல்லி அனுப்பியிருந்தார். ஆனால், நான் அவருடைய பிரசங்கத்தின் அற்புத நடையையும், அவருடைய பக்தி வினயமான சைகைகளையும், யாவுக்கும் மேலாக அவருடைய தேவச் செய்தியின் கருப்பொருளையும் கவனித்து ஆனந்த பரவசம் அடைந்தேன். ஆலய ஆராதனை முடிந்ததும் நான் அவரைச் சந்திக்கும்படியாகச் சென்றேன்.

எனக்கு முன்பாகச் சிலர் என்னைப்போல அவரைப் பார்க்கும்படியாக நின்று கொண்டிருந்தனர். எனது முறை வந்ததும் நான் அவரிடம் ''ஐயா, உங்களைப் போல நானும் பிரசிங்கிக்க எனக்கு உதவி செய்வீர்களா?'' என்று நான் அவரிடம் கேட்டேன். அந்த வேண்டுகோள் அந்த தேவ மனிதருடைய இருதயத்திற்கு ஏற்றதாகவிருந்தது. ''பிரசங்கம் ஆயத்தம் செய்வது எப்படி?'' என்று நான் சமீபத்தில் ஒரு புத்தகம் எழுதி வெளியிட்டிருக்கின்றேன். அதின் ஒரு பிரதியை நான் உங்களுக்கு எனது அன்பளிப்பாக அனுப்பித் தருகின்றேன்'' என்று என்னிடம் சொல்லிவிட்டு அப்படியே எனக்கு அனுப்பித் தந்தார். எனக்கு லீவு கிடைக்கும் போதெல்லாம் அல்லது வாரத்தின் கடைசி விடுமுறை நாட்களில் நான் அவருடைய பிரசங்கத்தைக் கேட்பதற்காக லண்டன் நகரத்துக்குச் சென்று கொண்டிருந்தேன். அந்தப் பயணங்களின் மூலமாக நான் திரண்ட தேவாசீர்வாதத்தைப் பெற்றேன். அவருடைய பிரசங்கத்தைக் கேட்க வேண்டுமானால் ஆராதனை ஆரம்பமாவதற்கு குறைந்த பட்சம் அரை மணி நேரத்திற்கு முன்பதாக ஆலயத்துக்குள் நாம் கட்டாயம் இருக்க வேண்டும். இல்லையேல், 3000 மக்கள் அமரக்கூடிய அந்த ஆலயத்தில் ஒரு இடம் கூட நமக்குக் கிடையாது. அவருடைய தேவச் செய்தியைக் கேட்க மக்கள் கூட்டம் அவ்வண்ணமாக நிரம்பி வழியும். பிரசங்கம் பண்ணும் விதத்தை நான் பல தேவ பக்தர்களிடமிருந்து கற்றுக்கொண்ட போதினும் அவர்களில் பிரதான பாத்திரம் எட்வின் ஸாங்ஸ்ற்றர் ஒருவரேதான்.

பிரிஸ்டோல் வேதாகம கல்லூரியின் வேத போதனை எனது மனதுக்கு நிறைவானதாகவிருந்தபோதினும் எழுப்புதல் குறித்த உபதேசங்களோ அல்லது குழு ஆலோசனைகளோ அங்கு நடத்தப்படவில்லை. நான் அது குறித்து வேதாகமக் கல்லூரியின் தலைவரிடம் கேட்டபோது அந்தப் பொருளின் பேரில் பாடம் எடுக்க ஏற்ற தேவ ஊழியர்கள் கிடைக்கவில்லை என்று கூறினார்கள். அந்த வேதாகம கல்லூரியில் தேவனுடைய வேதாகமம் எனக்கு

மட்டற்ற வாஞ்சையும் தவனமுமாகவிருந்தது. இரவும், பகலும் நான் ஆண்டவருடைய வேதத்தைத் தியானித்து அதினைப் பொக்கிஷ வைப்பாக என் உள்ளத்தில் வைத்து வந்தேன். வேதாகம விரிவிரையாளர்கள் கொடுக்கும் வேதாகம குறிப்புகளை எல்லாம் நான் எழுதிக்கொள்ளுவேன். கல்லூரியிலுள்ள நூல் நிலையத்திற்குச் சென்று இரவின் பிந்திய நேரம் வரை நான் படித்துக்கொண்டிருந்தேன். அதின் காரணமாக எனது உடல் நலம் கூட பாதிப்புக்குள்ளாகியது. நான் 3 ஆண்டு காலம் அந்தக் கல்லூரியில் படிக்க வேண்டும். ஆனால், எனது ஏழைப்பெற்றோருக்கு என்னைப் படிக்க வைக்க பண வசதி இல்லாதபடியினால் நான் எனது படிப்பை சற்று முன்கூட்டியே கைவிட வேண்டியதானது. எனினும் மீதமுள்ள காலத்தில் நான் படிக்க வேண்டிய புத்தகங்களை எல்லாம் எனக்குக் கொடுத்தார்கள். நான் எனது படிப்பை அநேக மாதங்களுக்கு முன்பாகவே விட்டுவிட வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்ட போதினும் தேவன் அந்தக் காரியத்தையும் என் வாழ்வில் ஒரு அற்புதமாகவே முடியப்பண்ணினார்.

வேதாகம கல்லூரிக்கு மேலாக உயரத்தில் மாணவர்கள் ஜெபிக்கும்படியான ஜெப அறை இருந்தது. அந்த ஜெப அறையை நான் கர்த்தருக்கு மகிமையாக நன்கு பயன்படுத்திக் கொண்டேன். 12 அடி நீளமான

அந்த ஜெப அறையில் ஒரு கட்டிலும் போடப்பட்டிருந்தது. அந்தக் கட்டிலில் தங்கள் முழங்கைகளை ஊன்றி ஜெபிக்க வசதியாக அது அங்கே போடப்பட்டிருந்தது. மாணவர்கள் யார் வேண்டுமானாலும் அங்கு போய் ஜெபிக்கலாம். ஆனால், அங்கு போய் ஜெபிப்பதற்கு முன்பு எவ்வளவு நேரம் ஜெபிக்கப் போகின்றோம் என்பதை முன்கூட்டியே தெரிவித்துச் செல்ல

வேண்டும். வேதாகம கல்லூரி படிப்பு முடிவடையும் காலம் நெருங்க நெருங்க மாணவர்கள் அந்த ஜெப அறையை அதிகமதிகமாகப் பயன்படுத்த தொடங்கினோம். அதின் காரணமாக 1 மணி நேரம் மட்டுமே மாணவர்களுக்கு ஜெபிக்க நேரம் கொடுக்கப்பட்டது.

எங்களுடைய வேதாகம கல்லூரி படிப்பு முடிவதற்கு 2 மாதங்களுக்கு முன்னர் நாங்கள் கொஞ்சம் மாணவர்கள் உட்கார்ந்து நாம் கல்லூரியை விட்டுப் போவதற்கு முன்பாக கர்த்தருக்கு மகிமையாக ஏதாவது ஒரு காரியத்தைச் செய்துவிடவேண்டும் என்று ஆலோசித்தோம். கூட்டத்திலிருந்த மாணவன் ஒருவன் ''நாம் படித்துக்கொண்டிருக்கும் பிரிஸ்டோல் பட்டணத்திலிருந்து லாண்ட்ஸ் எண்ட் **(Lands End)** என்ற இடம் வரைக்குமான தொலை தூரம் வரை கால் நடையாகப் பயணப்பட்டுச் சென்று தேவனுடைய சுவிசேஷத்தை பிரசிங்கித்துவிடவேண்டும்'' என்று கூறினான். போகும்போதும் வரும்போதும் இரு வழிகளிலும் சுவிசேஷம் அறிவிக்கவேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. அவனுடைய ஆலோசனை அங்கீகரிக்கப்பட்டு அதற்கான திட்டங்களை நாங்கள் போட ஆரம்பித்தோம். நண்பன் சொன்ன அந்தப் பாதை சுமார் 100 ஆண்டு காலங்களுக்கு முன்னர் ஜாண் வெஸ்லி என்ற மாபெரும் பரிசுத்தவான் தனது குதிரையில் சென்று சுவிசேஷம் அறிவித்த இடங்களாகும். அந்த இடம் இங்கிலாந்து தேசத்தின் மேற்குப் பகுதியாகும். நாங்கள் ஒரு கை வண்டியை விலைக்கு வாங்கி அந்த வண்டியில் எங்கள் பெட்டி படுக்கைகளையும், சமையல் பாத்திரங்களையும், சுவிசேஷப் பிரசுரங்களையும், வாத்திய இசைக்கருவிகளையும் வைத்துக் கொண்டோம். எங்களோடு வேதாகமக் கல்லூரியில் படித்த ஹெர்பர்ட் என்ற சகோதரன் ஒரு அலுமினிய தகட்டை வாங்கி கட்டை வண்டிக்கு மேலாக அதை வளைத்து வைத்து ஒரு சிலுவையை அதில் வரைந்து அதின் அருகில் ''இயேசு உங்களுக்காக மரித்தார்'' என்ற வார்த்தையை எழுதினான். அந்த ஹெர்பர்ட் தான் எங்கள் சுவிசேஷ குழுவுக்குத் தலைவனாகவும் இருந்தான். நாங்கள் மொத்தம் 5 பேர்களாக எங்கள் பிரயாணத்தை ஆரம்பித்தோம். நாங்கள் படித்த வேதாகம கல்லூரியின் ஆசிரியர்களும், பணியாளர்களும் எங்களுக்காக ஜெபித்து எங்களை வழி அனுப்பி வைத்தனர். நாங்கள் 2 பேர் கட்டை வண்டியை இழுத்துக்கொண்டு முன் செல்லுவோம், அரை மணி நேரம் சென்ற பின்னர் அடுத்த 2 பேர் இழுப்போம். இப்படி முறை வைத்து மாற்றி மாற்றி வண்டியை இழுத்துச் சென்றோம். செங்குத்தான பாதை வரும்போது முன்னால் 2 பேர் வண்டியை இழுத்துக்கொண்டு போவோம், பின்னால் 2 பேர் தள்ளிக் கொண்டு

செல்லுவோம். ஒருவர் முன்சென்று எதிர்வரும் வாகனங்களையும், மக்களையும் வகைப்படுத்தினார். நாங்கள் எங்கள் பிரயாணத்தில் வெஸ்டன் என்ற இடத்திற்கு வந்தோம். அது ஒரு ஓய்வு நாள். அங்குள்ள தேவாலயத்தில் நாங்கள் கலந்து கொண்டோம். அடுத்து 2 நாட்கள் நாங்கள் பிரயாணம் பண்ணி டவுண்டன் என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தோம். இங்கிலாந்து தேசத்தின் சின்னஞ்சிறிய கிராமங்களின் வழியாக நாங்கள் பிரயாணம் செய்தோம். சில கிராமத்திற்குள் நாங்கள் எங்கள் ஆகாரத்திற்காக புதிய ரொட்டி வாங்குவதற்காக அலைந்து திரிந்தோம். கிராமத்திற்கு அப்பால் ஓடுகின்ற நதிகளில் குளித்து, நாங்கள் கொண்டு சென்ற பாத்திரங்களில் சமையல் செய்து சாப்பிட்டு, திறந்த வெளிகளில் வயல் நிலங்களில் இரவில் நித்திரை செய்து, ஆண்டவரைப் பாடித்துதித்து, ஜெபித்து ஆனந்தித்தோம். திறந்த வெளி சுவிசேஷக்கூட்டங்களும் நடத்தினோம்.

நாங்கள் எங்கள் நூதனமான வண்டியை முன்னால் இருவர் இழுக்க, பின்னால் இருவர் தள்ளுவதைக் கண்டு மக்கள் ஆச்சரியப்பட்டனர். பலர் சிரித்தனர். சிலர் எள்ளி நகையாடினர். எனினும், நாங்கள் எங்கள் தேவப் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டே இருந்தோம். எங்களுக்கு எதிர்ப்பட்டோருக்கு எல்லாம் சுவிசேஷப் பிரதிகள் கொடுத்து சுவிசேஷம் கூறிக்கொண்டே சென்றோம். நியூட்டன் ஆப்பர்ட் என்ற இடத்தில் நாங்கள் சில தினங்கள் தங்கினோம். அங்குள்ள திருச்சபையினர் எங்களை மிகவும் உற்சாகமாக வரவேற்று மிகவும் அன்பு செய்தனர். நாங்கள் அங்குள்ள தேவாலயத்தில் தேவனுடைய செய்தியைக் கொடுத்து எங்களுடைய தனிப்பட்ட சாட்சிகளையும் பகிர்ந்து கொண்டோம். எங்களுடைய சாட்சிகள் கர்த்தருக்குள் வல்லமையுடையதாக இருந்ததால் 20 க்கும் மேலான வாலிபர்கள் தங்களைக் கர்த்தருக்கு ஒப்புவித்தார்கள். கர்த்தருக்கே மகிமை. பிரிஸ்டோல் வேதாகம கல்லூரியில் நான் எனது பியானோ அக்கார்டியனையும், எனது நண்பர்கள் வால்ட்டரும், மாரிஸ்பெயினும் தங்கள் தங்கள் வாத்தியங்களை வாசிப்பதையும் நீங்கள் இந்தச் செய்தியில் காண்பதுடன், எங்கள் சுவிசேஷ கைவண்டியையும், எங்கள் சுவிசேஷக் குகுவினரையும் காணலாம்.

வாழ்வில் முதன் முறையாக குருவானவரானேன்

பிரிஸ்டோல் வேதாகம கல்லூரியில் நான் எனது படிப்பை முடிக்க சில வாரங்கள் மட்டுமே இருக்கும் வேளையில் நான் படித்த அந்தக் கல்லூரியின் தலைவர் ஜாண் வாலஸ் என்னைத் தமது அலுவலகத்துக்கு ஒரு நாள் அழைத்து

''வடக்கு இங்கிலாந்திலுள்ள ஒரு நல்ல வசதியான சபையிலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்துள்ளது. அந்த சபையை நான் நன்கறிவேன். அந்த சபைக்கு ஒரு போதகர் வேண்டுமாம். நமது கல்லூரியிலிருந்து ஒரு மாணவனைப் பரிந்துரை செய்யச் சொல்லி எனக்கு கடிதம் எழுதியிருக்கின்றார்கள். நான் அறிந்தவரை நீ அந்த சபைக்குப் பொருத்தமானவன் என்பதை யோசித்து அதற்கு உன்னைப் பரிந்துரை செய்யலாம் என்று விரும்புகின்றேன். மற்றொரு கடிதமும் எனக்கு வந்துள்ளது. கார்ன்வால் என்ற இடத்திலுள்ள ஹெல்ஸ்டன் என்ற ஒரு ஏழை சபைக்கும் ஒரு போதகர் வேண்டுமாம். இரண்டு சபைகளுக்குமே நான் உன்னை சிபாரிசு செய்து எழுத ஆயத்தமாக இருக்கிறேன். உனது தெரிந்து கொள்ளுதல் என்னவென்று'' என்னிடம் கேட்டார்.

நான் முன்பின் யோசியாமல் துரிதமாக வடக்கு இங்கிலாந்திலுள்ள அந்த வசதியான சபைக்கு என்னை அனுப்பும்படியாகச் சொன்னேன். அதைக் கேட்ட அந்த தேவ மனிதர் தனக்குள் ஏமாற்றம் அடைந்தவராய் துக்க முகத்தினனாகக் காணப்பட்டார். ''நீ வடக்கிலுள்ள அந்த வசதியான சபைக்குப் போக விரும்புவதைக் குறித்து நான் மிகவும் ஆச்சரியப் படுகின்றேன். உன்னுடைய பரிசுத்த குணநலன்களை நான் கவனிக்கும் போது நீ வாழ்வில் சவால்களை ஏற்று முன் செல்லக்கூடியவன் என்பதை நான் திட்டாக அறிந்திருக்கின்றேன். எளிமையில் இருந்து ஆரம்பித்து பெரிய காரியங்களுக்கு கடந்து செல்லவே நீ விரும்புவாய் என்று நான் அதிகமாக நினைத்தேன். நன்கு நிலைப்பட்டதும், தயார் நிலையில் உள்ளதுமான ஒரு சபைக்கு நீ செல்லுவாயானால் கர்த்தருக்கான உனது வைராக்கியத்தை நீ எப்படி காண்பிக்க முடியும்?'' என்று சொன்னார்கள். ''நான் தேவ சமூகத்தில் ஜெபித்துவிட்டு உங்களுக்குப் பதில் தருகின்றேன்'' என்று சொல்விட்டு நான் வந்து விட்டேன். நான் ஆண்டவர் சமூகத்தில் முழங்காலூன்றிய போது கல்லூரியின் பிரின்ஸ்பால் ஜாண் வாலஸ் அவர்கள் சொன்ன வார்த்தை என் உள்ளத்தில் ரீங்காரமிட ஆரம்பித்தது. அடுத்த நாள் நான் ஜாண் வாலஸ் அவர்களிடம் சென்று ''ஹெல்ஸ்டனிலுள்ள அந்த ஏழை சபைக்கே நான் போதகராகப் போகின்றேன்'' என்றேன்.

அவ்வண்ணமாகவே ஹெல்ஸ்டனிலுள்ள சபைக்கு நான் குருவானவராக நியமனம் செய்யப்பட்டேன். நான் குருவானவராக நியமனம் செய்யப்பட்ட போது அந்த ஆலயத்தில் 12 பேர்கள் மாத்திரமே வந்திருந்தனர். அவர்களில் 6 பேர்கள் வெளியிடத்திலிருந்து வந்த பார்வையாளர்கள். நான் போய் அங்குள்ள வீடுகளைச் சந்தித்து நான் அந்த இடத்திற்குப் புதிதாக

குருவானவராக வந்திருக்கின்றேன் என்று சொல்லி அழைத்து 30 முதல் 40 பேர் வரை ஆலயத்துக்கு வர ஆரம்பித்தார்கள். அங்குள்ள 100 வீடுகளையும் தினமும் சந்திக்க நான் தீர்மானித்தேன். அப்படி தினமும் அவர்களைப் போய்ப் பார்த்து பார்த்து ஓய்வு நாளில் 50 பேர்கள் வர ஆரம்பித்தனர். 3 மாதங்கள் நான் அந்தச் சபையில் போதகராக பணி செய்த பின்னர் கணிசமான அளவிற்கு காணிக்கை உயர்ந்தது. வாரத்திற்கு 12 ஷில்லிங்கும் 6 பென்ஸ்ம் காணிக்கை வந்தது. அதில் நான் 10 ஷில்லிங்கை நான் ஆராதனை நடத்தின தேவாலயத்தின் கட்டிட வாடகையாக இரட்சண்ய சேனையினருக்கு கொடுக்க வேண்டும். அந்த கட்டிடம் அவர்களுக்குத்தான் சொந்தமானது. காரணம், நான் சென்ற சபையினருக்கு சொந்தமான தேவாலயம் கிடையாது. கட்டிட வாடகை 10 ஷில்லிங் போக மீதி 2 ஷில்லிங் 6 பென்சைக் கொண்டு எனது காரியங்களை நான் கவனிக்க வேண்டும். எனது காலை ஆகாரம் வெண்ணெய் தடவப்பட்டு அடுப்பிலிடப்பட்ட 2 துண்டு ரொட்டிகள், எனது மத்தியான ஆகாரம் ரொட்டியும் ஒரு கோப்பை தேநீருமாகும். இரவுச் சாப்பாடு ஒரு சிறிய பை நிறைய உள்ள சீவல்கள் (Chips) மட்டுமே. இந்த எனது குறைவான ஆகாரத்தில் நான் கடினமாகப் படித்து ஒவ்வொரு ஓய்வு நாளிலும் 2 பிரசங்கங்களை நான் ஆயத்தம் செய்து கொண்டேன். வாராந்திர மத்திய நாளில் ஒரு வேதாகம வகுப்பும் நான் எடுத்து வந்தேன்.

ஹெல்ஸ்டனிலுள்ள சிறிய சபைக்கு குருவானவராக நான் பொறுப்பேற்று சில மாதங்கள் சென்றபோது நான் ஆவிக்குள்ளாக மிகவும் சோர்படைந்து கலக்கமுடையவனாகக் காணப்பட்டேன். அந்த சோர்பு வரவர என்னில் அதிகரித்தது. நாம் ஒரு குருவானவராக அழைக்கப்பட்டிருப்பது தேவனுடைய திருவுளச் சித்தம்தானா? என்று கூட நான் நினைத்து ஆச்சரியமடைந்தேன். கண்ணற்ற கபோதிகள் நிறைந்த ஒரு அறையில் நான் இருப்பதைப் போலவும், நான் பார்க்கக்கூடியதெல்லாம் அறையின் ஜன்னல்களில் தொங்கும் திரைகளின் கிளிசல்கள் வழியாக வரும் சூரியக்கதிர்கள் மாத்திரமே. அந்தச் சமயம் ஒரு ஆச்சரியமான அற்புதம் நிகழ்ந்தது. திடீரென திரைகள் முழுவதுமாக விலக்கப்பட்டு தேவ கிருபை நிறைந்த ஒரு ஒளி வந்தது. அந்த ஒளியின் ஊடாக வந்த தேவனுடைய வார்த்தையை நான் பெற்றுக்கொண்டேன். அந்த வார்த்தை மிகவும் அருமையானதாக எனக்கு இருந்தது. ஒருக்கால் அந்த வார்த்தை எனக்கு கிடைத்திராத பட்சத்தில் என் வாழ்க்கை முற்றும் வித்தியாசமான விதத்தில் சென்றிருக்கும்.

அந்த வார்த்தையை தேவனிடமிருந்து கொண்டு வந்த மனிதர் ஒரு முதிர்ந்த தேவ மனிதனாவார். சகோதரன் கோல்ட்ஸ்வொர்த்தி என்று அவர் அழைக்கப்பட்டார். நான் குருவானவராக பணி செய்த ஆலயத்தின் அங்கத்தினர் அல்ல அவர். எனினும், தன்னால் முடிந்தவரை ஆலயத்துக்கு ஒழுங்காக வந்து கலந்து கொள்ளுவார். ஒரு ஓய்வு நாள் இரவு ஆலய ஆராதனைக்கு வந்த அனைவரும் போன பின்பும் அவர் தனது ஆசனத்தில் உட்கார்ந்து கொண்டே இருந்தார். ''சகோதரன் கோல்ட்ஸ்வொர்தி அவர்களே, நீங்கள் இன்று வீட்டிற்குச் செல்லாமல் ஆலயத்திலேயா தங்கப் போகின்றீர்கள்? '' என்று நான் தமாஷாக அவரைக் கேட்டேன். அதற்கு மாறுத்தரமாக அந்த தேவ மனிதர் '' பாஸ்டர் அவர்களே, என்னண்டை வந்து இங்கே உட்காருங்கள், தேவன் உங்களுக்குச் சொல்லும்படியான ஒரு வார்த்தை என்னிடம் உண்டு என்று நான் விசுவாசிக்கின்றேன்'' என்று அவர் சொன்னார்.

நான் அவரண்டை போய் உட்கார்ந்தபோது அவர் தனது வேதாகமத்தைத் திறந்து ''என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்'' (எரே 33 : 3) என்ற தேவ வசனத்தை வாசித்தார்கள். இந்த தேவ வார்த்தையைத்தான் நான் இளைஞனாக என்னை ஆண்டவருக்கு ஒப்புவித்த போது எனது பாஸ்டர் எனக்குக் கொடுத்தார்கள். ''நீங்கள் இந்தச் சமயம் மிகவும் மனம் சோர்ந்திருப்பதாக தேவன் எனக்குக் காண்பிக்கின்றார். அத்துடன் நான் உங்களுக்காக ஜெபித்தபோது இந்த தேவ வார்த்தையை அவர் கொடுத்தார். அது மாத்திரமல்ல, உங்களுடைய வருங்கால வாழ்க்கையைக் குறித்த ஒரு சிறிய ஒளியையும் அவர் எனக்குக் காண்பித்தார். ''நீங்கள் தேவனுடைய ஒரு மாபெரும் எழுத்தாளனாகப் போகின்றீர்கள். அவர் உங்களை உலகின் பல்வேறு நாடுகளுக்கும் எடுத்துச் சென்று பயன்படுத்தப் போகின்றார். நீங்கள் எப்பொழுதும் ஒரு பாஸ்டராகவே இருக்கமாட்டீர்கள். சபையிலே ஒரு பாஸ்டராகவிருந்து நீங்கள் கற்றுக்கொள்ளக்கூடிய

ஆவிக்குரிய பாடங்கள் அனைத்தையும் கற்றுக்கொண்ட பின்பு உங்களை அவர் ஒரு வித்தியாசமான தேவ ஊழியத்திலே நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத அளவிற்கு எடுத்துப் பயன்படுத்துவார். அந்தக் காரியம் உங்கள் வாழ்வில் சம்பவிக்கும் நாள் வரை நீங்கள் ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டுக் கொண்டேயிருங்கள். ஜெபத்தில் அதிகமதிகமாக நீங்கள் ஆண்டவரோடு நெருங்கிக் கொண்டேயிருங்கள். அப்பொழுது தேவன் தமது வழிகளை படிப்படியாகவும் ஆழமாகவும் உங்களுக்கு வெளிப்படுத்திக் கொண்டேயிருப்பார் '' என்று சொன்னார்கள். அந்த தேவ மனிதரின் வார்த்தையின்படியே நான் 18 ஆண்டு காலங்கள் இங்கிலாந்து தேசத்திலுள்ள சபைகளில் குருவானவராக பணி செய்தபின்பு தேவன் என்னை எழுத்துப் பணியிலும், உயிர் மீட்சி கூட்டங்களிலும் தமது ஜனத்திற்கு ஆசீர்வாதமாக என்னைப் பயன்படுத்தினார். நான் குருவானவராக இருந்த நாட்களில் எடுத்த ஒரு புகைப்படத்தையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம்.

''உலக எழுப்புதல் பணி இயக்கம்'' தோற்றுவிக்கப்பட்டது

1965 ஆம் ஆண்டு இரண்டு முக்கியமான காரியங்கள் என்னுடைய தேவ ஊழியத்தின் பாதையிலே நடந்தது. ஒன்று ''அனுதினமும் இயேசுவுடன்'' என்ற தினசரி தியானச் செய்தியை நான் எழுதி வெளியிடலானேன். அடுத்தது ''உலக எழுப்புதல் பணி இயக்கத்தை'' நான் ஆண்டவருடைய திட்டமான வழிநடத்துதலின்படி ஆரம்பித்தேன். தேவனால் ஆரம்பிக்கப்பட்ட இந்த மகத்தான ஊழியத்தைக் குறித்து நான் ஆரம்பத்தில் கற்பனை கூட செய்து



பார்க்கவில்லை. அனுதினமும் இயேசுவுடன் என்ற எனது தினசரி தியானச் செய்தியை வாசித்த மக்கள் பரவசம் அடையவே இங்கிலாந்து தேசத்திலுள்ள பர்மிங்காம், பெல்ஃபாஸ்ட் பட்டணங்களிலும் இதர அநேக சிறிய பட்டணங்களிலும் உயிர் மீட்சி கூட்டங்களை நான் நடத்தலானேன். இந்தக் கூட்டங்களில் எனக்கு உதவியாக எரிக் பவ்டேல் அவர்களும் சேர்ந்து கொண்டார்கள். வெறும் 1000 பிரதிகளுடன் ஆரம்பமான ‘‘அனுதினமும் இயேசுவுடன்’’ என்ற எனது தினசரி தியானச் செய்தி 25,000 பிரதிகளுக்கு உயர்ந்து பின்னர் அது 100,000 என்ற எண்ணிக்கைக்கு கடந்து சென்றது. கர்த்தருக்கே மகிமை.

‘‘இயேசுவுக்காக ஒன்று கூடுதல்’’ என்ற ஒரு கூட்டத்தை நான் லண்டன் மா நகரத்திலுள்ள ராயல் அல்பெர்ட் ஹால் என்ற கட்டிடத்தில் 1980 ஆம் ஆண்டு கூட்டினேன். அனைத்து சபைப் பிரிவினரும் பாகுபாடின்றி அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். நான் எழுதி வெளியிடும் ‘‘அனுதினமும் இயேசுவுடன்’’ என்ற தியானச் செய்தியை வாசிக்கும் எனது சந்தாதாரர்கள் தான் அதிகமாக அதில் கலந்து கொண்டனர். எனது கூட்டங்களைக் குறித்து நான் மற்ற உலகச் செய்தி தாட்களில் விளம்பரம் செய்யாமல் எனது தியானச் செய்தி வெளியீட்டிலேயே எழுதினேன். கூட்டத்தில் கலந்து கொள்ளுவோர் ஒவ்வொருவரும் 50 பென்ஸ் மாத்திரம் கொடுக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. என்ன ஆச்சரியம்! அந்த பிரமாண்டமான கட்டிடமே மக்கள் வெள்ளத்தால் நிறைந்தது. கூட்டத்தில் சகோதரன் டிரவர் எனக்கு உதவி செய்தார்கள். தங்கள் வாத்திய இசைக் கருவிகளுடன் வாத்திய இசையை வாசித்த ஒரு கூட்டம் மக்கள் நீங்கலாக 100 பேர்கள் அடங்கிய பாடகர் குழு பாடல்களைப் பாடினார்கள். இந்தக் கூட்டத்தில் நாங்கள் இங்கிலாந்து தேசத்தில் ஒரு கிறிஸ்தவ பல்கலைக் கழகத்தை தோற்றுவிக்கப் போகின்றோம். அது உலகப் பிரகாரமான தொழிற் கல்வி பட்டம் பதவிகளை மக்களுக்கு கொடுக்கும் பல்கலைக் கழகம் அல்ல. அந்தப் பல்கலைக் கழகத்தில் உலக எழுப்புதலுக்கான பல்வகையான கருத்தரங்குகள், பயிலரங்குகள் நடைபெறுவதுடன், மக்களை இரட்சிப்புக்குள்ளாகவும், பரிசுத்தத்துக் குள்ளாகவும், பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்துக்குள்ளும் வழிநடத்தக்கூடிய கூட்டங்களும், வகுப்புகளும் நடைபெறும். தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தை ஆழமாகக் கற்றுக் கொள்ளக்கூடிய சிறப்பான பயிற்சிகளும் அங்கு அளிக்கப்படும் என்று நாங்கள் விபரமாகக் கூறியபோது எங்களுக்கு முன்பாகக்கூடியிருந்த பெருந்திரளான மக்கள் எங்களுடைய பரிசுத்த வாஞ்சைக்கு ஆதரவு தெரிவிப்பவர்களாக மிகுந்த மகிழ்ச்சிப்

பேரானந்தத்தால் தங்கள் கரங்களை அநேக நிமிடங்களுக்குத் தட்டிக் கொண்டே இருந்தனர்.

அதின் பின்னர் நான் தேவனுடைய செய்தியைப் பகிர்ந்து கொண்டேன். செய்தி முடிவில் நூற்றுக்கணக்கானோர் தங்களை ஆண்டவருக்கு திரும்பவும் ஒரு தடவை ஒப்புக்கொடுத்தவர்களாக முன் வந்தனர். அத்துடன் முதன் முறையாக கர்த்தருக்கு தங்களை ஒப்புக்கொடுத்தும் மக்கள் முன் வந்தனர். அந்தக் கூட்டத்தைத் தொடர்ந்து நாங்கள் இங்கிலாந்தின் பல இடங்களிலும் உயிர் மீட்சி கூட்டங்களை நடத்தினோம். எங்களோடு 50 பேர்கள் கொண்ட பாடகர் குழு வந்து கொண்டேயிருந்தனர். கர்த்தருக்கு துதி உண்டாவதாக.

''உலக எழுப்புதல் பணி இயக்கத்துக்காக'' நாங்கள் ஒரு பெரிய இடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தோம். இந்தச் சமயத்தில் மேரிலி ஆண்டரூ என்ற சகோதரி 1983 ஆம் ஆண்டு கோடை காலத்தில் தனது வீட்டிற்குப் பக்கத்தில் 20 ஏக்கர் நிலப்பரப்பில் ஒரு மாபெரும் கட்டிடம் விற்பனைக்காக வந்துள்ளது என்று எனக்குக் கடிதம் எழுதியிருந்தார்கள். அது ஒரு அழகான இடம். ஒரு ஏரியையும் அது தன்னகத்தே கொண்டுள்ளது. 18 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அந்த கட்டிடம் பிரான்ஸ் தேசத்திலிருந்து வந்த கத்தோலிக்க துறவிகளால் கட்டப்பட்டதாகும். அந்த இடத்தின் பெயர் Waverley Abbey House என்பதாகும். அதின் விலைக் கிரயம் 325,000 பவுண்டுகள் ஆகும். எங்கள் வசம் 81,000 பவுண்டுகள் மட்டுமே இருந்தன. நாங்கள் ஒரு கிறிஸ்தவ பயிற்சி மையம் ஆரம்பிக்கப் போகின்றோம் என்றும் வாங்கும் கடனை விரைவில் திரும்பச் செலுத்திவிடுவோம் என்றும் ஒரு பெரிய வங்கியின் உயர் அதிகாரிக்கு தெரிவித்தபோது அவர்கள் எங்கள் வார்த்தையை ஏற்றுக் கொண்டு எங்களுக்கு உதவி செய்தார்கள். அதின்படி அந்த இடத்தை வாங்கிவிட்டோம்.

ஆனால், நாங்கள் வங்கிக்குச் செலுத்த வேண்டிய கடனும், நாங்கள் வாங்கிய கட்டிடத்தை பழுது பார்க்கவும் எங்களுக்கு மேற்கொண்டு 500,000 பவுண்டுகள் தேவைப்பட்டது. அன்பின் ஆண்டவர் இந்தப் பெருந் தொகையை தம்முடைய மக்கள் மூலமாக எங்களுக்குக் கொடுத்து உதவினார். எங்கள் அத்தியந்த தேவையை அறிந்த கர்த்தருடைய பிள்ளைகள் சுமார் 8000 மக்கள் மேற்கண்ட தொகையை தங்கள் காணிக்கைகளின் மூலமாக எங்களுக்குக் கொடுத்தனர். அதில் பெரிய காணிக்கை 20,000 பவுண்டுகளாகவும், சிறிய காணிக்கை இரண்டு சிறு குழந்தைகள் அனுப்பிய ஒரு பவுண்டுக்கும் குறைவான காணிக்கையுமாகும். அந்த 2 குழந்தைகளும்

தாங்களும் ஆண்டவருக்குக் காணிக்கை கொடுக்க வேண்டும் என்ற ஆவலில் தங்கள் பெற்றோரிடம் சொல்லி தாங்கள் இதுவரை சேகரித்துள்ள சிறு சேமிப்பு பெட்டியைத் திறந்து தரும்படியாகக் கேட்டு அவர்களுடைய சேமிப்பை எங்களுக்கு அனுப்பியிருந்தனர். ஆ, தேவனுடைய வழிநடத்துதல் எப்படி என்று பாருங்கள்! உலக எழுப்புதல் பணி இயக்கத்துக்காக கர்த்தர் நமக்குத் தந்த அழகான கட்டிடத்தை நீங்கள் இந்தச் செய்தியில் காண்பீர்கள்.

நான் கடந்து சென்ற கண்ணீரின் பாதைகள்

1986 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் எனது மனைவி ஈனிட் ஓஸ்மாண்ட் அவர்களுக்கு இருந்த புற்று நோய் திரும்ப வந்திருப்பது மருத்துவர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. இந்த தடவை அது கல்லீரலுக்கு பரவியிருப்பது தெரிய வந்தது. அவர்களுக்கு மருத்துவம் அளித்த மருத்துவர்கள் அவர்களுக்காக தாங்கள் இனி எதுவும் அதிகமாகச் செய்ய இயலாதென்றும், கூடிப்போனால் ஈனிட் 3 மாதங்களுக்கு மேல் உயிர் வாழ்வது கடினம் என்றும் சொல்லிவிட்டார்கள். மருத்துவர்கள் என்னிடம் சொன்ன காரியத்தை நான் மனைவிக்கு சொல்லுவதா அல்லது மறைத்து வைத்து சும்மா இருந்துவிடலாமா? என்று நான் அதிகமாக யோசித்தேன். இறுதியில், அவர்களுடைய புற்று நோயின் அகோரத்தைக் கூறி அவர்கள் இந்த உலகத்தில் இருக்கக்கூடிய மிகவும் குறுகிய மாதங்களை அவர்களுக்கு எடுத்துச் சொன்னபோது அவர்கள் அதைக் குறித்து ஒரு சிறு துளிதானும் மரண பயமோ அல்லது கவலையோ கொள்ளவில்லை.

ஈனிட் மரிப்பதற்கு அநேக நாட்களுக்கு முன்பே எனது தாயாரும், சகோதரியும் வேல்ஸ் நாட்டிலிருந்து என்னிடம் வந்து எனக்கு உதவி செய்தார்கள். ஈனிட்டுக்கு செய்ய வேண்டிய எல்லா மருத்துவ உதவிகளையும் நானே செய்து அவர்களது மரணம் எங்கள் வீட்டிலேயே இருக்க வேண்டுமென்று நான் அதிகமாக விரும்பினேன். அதற்காக நான் செய்ய முடியாத காரியங்களை செய்ய வசதியாக ஒரு மருத்து தாதியையும் உதவிக்கு என்னுடன் வைத்திருந்தேன். அதின் பின்னர் 2 மருத்துவ தாதிகளையும் கூட வைத்துக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டது. எவ்வளவோ பக்குவமாகக் காரியங்களைச் செய்த போதினும் ஈனிட் திடீரென தன்னறிவிழந்த கோமா நிலைக்குள்ளாகி ஒரு சில மணி நேரத்திற்குள்ளாக அவர்கள் மரித்து விட்டார்கள்.

தன்னறிவிழந்த நிலைக்குள் ஈனிட் செல்லுவதற்கு முன்னர் ஒரு நாள் இரவு நாங்கள் இருவரும் ஒன்றாகக் கூடி ஜெபித்த பின்னர் அவர்கள் என்னைப் பார்த்து ‘‘தேவன் எவ்வளவாக என்மேல் அன்புகூருகின்றார், எத்தனையாக எனக்காகக் கரிசனைப்படுகின்றார் என்பதை நீங்கள் என்மேல் பாராட்டிய மட்டற்ற அன்பின் மூலமாக காண்பித்ததற்காக நான் உங்களுக்கு என் முழுமையான நன்றியைத் தெரிவிக்கின்றேன்’’ என்று சொன்னார்கள். ஈனிட்டின் அடக்க ஆராதனை வால்டன் பாப்திஸ்த்து தேவாலயத்தில் நடைபெற்றது. ஈனிட்டின் அடக்க ஆராதனை நடந்த மறு நாள் நான் எனது காரை அதின் ஷெட்டிலிருந்து எடுத்து பெட்ரோல் நிரப்புவதற்காக கொண்டு சென்றேன். கொண்டு சென்ற நான் அடுத்து என்ன செய்வதென்று தெரியாமல் அந்த பெட்ரோல் நிலையத்திலேயே நிலை தடுமாறி அநேக நிமிடங்கள் அப்படியே நின்று கொண்டிருந்தேன். அதற்குப் பின் வந்த அநேக நாட்களிலும் எனது கவனம் முழுமையாக சிதறுண்டு ஏதோ ஒரு சொப்பனத்தில் நான் ஆகாயத்தில் நடந்து கொண்டிருப்பதைப் போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. ஏதோ ஒன்று எனது ஆத்துமாவை இரண்டறப் பிழந்துவிட்டதைப் போன்று நான் எண்ணினேன். மெய்தான், ஈனிட்டை நான் கர்த்தருக்குள்ளாக அவ்வளவாக நேசித்திருந்தேன்.

2001 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் என் இருதயத்தை உடைத்து நொறுக்கக்கூடிய மற்றொரு சம்பவத்தை நான் எதிர்கொள்ள வேண்டியதானது. எனது மூத்த குமாரன் டேவிட் மாரடைப்பினால் மரித்துப் போனான். அவனுடைய மகள் ஷெரில் நள்ளிரவில் எனக்குப் போன் பண்ணினாள். மகனுடைய சரீரம் வைக்கப்பட்டிருந்த போன்மவுத் என்ற இடத்திற்கு நான் அந்த ராக்காலத்திலேயே எனது காரை எடுத்துக்கொண்டு சென்றேன். மகனுடைய சடலம் வைக்கப்பட்டிருந்த அறையில் குடும்பம் ஆழ்ந்த துயரத்துடன் அமர்ந்திருந்ததை நான் காண முடிந்தது. டேவிட் எனக்கு மகனாகவும், என்னை மிகவும் ஆழமாக நேசித்த ஒரு நண்பனாகவும் இருந்தான். அவனது தாயார் ஈனிட் இறந்தது முதல் அநேகமாக தினமும் அவன் எனக்குப் போன் செய்து என்னை ஆறுதல் படுத்துவது அவனுக்கு வழக்கமாக இருந்தது. அவன் மரணம் அடையும் நாள் வரை அதைச் செய்து வந்தான். டேவிட் தனது வாலிப பிராயத்திலேயே தன்னைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்திருந்தான். அவன் தனது வாழ்வில் ஒரு பிரபல்யமான டென்னிஸ் விளையாட்டு வீரனாக ஆகக்கூடிய வாய்ப்பு மிகவும் பிரகாசமாக இருந்தது. ஆனால், என்னோடு கூடச் சேர்ந்து தேவனுடைய ஊழியத்தைச் செய்ய வேண்டும் என்ற பரிசுத்த ஆவலில் அந்த உலகப் புகழ்ச்சியை

குப்பையென வீசி எறிந்துவிட்டான். அவனுடைய மரணத்தின் மூலமாக நான் ஒரு அன்பான மகனையும் ஒரு ஆப்த நண்பனையும் நான் இழந்தவனானேன். தனது பள்ளிப் படிப்பை அவன் விட்டதிலிருந்து தேவ ஊழியத்தின் பாதையில் அவன் எனக்கு மிகவும் பயனுள்ளவனாக இருந்தான். நான் எழுதும் ''அனுதினமும் இயேசுவுடன்'' என்ற எனது தியானச் செய்தி புத்தகங்களை இராப்பகலாக நின்று அச்சிட்டு பல்லாயிரக்கணக்கான பணத்தை கர்த்தருக்காக அவன் மிச்சப்படுத்திக் கொடுத்தான். அச்சுக் கலையில் அவன் திறம்பட்டவனாக விளங்கினான்.

நான் அடிக்கடி என்னையே கேட்கும் ஒரு கேள்வி என்னவெனில் எனது குடும்பத்தில் நிகழ்ந்த எதிர்பாராத மரணங்களின் மத்தியில் நான் எப்படி நிலைத்து நிற்கின்றேன் என்பதுதான். எனக்கு கர்த்தர் கொடுத்த 2 மகன்களையும் 10 மாத இடைவெளிக்குள்ளாக நான் இழந்துவிட்டேன். அப்படியே எனது விருத்தாப்பியத்தில் என்னோடிருந்து என்னைத் தாங்கி அரவணைக்கக் கூடிய என் அன்பான மனைவியும் என்னைவிட்டுக் கடந்துவிட்டார்கள். உங்களிடத்தில் உண்மையைச் சொல்லுகின்றேன். அநேக தடவைகளிலும் எனது ஆறாத துயரத்தின் காரணமாக என் கண்களிலிருந்து வியாகுலக்கண்ணீர் வடிகின்றது. எனது தியானச் செய்திகளை வாசிக்கும் மக்களுக்காக நான் உள்ளத்தை நெகிழ்விக்கும் அருமையான ஆறுதலின் ஜெபங்களை நான் எழுதுகிறவனாக இருந்தும், அதே சமயத்தில் நானே என்னளவில் ஜெபிக்க முடியாத அளவுக்கு துயரங்கள் எல்லை தாண்டிச் சென்றிருக்கின்றன. எனக்கு யாரோ ஒரு தேவப்பிள்ளையால் கொடுக்கப்பட்ட ஒரு அழகான தட்டு எனது வீட்டில் தொங்குகின்றது. அதில் எழுதப்பட்ட ஒரே ஒரு சிறிய எழுத்து **''இயேசு''** என்பது மட்டுமே. நான் எனது ஆறாத் துயர நேரங்களில் தேவ சமூகத்தில் முழங்காலூன்றி ஜெபிக்கக்கூடாதவனாக இருக்கும் வேளைகளில் சுவரில் தொங்கிக் கொண்டிருக்கும் அந்தத் தட்டிற்கு முன்பாக வந்து நின்று அந்த தட்டிலுள்ள வார்த்தையை கண்ணீரோடு உற்று நோக்கி எனக்குள்ளாக அமர்ந்த குரலில் **''இயேசு''**என்று மட்டும் கூறுகின்றேன். அந்த நேரங்களில் என்னை அறியாத ஒரு பரலோக சமாதானம் என் உள்ளத்தை ஆண்டு கொண்டு என் சஞ்சலத்தை மாற்றுவதை நான் காண்கின்றேன். இதை வாசிக்கும் தேவ ஜனமே, உலகத்தின் ஆறுதல்கள் உனக்கு பயனளிக்காமல் நீ திகைக்கும் போது உன்னை ஆறுதல்படுத்தும் மிகவும் நிச்சயமான நம்பிக்கையின் வார்த்தை **''இயேசு''** என்பதை மிகவும் உறுதியாக உன் மனதில் வைத்துக் கொள்.

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு

ஒவ்வொரு தலைமுறையினரும் காலாகாலங்களில் கேட்கும் ஒரு கேள்வி என்னவெனில், இனி வரும் காலத்தில் என்ன நடக்கும்? என்பதே. இது சம்பந்தமாக இளைஞர்கள் கேட்பது முதியவர்கள் கேட்பதிலிருந்து சற்று வேறுபட்டதாக இருக்கும். ஆனால், எனது வாழ்க்கைச் சரித்திரத்தின் கடைசி அதிகாரத்துக்குள் வந்திருக்கும் எனக்கு அந்தக் கேள்வியானது பூரண மனோபாவத்துடன் காணப்படுகின்றது. மால்கோம் மக்கரிட்ஜ் என்ற தேவ மனிதர் தனது 80 ஆம் வயதில் தன்னைச் சந்திக்க வந்தவர்களிடம் ''கறைதிறையற்ற வெள்ளையாடை அணிந்திருக்கும் மிகவும் புத்திசாலியான ஒரு இளம் மருத்துவர் வந்து என்னைப் பரிசோதித்த பின்னர் ''இனிமேல் புது வாழ்வுக்கு உங்களை உயிர்ப்பிப்பது முற்றும் கூடாத காரியம் என்ற வார்த்தைகளை உதிர்ப்பார்'' என்று கூறினார். அந்த பெரிய மனிதர் மொழிந்த வார்த்தையையே நான் மிகுந்த மன எழுச்சியோடு இந்த வேளை நினைவு கூறுகின்றேன்.

என்னைப் பெற்ற என்னுடைய அருமைத்தாயார் இன்றும் உயிரோடு இருக்கின்றார்கள். நான் இதை எழுதுகின்ற பொழுது அவர்கள் தனது 97 ஆம் பிறந்த நாளை கொண்டாடியிருக்கின்றார்கள். தான் வாலிபப் பெண்ணாக 27 வயதாக இருந்தபோது அவர்களுடைய கண்கள், காதுகள், பற்கள் எல்லாம் எந்தவிதமாக இருந்ததோ அதேவிதமாக இந்த தள்ளாத வயதிலும் அவைகள் இருக்கின்றன. நான் அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் நான் அவர்களுடைய வயது வரை இந்த உலகத்தில் உயிர் வாழ முடியுமா என்று என்னை நானே கேட்டுக் கொள்ளுகின்றேன். 1995 ஆம் வருடத்தில் மருத்துவர்கள் என் உடம்பில் புற்று நோய் இருப்பதைக் கண்டு பிடித்தார்கள். அந்த ஆண்டில்தான் நான் ''அனுதினமும் இயேசுவுடன்'' என்ற எனது தினசரி தியானக் குறிப்பில் எனது வாசகர்களுக்கு **மோட்சம்** என்ற தலைப்பில் தியானச் செய்திகளை எழுதலானேன். அந்த ஆண்டுடனேயே எனது பூவுலக வாழ்க்கை முற்றுப்பெற்று நான் என் பரம எஜமானருக்குச் செய்யும் பணிகளும் ஓய்ந்து நித்திய இளைப்பாறுதலுக்குள் நான் பிரவேசித்துவிடுவேன் என்று மிகவும் உறுதியாக நம்பலானேன். ஆனாலும், பல்லாயிரக்கணக்கான கர்த்தருடைய பிள்ளைகளின் ஜெபங்களினாலும், மிகவும் கைதேர்ந்த வைத்திய சிகிட்சைகளாலும் இன்று நான் உயிரோடிருந்து 60 ஆண்டு காலத்திற்கு முன்னர் தமது பரலோக பணிக்காக என்னை அழைத்த அவருடைய பணியை மிகவும் ஆனந்த களிகூருதலோடு தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றேன்.

அநேக ஆண்டுகளுக்கு முன்னர் சுவிட்சர்லாந்து தேசத்திலுள்ள அதின் உயர்ந்த ஆல்ப்ஸ் மலைகளில் தனது முதல் மலை ஏற்றத்திலேயே தவறி விழுந்து மரித்துப்போன ஒரு மலை ஏற்ற வீரரின் கல்லறையை நான் காணச் சென்றிருந்தேன். ''மலை உச்சிக்கு ஏறிக்கொண்டிருக்கும்போதே இறந்து போனார்'' என்று அவரது கல்லறையில் வாசகம் பொறிக்கப்பட்டிருந்தது. என்றைக்கு நான் அன்பின் ஆண்டவரை என் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டேனோ அந்த நாளிலிருந்தே நான் அவரையும், அவரது வேத வசனங்களையும் அதிகமாக அறிந்து கொள்ள வேண்டுமென்ற தணிக்க முடியாத தாகமும், நான் அறிந்து கொண்ட பரிசுத்த அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டுமென்ற ஆவலும் என்னில் எழுந்தது. அந்தக் காரியத்தை நான் எனது முழு மூச்சோடு நிறைவேற்றிக் கொண்டிருக்கும் வேளையில் எனது பரம அழைப்பு வரவேண்டுமென்பதே என்னுடைய உள்ளமுருகிய ஜெபமாகும்.

இந்த உலக வாழ்வில் நான் எனது கடைசிப் பயணத்தில் இருக்கும் இந்த வேளையில் நான் அதிகமாகத் துக்கப்படும் ஒரு காரியம் என்னவெனில் தேவன் தமது பிள்ளைகள் ஒவ்வொருவருக்கும் மோட்சத்தில் ஸ்தலங்களை ஆயத்தம் பண்ணியிருக்கின்றார் என்ற சத்தியத்தை நாம் ஏன் கடந்த கால ஆண்டுகளில் பிரசங்கியாமல் போய்விட்டோம் என்பதுதான். மோட்சத்தைக் குறித்து நான் பல தடவைகளிலும் பிரசங்கித்திருக்கின்றேன் என்பது மெய்தான். இருப்பினும் அந்தப் பிரசங்கங்களில் ஒரு உண்மையான உந்துதல் இல்லை என்பதை உங்களுக்கு முன்பாக நான் ஒத்துக் கொண்டுதான் ஆகவேண்டும். மோட்ச பாக்கியங்களின் ஒளியில் வாழ்கின்ற நம்மை அந்த ஒளி மற்றவர்களுக்கு உதவிசெய்கின்ற காரியத்தில் பின்னிடையப் பண்ணாது. அத்துடன் அந்த ஒளியானது, நமது பூமிக்குரிய வாழ்க்கை எத்தனை வலுமையானதாகவும், எத்தனை உறுதியாகவும் இருந்தாலும் ஆண்டவரிடமிருந்து அழைப்பு எந்த நேரம் வந்தாலும் நாம் உடனடியாக நமது கூடாரத்தின் முளைகளைப் பெயர்த்துக்கொண்டுவிட வேண்டும் என்பதை அது நமக்குப் போதிப்பதாக இருக்கின்றது. மெய்யாகவே நாம் இந்த உலகத்தில் அந்நியரும், பரதேசிகளுமாயிருக்கின்றோம் என்பதில் எந்த ஒரு சந்தேகமுமே கிடையாது. தம்முடைய நித்திய விண்வீட்டிற்கு இயேசு இரட்சகர் என்னை அழைக்கும் அவருடைய கீழ்க்கண்ட வார்த்தைகள் இந்த நாட்களில் மிகவும் வல்லமையாக என்னில் கிரியை நடப்பித்தை நான் காண்கின்றேன்.

''என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு, அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்'' (யோவான் 14 : 2,3)

இயேசு இரட்சகர் எனக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணியிருக்கின்றார் என்ற நினைவு என்னை ஆச்சரியத்தால் பிரமிக்கப்பண்ணுவதாக இருக்கின்றது. சில காலத்திற்கு முன்னர் மிகவும் ஜன நெருக்கடியான ஒரு கூட்டத்தில் நான் கலந்து கொள்ளுவதற்காகச் சென்றேன். இந்தக் கூட்டத்தில் நமக்கு உட்காருவதற்கு எப்படி ஒரு இடம் கிடைக்கப் போகின்றது என்று நான் எனக்குள் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில்தானே கூட்டத்திலிருந்த ஒருவர் என்னைப் பார்த்து ''செல்வின், இங்கே வந்து இவ்விடத்தில் உட்காருங்கள். நீங்கள் உட்காருவதற்காக நான் ஒரு இடத்தை ஏற்கெனவே கண்டு பிடித்து அதைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றேன்'' என்று சொன்னார். நான் உட்காருவதற்காக யாரோ ஒருவர் ஒரு இடத்தை எனக்குப் பத்திரப்படுத்தியிருக்கின்றார் என்ற நினைவு எனக்கு ஆச்சரியமாக இருந்தது. எனக்காக மோட்சத்தில் ஒரு இடம் ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. அதைப் பெற்றுக்கொள்ளுவதற்காக நான் எனது கைகளாலும், கால்களாலும் இனி நான் தவழ்ந்து ஏறிக்கொண்டிருக்க அவசியமில்லை. அது எனக்காக காத்துக் கொண்டிருக்கின்றது. அது மட்டுமல்ல, எனக்காக ஆயத்தம் செய்யப்பட்டுள்ள அந்த மோட்ச வாசஸ்தலத்திற்கு எனது இரட்சகரே என்னை அழைத்துச் சென்று அமரப்பண்ணுவார். அல்லேலூயா.

சமீப கால சரித்திரத்தில் ஒரு ஆச்சரியமான சம்பவம் நிகழ்ந்தது. அப்பொல்லோ விண் வெளி ஓடம் - 13 தனது விண்வெளிப் பயணத்தை முடித்து பூமிக்குத் திரும்பியது. பூமியிலுள்ள விண்வெளி கட்டுப்பாட்டு நிலையத்திற்கும் விண்வெளி ஓடத்திற்கும் இடையே சில கோளாறுகள் இருந்தன. கோளாறுகளை நிவிர்த்தி செய்து விண்வெளி வீரர்களைப் பத்திரமாக பூமிக்கு கொண்டு வந்து சேர்க்க கட்டுப்பாட்டு நிலையம் கடுமையாகப் போராடிக் கொண்டிருந்தது. இந்தப் போராட்டத்தை முழு உலகமே தங்கள் தொலைக்காட்சி பெட்டிகளில் பார்த்துக் கொண்டிருந்தது. விண் வெளி வீரர்கள் அணிந்திருக்கும் வெப்பத்தடுப்புக் கேடயம்

பழுதில்லாமல் இருக்குமா? அவர்கள் கொண்டு வரும் விண்வெளிக் குடைகள் தக்க சமயத்தில் விரிந்து கொடுக்குமா? அவர்கள் பயணம் செய்து வரும் விண்வெளிக்கூண்டு பூமியின் வெப்ப நிலைக்குள் வரும்போது அது பாதுகாப்புடன் நிலைத்து நிற்குமா? வினாடிகள் மணி நேரங்களைப் போலக் கடந்து சென்று கொண்டிருந்தது. தொலைக்காட்சி பெட்டியில் எந்த ஒரு சலனமும் கிடையாது. எங்கும் இருள். விண்வெளி வீரர்கள் அனைவருமே மறைந்துவிட்டனர். எல்லாக் கண்களும் வெறுமையான தொலைக்காட்சி திரையையே பரிதாபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தன. என்ன ஆச்சரியம், திடீரென விண்வெளிக் கூண்டு அழகாக விரிந்த குடைகளுடன் தெரிந்தது.

''ஹலோ ஹவுஸ்டன், நாங்கள் இங்கு ஒடிசி (தனது நாட்டை இழந்து 10 ஆண்டு காலம் சுற்றியலைந்த கிரேக்க இலக்கிய கதா பாத்திரம் ஒருவர்) பேசுகின்றோம். உங்களை மறுபடியும் கண்டது எங்களுக்கு மகிழ்ச்சி'' என்றார்கள் விண்வெளி வீரர்கள்.

''ஒடிசி, இங்கே நாங்கள் ஹவுஸ்டன். நாங்கள் உங்களை வீட்டிற்கு வரவேற்பதிலும், உங்களைக் காண்பதிலும் பேரானந்த சந்தோசம் அடைகின்றோம்'' என்றனர் தரைக் கட்டுப்பாட்டு நிலையத்தினர்.

எனக்கும் நான் நாடிச்செல்லும் பரலோக பாக்கிய தேசம் மேற்கண்டவிதமாகவே அமையும் என கர்த்தருக்குள் விசுவாசிக்கின்றேன். ஒரு தடவை ஒரு பிரசங்கியார் மோட்சம் சுமார் 18 அங்குல தூர இடைவெளியிலேயே நம்மைவிட்டு நழுவிப்போகலாம் என்றார். உங்கள் தலைக்கும், உங்கள் இருதயத்திற்கும் இடையிலுள்ள தூரம் சுமார் 18 அங்குல தூரமே. உங்கள் பூவுலக வாழ்வின் ஓட்ட முடிவில், நீங்கள் எதைக் கற்றுக் கொண்டீர்கள் என்பது காரியமல்ல, யாரைக் கற்றுக் கொண்டீர்கள் என்பதுதான் மகா முக்கியம். இயேசு இரட்சகர் உங்கள் இருதயத்தில் வாசம் பண்ணுவதை இன்றே நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

நான் எனக்குள் அடிக்கடி ஆச்சரியப்படும் ஒரு காரியம் உண்டு. ஆம், நான் எப்பொழுது மரிப்பேன்? நான் எங்கே மரிப்பேன்? நான் எப்படி மரிப்பேன்? என்பதுதான் அது. அப்படிப்பட்ட எந்த ஒரு காரியங்களும் நமக்கு முன் அறிவிக்கப்படாத போதினும் நான் மரித்த பின்னர் நான் என்றும் என் வாழ்வில் இதுகாலம் வரை அறிந்திராத ஆச்சரியமும், அற்புதமானதும், கண்களால் கண்டிராததும், காதுகளினால் கேட்டிராததுமான (1 கொரி 2 : 9) மாமாட்சியான காரியங்களை எனது மரணத்திற்குப் பின்னர் பரலோகில்

கண்டானந்திப்பேன் என்பதை முழு நிச்சயமாக நான் நம்புகின்றேன். யாவுக்கும் மேலாக என்னை எனது வாலிப வயதில் தமது சொந்தப் பிள்ளையாகத் தெரிந்து கொண்ட என் அன்பின் நேசர் இயேசுவை அங்கே முகமுகமாய்த் தரிசிப்பேன்.

10 ஆண்டு காலங்களுக்கு முன்னர் ஒரு சமயம் வந்தது, அப்பொழுது நான் எனது மோட்ச வீட்டிற்குப் போக ஆயத்தமாகவிருக்கின்றேன், எனினும், கொஞ்ச காலம் கூட என் ஆண்டவருக்கு ஊழியம் செய்வதற்காக இங்கு தாமதிக்க ஆசைப்படுகின்றேன் என்று சொன்னேன். ஆனால், இப்பொழுது காரியங்கள் முற்றும் வித்தியாசமான கோணங்களில் சென்று கொண்டிருக்கின்றது. ஆண்டவர் எனது கொடிய புற்று நோயிலிருந்து எனக்கு சற்று சுகம் கொடுத்திருக்கின்றார். இப்பொழுது நான் எனது மோட்ச வீட்டிற்குச் செல்ல விரும்புகின்றேன், ஆனால், என் கர்த்தருக்கு இன்னும் நான் இந்தப் பார்தலத்தில் தங்கி பணி செய்யவே வாஞ்சிக்கின்றேன் என்று சொல்லும் அளவுக்கு கர்த்தர் எனக்குக் கிருபை புரிந்துள்ளார். அல்லேலூயா.

செல்வின் குயிஸ் ஐ மாட்சியாக பயன்படுத்திய தேவன்

''உத்தமமான ஜனத்தைக் கர்த்தருக்கு ஆயத்தப்படுத்தும்படியாக'' (லூக்கா 1:17) தேவன் யோவான் ஸ்நானகனைத் தெரிந்து கொண்டதுபோல தம்முடைய இருதயத்திற்கேற்ற பரிசுத்த ஜனங்களை ஆயத்தப்படுத்தும் படியாக செல்வின் குயிஸ் அவர்களைக் கர்த்தர் தெரிந்து கொண்டார் என்று நாம் நிச்சயமாக நம்பலாம். அந்த தேவ மனிதரின் ஒரே வாஞ்சையும், கதறுதலும் 2004, 2005 ஆம் ஆண்டுகளில் தன்னுடைய வேல்ஸ் நாட்டில் பற்றி எரிந்த மாபெரும் எழுப்புதலின் அக்கினி உலகமெங்கும் பற்றி எரிய வேண்டும், தேவ ஜனங்களுக்கு தேவன் விரும்பும் மெய்யான சுத்த சத்தியத்தைப் போதிக்க வேண்டும், தேவ ஜனங்கள் தங்கள் பரிசுத்தமான வாழ்க்கையின் மூலமாக தங்களில் வாசம் பண்ணுகின்ற ஆண்டவர் இயேசுவை உலகுக்கு காண்பிக்க வேண்டும் என்பதாக இருந்தது. அந்த தேவ மனிதரின் வாஞ்சையை நிறைவேற்றும் விதமாக கர்த்தர் அவருடைய அனைத்து ஊழியங்களிலும் அவரோடு கூட இருந்து அவரது மாபெரும் தேவைகளை எல்லாம் அற்புதம் அதிசயமாகச் சந்தித்து, அநேக ஆயிரங்கள் அவரது ஊழியங்களின் மூலமாக தம்மண்டை வந்து சேர அவரைப் பயன்படுத்தினார்.

உலகத்தின் 150 நாடுகளில் செல்வின் குயிஸ் அவர்களுடைய எழுப்புதலின் ஊழியப்பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அநேகமாக அவர் உலகம் முழுவதிலும் சுற்றித் திரிந்து தேவ ஜனங்களுக்கு சுத்த சத்தியத்தைப் பிரசங்கித்திருக்கின்றார். அவருடைய தேவச் செய்திகளால் ஆண்டவரை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டவர்கள் ஏராளமானவர்கள். அப்படியே அவர் எழுதி வெளியிடும் மிகவும் அருமையான ''அனுதினமும் இயேசுவுடன்'' என்ற அனுதின தியானச் செய்தி அதை வாசிப்போர் மத்தியில் ஒரு பெரிய உயிர் மீட்சியைக் கொண்டு வந்திருக்கின்றது. உலகத்திலுள்ள நாடுகளில் 150 நாடுகளில் உள்ள 10 லட்சம் மக்கள் செல்வின் குயிஸ் அவர்களின் ''அனுதினமும் இயேசுவுடன்'' என்ற தியானச் செய்தியை வாங்கி வாசித்து மட்டற்ற ஆவிக்குரிய ஆசீர்வாதங்களைக் கண்டடைந்து வருகின்றனர். நைஜீரியா நாட்டில் மாத்திரம் 130,000 மக்கள் அதை வாங்குகின்றனர். இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கென்யா, கனடா, பிரேக், ஜாம்பியா போன்ற நாடுகளில் உள்ள சிறைக் கைதிகளுக்கு ''அனுதினமும் இயேசுவுடன்'' என்ற தியானச் செய்தி முற்றும் இலவசமாக அனுப்பப்படுகின்றது. உலகத்தின் பல மொழிகளிலும் அது மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. செல்வின் குயிஸ் அவர்களின் உலக எழுப்புதல் பணி இயக்கத்திலிருந்து குழுக்கள் புறப்பட்டுச் சென்று உலகத்தின் அநேக நாடுகளில் உள்ள கிறிஸ்தவ சபைகளில் உயிர் மீட்சி கூட்டங்களை நடத்தி ஆவிக்குரிய பரிசுத்த தலைவர்களை உருவாக்கிக் கொடுக்கின்றது.

செல்வின் குயிஸ் 50 ஆவிக்குரிய கிறிஸ்தவ புத்தகங்களுக்கும் அதிகமாக எழுதி வெளியிட்டிருக்கின்றார். ஐரோப்பா கண்டத்திலேயே மிக அதிகமான கிறிஸ்தவ பக்தி விருத்தி இலக்கியங்களை எழுதி வெளியிட்டிருப்பது செல்வின் குயிஸ் தோற்றுவித்த ''உலக எழுப்புதல் பணி இயக்கம்'' என்று சொல்லப்படுகின்றது. எல்லா துதி கனம் மகிமை நம் ஆண்டவருக்கே. செல்வினை ஆண்டவர் பல்வேறு நாடுகளில் பயன்படுத்தி இருக்கும் விதத்தையும், அவருடைய ஊழியங்களால் ஆசீர்வாதம் பெற்ற மக்களின் அற்புத சாட்சிகளையும் விவரித்து எழுத தேவ எக்காளத்தின் கொஞ்சமான பக்கங்கள் போதாது. ''எனது சுய சரிதை'' என்ற அவர் எழுதிய 384 பக்கங்கள் கொண்ட புத்தகத்திலிருந்து தேவ மக்களாகிய உங்களுடைய ஆசீர்வாதத்திற்காக மிகவும் இரத்தினச் சுருக்கமாக இந்தச் செய்தியை உங்களுக்கு மொழிபெயர்த்துத் தந்திருக்கின்றேன். கர்த்தர் இந்த மெய் தேவ பக்தனின் பரிசுத்த வாழ்க்கையை உங்களுக்கு ஆசீர்வாதமாக்கித் தருவாராக.

செல்வின் குயிஸ் ஐ தேவன் பயன்படுத்தினதின் காரணங்கள்

தெற்கு வேல்ஸ் நாட்டின் சாதாரணமான ஒரு ஏழை நிலக்கரி சுரங்கத் தொழிலாளியை கர்த்தர் தமக்கெனத் தெரிந்து கொண்டு அவருடைய எழுத்தின் மூலமாகவும், அவருடைய பிரசங்கங்களின் மூலமாகவும் உலக கிறிஸ்தவ சபைக்கு ஒரு பெரிய உயிர் மீட்சியை கொண்டு வரச் சித்தங் கொண்டார் என்றால் அதற்குப் பின்னணியத்தில் கட்டாயம் காரணங்கள் இல்லாமல் இல்லை.

தன்னை முற்றுமாகக் கர்த்தருக்கு ஒப்புவித்தவர்.

''தன்னை முற்றுமாக ஆண்டவருக்கு ஒப்புவித்த ஒரு மனிதனை அவர் பயன்படுத்தும் விதத்தை உலகம் இன்னும் காணவில்லை'' என்ற வார்த்தையின்படி யார், யார் தங்களை கர்த்தருக்கு முழுமையாக ஒப்புவிப்பார்களோ அவர்களை அவர் இன்றும் மிகவும் வல்லமையாக பயன்படுத்த ஆயத்தமுள்ள தேவனாக இருக்கின்றார். தனது 16 ஆம் வயதில் ஃபாச்சர் கிராமத்திலுள்ள ஒரு சிறிய தேவாலயத்தில் ஒரு இரவு வேளை தன்னைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்த செல்வின் பின் நாட்களில் கிராஸ்கேஸ் கிராமத்தில் நடந்த ஒரு ஜெபக்கூட்டத்தில் தன்னை தேவனுடைய முழு நேர ஊழியத்திற்காக ஒப்புக்கொடுத்தார். தன்னை முழு நேர ஊழியத்திற்கு ஒப்புக் கொடுத்த அந்த நாள் இரவு முழுவதும் வீட்டிற்குப் பக்கத்திலுள்ள மலைக்கு ஏறிச் சென்று அங்கு கர்த்தருக்கு தன்னை ஒப்புவித்து ஜெபித்துடன் அந்த மலையில் தன்னைச் சுற்றிக் கிடந்த கற்களைப் பொறுக்கி ஒரு பலிபீடத்தை உண்டாக்கி அதின்மேல் காய்ந்த சறுகுகளையும், செடிகொடிகளையும் போட்டு அதின்மேல் மல்லாந்து படுத்து தன்னை முற்றுமாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து அவர் தன்னை எப்படி எப்படி பயன்படுத்த சித்தங்கொள்ளுவாரோ அப்படியே எடுத்துப்பயன்படுத்த ஆண்டவரை நோக்கி மன்றாடினார். இந்தவிதமாக நம்மை நாம் தேவனுக்கு ஒப்புக்கொடுப்போமா என்பதை நாம் சற்று நேரம் யோசித்துப் பார்ப்போம். ஆனால், செல்வின் அப்படிச் செய்தார். கர்த்தர் அந்தப் பாத்திரத்தை அற்புதமாகப் பயன்படுத்தினார்.

உண்மையுள்ள தேவ மனிதர்

''என் தாசனாகிய மோசேயோ அப்படிப்பட்டவன் அல்ல, என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன் (எண் 12 : 7) என்று தமது தாசன்

மோசேயின் உண்மையைக் குறித்து தேவன் புகழ்ந்து பேசுகின்றார். தமக்கு ஊழியம் செய்கின்ற ஊழியர்களிடத்திலும், தமது இரத்தத்தால் கழுவப்பட்ட தமது பரிசுத்த ஜனத்திடத்திலும் ஆண்டவர் உண்மையை எவ்வளவாக எதிர்பார்க்கின்றார் என்று பாருங்கள். என்னைப் பலப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னை உண்மையுள்ளவனென்று எண்ணி இந்த ஊழியத்திற்கு ஏற்படுத்தினபடியால் அவரை ஸ்தோத்திரிக்கின்றேன் (1 தீமோ 1:12) என்றார் பவுல் அப்போஸ்தலன். தேவன் எதிர்பார்க்கும் இந்த உண்மை தேவ மனிதர் செல்வினிடம் காணப்பட்டது. தமது தேவ ஊழியங்களுக்காக பல கோடி ரூபாய்கள் வருகின்ற போதினும், அவரது ஊழியங்கள் அனைத்தின் நிர்வாகங்களும் அவருடைய கரங்களில் மட்டுமே இருந்தபோதினும் அவர் தமக்கு வருகின்ற அந்தப் பணங்களை தனது சொந்த செலவுகளுக்காகவோ அல்லது தனது குடும்பத்தினருடைய செலவுகளுக்காகவோ எடுத்து பயன்படுத்துவது கிடையாது. வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளில் அந்த தேவ மனிதர் எடுக்கும் வேதாகம வகுப்பில் கலந்து கொள்ளும் தேவ மக்களிடம் காணிக்கைகள் எடுக்கப்படும். அந்த காணிக்கை முழுவதும் அவருக்குரியதாகும். அதை வைத்தே அவர் தனது காரியங்களை கவனித்து வந்தார். தான் எங்கிருந்தாலும், தன்னுடைய செலவுகளுக்காக சேகரிக்கப்படும் காணிக்கைக்காக அந்தக் கூட்டத்தில் வந்து எப்படியாயினும் கலந்துகொண்டு தேவச் செய்தி கொடுப்பேன் என்று செல்வின் கூறுவார். ஆ, எத்தனை பெரிய உண்மை! எத்தனையான ஒழுங்கு! அவர் எழுதியிருக்கும் அவருடைய சுய சரிதையை நீங்கள் வாசிப்பீர்களானால் தனது வாழ்க்கை முழுவதையும் எந்த ஒரு ஒளிவு மறைவின்றி அவர் அங்கு எழுதியிருப்பதை நீங்கள் கண்டு ஆச்சரியப்படுவீர்கள். தனது வாழ்வில் தான் நடந்து கொண்ட யோசனையற்ற மதியீனமான காரியங்களை எல்லாம் அவர் ஒரு குழந்தையைப் போல நமக்கு விவரித்துக் கூறுவார். தனது இளைய குமாரன் ஜாண் ஆண்டவருக்குத் தன்னை ஒப்புக்கொடுக்காமல் தனது கடுமையான குடிப்பழக்கத்திலேயே திடீரென மரித்துப் போன காரியத்தையும் அவர் மறைத்து வைக்காமல் துயரத்தோடு குறிப்பிடுவதை நாம் காணலாம். தனது மனந்திரும்புதலுக்கு முன்னான வாலிப நாட்களில் தனது வாழ்வில் ஏற்பட்ட காதல் தோல்வியையும் கூட துயரத்தோடும், மிகுந்த வெட்கத்தோடும் நமக்கு முன்பாக வைப்பது நமக்கு ஆச்சரியத்தைக் கொடுப்பதாகவிருக்கும். எந்த ஒரு ஒளிவு மறைவின்றி உண்மையையே பேசுவதையும், உண்மையையே எழுதுவதையும், தன் தேவனுக்கு முன்பாக உண்மையாக நடப்பதையும் அந்த தேவ மனிதர் அதிகமாக வாஞ்சித்துக் கதறினார்.

சுத்த சத்தியத்தை தேவ ஜனங்களுக்கு போதித்த சத்திய நேசன்

கர்த்தருடைய ஊழியங்களைக் கொண்டு பணம் சம்பாதிக்கும் வியாபார நோக்கத்தோடும், பெயர் புகழுக்காகவும் மக்களுக்கு கவர்ச்சியைக் கொடுக்கக் கூடிய செய்திகளை தேவ ஊழியர்கள் பலரும் இந்தக் கடைசி நாட்களில் கொடுத்து வருவதை நாம் அறிவோம். குறிப்பாக, சொற்ப காலம் மாத்திரமே நிலைத்து நிற்கக்கூடிய நமது சரீரத்திற்கான சுகத்தைக் குறித்தும், செழிப்பு, செல்வம், இந்த மாயாபுரிச் சந்தையின் ஆசீர்வாதங்களைக் குறித்தும் அவர்கள் மிகவும் பகட்டாகப் பேசும் வார்த்தைகள் நம்மைப் பரவசமடையச் செய்வதாக இருக்கும்.

ஆனால், தேவனால் மிகவும் வல்லமையாகப் பயன்படுத்தப் பட்டிருக்கும் ராட்சத பரிசுத்தவான்கள் அனைவரும், மேல் நாடுகளில் ஆனாலும் சரி, இந்தியாவில் ஆனாலும் சரி மாந்தரின் சரீர சுகத்தைக் குறித்துப் பேச அஞ்சி நடுநடுங்கினார்கள். சரீர சுகத்தைக் குறித்துப் பேசும்போது என்றும் நித்தியமாக நிலைத்து நிற்கக் கூடிய அவர்களுடைய ஆத்தும மீட்பின் காரியத்தையும், மனந்திரும்பி தங்கள் தேவனண்டை திரும்பும் ஜீவ வழியையும் மக்கள் தவறவிட்டுவிடுவார்கள் என்று அவர்கள் அதிகமாக அஞ்சினார்கள். பாவத்தின் அகோரம், அதின் கொடிய முடிவு, மனந்திரும்புதல், பாவ மன்னிப்பு, பரிசுத்தம், நினையா நேரம் சந்திக்கும் மரணம், முடிவில்லாத நித்தியம், நரகம், மோட்சம் போன்ற காரியங்களை அவர்கள் மிகவும் வற்புறுத்தினார்கள். தேவ மனிதர் செல்வின் குயிஸ் அவர்களும் தன்னுடைய ''அனுதினமும் இயேசுவுடன்'' என்ற தமது அனுதின தியானச் செய்தியில் கடந்த கால பக்தர்களின் பாதையிலேயே தனது தேவச் செய்திகளை எழுதி வருவதை அதை வாசிப்பவர்கள் எளிதில் கண்டு கொள்ளலாம். தேவ மக்களுக்குத் தேவையான, தேவன் விரும்பும் செய்திகளை அவர் உலகமெங்கும் சென்று பேசியும் எழுதியும் வருகின்றார். அப்படி அவர் தனது தியானச் செய்தியில் எழுதிய ஒரு செய்தியோடுதான் அவருடைய சுயசரிதை ஆரம்பமாவதை நீங்கள் இந்தச் செய்தியின் முகப்பில் கவனித்திருப்பீர்கள்.

மனத்தாழ்மை நிறைந்த தேவ மனிதர்

மிகவும் எளிமையாக நம் நடுவில் தங்கள் தேவ ஊழியங்களை ஆரம்பித்த தேவ ஊழியர்கள் பலரும் தங்கள் ஊழியங்களில் நிறைய பணம்

கிடைத்ததும் எப்படியாக மாறிவிட்டார்கள் என்பதை நாம் நன்கறிவோம். ஒரு காலத்தில் எவ்வளவு எளிமையான ஆடைகளை உடுத்தி எத்தனை எளிமையான செருப்புகளைப் போட்டிருந்த அவர்கள் இன்று மிகவும் ஆடம்பரமாக வாழ்வதையும், அவர்களுடைய பேச்சு வார்த்தைகள் எல்லாம் தங்களிடம் சேர்ந்து குவிந்துள்ள பணத்திற்குத் தக்கதாக எத்தனை பெருமையாக மாறிப்போனதையும் நாம் துக்கத்துடன் கவனிக்கின்றோம்.

மந்தைக்கு மாதிரிகளாக கண்காணிப்பு செய்யாத (1பேதுரு 5:3) அந்தக் கூட்டத்தில் நாம் நம்முடைய செல்வினைக் காணவியலாது. மிகவும் மனத்தாழ்மை நிறைந்த தேவ மனிதர் அவர். 2005 ஆம் ஆண்டு ஜூலை மாதம் அவர் கர்த்தருடைய பரிசுத்த நாம மகிமைக்காகப் பல்லாண்டு காலமாகச் செய்த சிறப்பான தேவ ஊழியத்தைப் பாராட்டி இங்கிலாந்திலுள்ள ஒரு புகழ்பெற்ற பல்கலைக்கழகம் அவருக்கு வேத பண்டிதர் (Doctor of Divinity) என்ற பட்டத்தை அவருக்குக் கொடுத்தது. அதைத் தனது கரங்களில் பெற்றுக் கொண்டு ''எனது இருதயம் எனது பரலோகத் தந்தையைக் குறித்த நன்றிப் பெருக்கால் பொங்கி வழிகின்றது'' என்று அவர் கண்களில் கண்ணீர் மல்கக் கூறினார்.

''செல்வின், நீங்கள் ஒரு மாபெரும் தேவ ஊழியர்தான். உங்களிடம் கர்த்தருக்காக சாதனைகள் படைக்கக்கூடிய சிறப்பான பரிசுத்த பண்புகள் இருக்கவே செய்கின்றது. அவைகள் உங்களிடம் இருப்பது அவசியம். தேவன் அவைகளைப் பயன்படுத்த விரும்புகின்றார். ஆனால் ஒன்றை மாத்திரம் நீங்கள் உங்கள் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள், நீங்கள் தேவனுக்காக செய்யும் காரியங்களைக் கொண்டு உங்கள் உண்மை மதிப்பு ஒருக்காலும் கணக்கிடப்படுவதில்லை. நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் உங்கள் அந்தரங்க வாழ்வில் எவ்வண்ணமாக இயேசுவைப்போலக் காணப்படுகின்றீர்கள் என்பதே கர்த்தர் எதிர்நோக்கும் காரியம்'' என்று ஜாய்ஸ் ஹல்க்கஸ் என்ற தேவ மனிதர் செல்வினைப் பார்த்து ஒரு தடவை சொன்னார். அந்த வார்த்தைகளைக் கேட்ட செல்வின் ஒரு குழந்தையைப் போல அழுதார். அதின் பின்னர், ஜாய்ஸ் ஹல்க்கஸ் என்ற அந்த தேவ மனிதரின் வார்த்தைதான் செல்வின் குயிஸ் அவர்களின் பரிசுத்த வாழ்வின் வழிகாட்டி நட்சத்திரமாக அமைந்தது. அந்த நட்சத்திரத்தின் வெளிச்சத்திலேயே அவர் வழி நடக்கலானார். கர்த்தருக்கே மகிமை.

தனது அன்பின் ஆண்டவரை அதிகமாக நேசித்த தேவ மனிதர்

''யோனாவின் குமாரனாகிய சீமோனே இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கின்றாயா?'' (யோ 21 : 15) என்று நம் அருமை இரட்சகர் அப்போஸ்தலனாகிய பேதுருவைக் கேட்பதை நாம் வாசிக்கின்றோம். ஆகவேதான், ''உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழு பலத்தோடும் அன்பு கூருவாயாக'' (மாற் 12 : 30) என்றார் அவர். தேவ மனிதர் பாஸ்டர் செல்வினும் தனது இரட்சகரை அதிகமாக நேசித்தவர். பிரிஸ்டோல் வேதாகம கல்லூரியிலிருந்து தனது நண்பர்களுடன் சேர்ந்து தங்களுடைய சுவிசேஷ கட்டை வண்டியை இழுத்துக் கொண்டும், பின்னாலிருந்து தள்ளிக் கொண்டும் செல்லுவதை நாம் கவனித்தோம். அவர்களுடைய செயலைக் கண்டு கிராம மக்களும், பிள்ளைகளும் கேலிபண்ணி சிரித்தார்கள், பரிகாசித்தார்கள். ஆனால், அதை எல்லாம் அவர் கண்டு கொள்ளவே இல்லை. தனது ஆண்டவருக்காக மிகவும் ஏழ்மையான ஒரு சபைக்கு பாஸ்டராகச் சென்று வாரத்திற்கு 2 ஷில்லிங் 6 பென்சைக் கொண்டு கடினமான வாழ்க்கையை நடத்தியவர். காலையில் 2 ரொட்டி துண்டுகள், மத்தியானம் ரொட்டியும் ஒரு கோப்பை தேநீர் பானமும், இரவில் ஒரு சிறிய பாக்கெட் சீவல்களும் வாலிப ஜவானான, நன்கு சாப்பிடக்கூடிய அவருக்கு ஆகாரமாக இருந்தது. கர்த்தரை நேசித்தபடியால் அவர் தனது வயிற்றைக் கட்டிக்கொண்டார். கர்த்தரை நேசிக்கும் காரணத்தால் தனது இந்த விருத்தாப்பிய வயதிலும், தனது உடம்போடு ஒட்டியிருக்கும் கொடிய புற்று நோயை சுமந்து கொண்டு உலகமெங்கும் சென்று பிரசங்கித்தும், தனது தியானச் செய்திகளை மக்களுக்கு எழுதிக்கொண்டும் இருக்கின்றார். தான் இதுவரை கர்த்தருக்கென்று செய்த திரளான தேவ ஊழியங்களோடு மனநிறைவுகொண்டு ஓய்வு எடுக்க அவர் கொஞ்சமும் விரும்பவில்லை. கர்த்தர் பேரில் அவரது அன்பு அத்தனை அதிகம்.

கர்த்தர் பேரில் எரிச்சலாகாத, கர்த்தரை முறுமுறுக்காத தேவ மனிதர்

தங்கள் வாழ்க்கையின் காரியங்கள் சீராகச் சென்று கொண்டிருக்கும் காலம் வரை சில கிறிஸ்தவ மக்கள் தங்கள் ஆண்டவரை நேசிப்பார்கள், அவர் பேரில் பக்தியாக இருப்பார்கள். ஆனால், ஏதாவது எதிர்மறையாக குடும்பங்களில் துன்பம், துக்கம், வியாதி, சடுதியான மரணங்கள்

ஏற்பட்டுவிட்டால் உடன்தானே தங்கள் ஆண்டவரை முறுமுறுக்கவும், தூஷிக்கவும் கூடத் தொடங்கிவிடுவார்கள். தனது அழகான இளம் மனைவி திடீரென இறந்துவிட்ட காரணத்தால் ஒரு கிறிஸ்தவ சகோதரன் மனைவியை அடக்கம் செய்துவிட்டு வீட்டிற்கு வந்தவுடன் முதல் வேலையாக வீட்டுச் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த கண்ணாடிச் சட்டங்கள் போடப்பட்ட எல்லா ஆண்டவருடைய படங்களையும், தேவனுடைய வசனங்களையும் சுவரில் வைத்தே தடிக்கம்பால் அடித்து நொறுக்கி அவைகளை எடுத்து அப்படியே குப்பைக் குழியில் வீசி எறிந்துவிட்டார்கள். எனது மிகவும் நெருங்கிய இனத்திலுள்ள ஒருவர் அதைச் செய்தார்கள்.

தேவ மனிதர் பாஸ்டர் செல்வின் அவர்கள் வாழ்க்கையில் முதலாவது நடந்த துயர சம்பவம், அவர்களுடைய மனைவி ஈனிட் ஒஸ்மாண்ட் அவர்கள் புற்று நோயால் கஷ்டப்பட்டு மரித்தார்கள். அடுத்தபடியாக அவர்களுடைய மரணத்திற்குப் பின்னர் கர்த்தர் அவர்களுக்கு கொடுத்திருந்த குடும்பஸ்தரான



2 வாலிப மகன்கள் டேவிட், ஜாண் என்ற அந்த இரு மக்களும் இறந்தனர். அத்துடன் காரியம் முற்றுப் பெறவில்லை. பாஸ்டர் அவர்களையே புற்று நோய் தாக்கி, அந்தப் புற்று நோயோடு போராடிக் கொண்டு, அந்தப் புற்று நோயை உடம்பில் சுமந்து கொண்டு தன் அன்பின் ஆண்டவருக்கு ஊழியம் செய்து கொண்டு வருகின்றார்கள். ஆனந்த களிகூருதலோடு தான் ஒரு காலத்தில் தனது அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள் இருவரோடு இருந்த நிலையையும், இப்பொழுது தான் முற்றும் தனியனாக இருப்பதையும் எண்ணி தன் ஆண்டவர் மேல் ஒரு சிறிய கசப்பு கூட கொள்ளவில்லை. தனது அன்பு

மனைவி ஈனிட் ஓஸ்மாண்ட் அவர்களோடும், தனது அருமைக் கண்மணி பிள்ளைகள் டேவிட் மற்றும் ஜாணுடன் கூட அவர்கள் மகிழ்ச்சியாக இருந்த நாட்களில் எடுத்த ஒரு புகைப்படத்தையும் நீங்கள் இங்கே காணலாம். தனது தற்போதைய முழுமையான ஏகாந்த தனிமை வாழ்வை செல்வின் எண்ணி எந்த ஒரு சோகமும், துயரமும், ஏக்கமும் அடையாமல் தான் தனது அன்பின் ஆண்டவர்மேல் தனது வாலிப நாட்களில் கொண்ட அதே வலுமையான நேசத்தோடு வளர்ந்து வந்து கொண்டிருக்கின்றார்கள். ''அவர் கர்த்தர், அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக'' (1 சாமு 3 : 18) என்று கூறிக்கொண்டு தன் அன்பின் இரட்சகருக்குள் அமைதியாகிவிட்டார்கள். தனது வாழ்வில் தனக்கு நேரிட்ட ஆறாத் துயரங்களைக் குறித்து தன் ஆண்டவரிடம் கேள்வி கேட்கத் துணியாமல் தனது கையினால் யோபு பக்தனைப் போல தனது வாயைப் பொத்திக் கொண்டார்கள் (யோபு 40 : 4) அன்பின் ஆண்டவர் இப்படிப்பட்ட பரிசுத்த தேவ மக்களையே எடுத்து எக்காலத்தும் பயன்படுத்துவார். அல்லேலூயா.

Translated from the book:- " MY STORY " By Selwyn Hughes (With Prior Permission)

Courtesy:- Crusade for World Revival,
Waverley Abbey House,
Waverley Lane, Farnham,
Surrey, GU9 8EP England.
Web Site:- www.cwr.org.uk
Email:- mail@cwr.org.uk

Ah ! Young men, young men ! can you seriously consider of the brevity of man's life, and trifle away your time, the offers of grace, your precious souls, and eternity? Surely you cannot, surely you dare not, if you do but in good earnest ponder upon the shortness of man's life. It is recorded of Philip, king of Macedon, that he gave a pension to one to come to him every day at dinner, and to cry to him, REMEMBER THOU ART BUT MORTAL.

(Thomas Brooks)

''ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்'' (லூக்கா 9 : 23)

''கிறிஸ்துவுடனே கூடச் சிலுவையில் அறையப்பட்டேன், ஆயினும் பிழைத்திருக்கிறேன், இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார், நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்'' (கலா 2 : 20)

''நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக, அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்'' (கலா 6 : 14)

கர்த்தருக்குள் எனக்கு மிகவும் அருமையானவர்களே,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினாலும் உங்களுக்கு கிருபையும், இரக்கமும், சமாதானமும் பெருக உண்டாவதாக.

இந்த தேவ எக்காள இதழ் உங்கள் கரங்களை வந்து சேரும்போது நீங்கள் புதிய ஆண்டான 2006 ஆம் ஆண்டின் முதல் மாதத்தையும் கூட முடித்து 2 ஆம் மாதத்திற்குள் நன்கு கடந்து சென்றிருப்பீர்கள் என்று நம்புகின்றேன். உங்கள் எல்லாருக்கும் எனது புத்தாண்டு வாழ்த்துக்களையும் ஸ்தோத்திரத்தையும் மிகவும் காலதாமதமாக தெரிவிக்கின்றேன். இந்தப் புதிய ஆண்டு தேவப் பிள்ளைகளாகிய உங்களுக்கும், உங்கள் அருமையான குடும்பத்தின் மக்கள் யாவருக்கும் எல்லா தேவ ஆசீர்வாதமும், தேவப்பிரசன்னமும், ஆண்டவரின் அடைக்கலப் பாதுகாவலும், அவருடைய பரிசுத்த சித்தம் ஒன்றே செய்ததும், அவருடைய பொங்கி வழியும் கிருபை நிறைந்த மனமகிழ்ச்சியின் வருடமாகவிருக்க அன்பின் பரம தகப்பன் உங்களுக்கு கிருபை செய்வாராக.

இந்த எளிய தேவ ஊழியத்தை உங்கள் தியாகமான காணிக்கைகளால் தாங்கி ஆதரித்து, இந்த ஊழியத்திற்காக ஒழுங்காக ஜெபித்து வரும் தேவப் பிள்ளைகளாகிய உங்களுக்கு கிறிஸ்துவுக்குள்ளான என் ஆழ்ந்த தேவ அன்பின் நன்றியைத் தெரிவிக்கின்றேன். எனது அன்றாடக ஜெபங்களிலும், எனது உபவாச ஜெப நாட்களிலும் உங்களுக்காக மிகுந்த தேவ அன்பின் பாரத்தோடு ஜெபித்து வருகின்றேன். வானத்தையும், பூமியையும் படைத்த சர்வ வல்ல தேவனின் இருதயத்திற்குகந்த பரிசுத்தமான ஒரு தேவ ஊழியத்திற்கு நீங்கள் உதவி செய்து ஆதரித்து வருவதைக் குறித்துக் கர்த்தரில் களிகூர்ந்து மகிழலாம். அதற்கான நித்திய பலன் பரலோகில் உங்களுக்கு உண்டு.

இந்த 2006 ஆம் ஆண்டின் ஒவ்வொரு நாளிலும் உங்களால் முடிந்த அளவு அதிக நேரத்தை ஆண்டவருடைய பாதங்களில் ஜெபத்தில் செலவிடுங்கள். உங்களில் பலரும் நாள் முழுவதும் உலகப்பிரகாரமான பணிகளில் இருப்பதால் பகற்காலங்களில் உங்களால் நேரம் கண்டுபிடித்து ஜெபிப்பது மிகவும் கடினமாக இருப்பதுடன் அது உங்களால் கூடாததாகவும் இருக்கலாம். ஆனால், இரவில் சற்று முன்கூட்டியே படுக்கைக்குச் சென்று இராஜாமங்களில் அல்லது விடிபகல் நேரங்களில் ஆண்டவரோடு ஜெபத்தில் போராடுங்கள். உங்கள் தூக்கத்திலிருந்து கண்விழித்து அடுத்த நாளை ஆரம்பிக்கும்போது ஓரிரு மணி நேர ஜெபத்தோடு தொடங்குங்கள். அதற்கான கிருபைகளை உங்களுக்குத் தரும்படி நீங்கள் படுக்கைக்குச் செல்லும் சமயத்திலேயே ஆண்டவரிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் சுயபெலத்தால் ஒன்றுமே செய்ய முடியாது (யோவான் 15 : 5) உங்கள் ஆத்துமா உங்கள் உலக வேலையைவிட ஒப்பிட முடியாத அளவிற்கு விலையேறப்பெற்றது என்பதை திட்டமாக உங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். நமது மண்ணான சரீரம் கூடிப்போனால் தேவனுடைய வார்த்தையின்படி 80 ஆண்டுகள் மாத்திரமே இந்த உலகத்தில் நிலைத்து நிற்கக் கூடியது (சங் 90 10). ஆனால், நமது மரணத்திற்குப் பின்னாலுள்ள நமது நித்திய வாழ்க்கைக்கு முடிவே கிடையாது. ''அழிந்து போகிற போஜனத்திற்காக அல்ல, நித்திய ஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்'' (யோவான் 6 : 27) என்ற தேவ வார்த்தையையும் ''சரீர முயற்சி அற்ப பிரயோஜனமுள்ளது. தேவ பக்தியானது இந்த ஜீவனுக்கும் இதற்குப் பின்வரும் ஜீவனுக்கும் வாக்குத்தத்தமுள்ளதாகையால் எல்லாவற்றிலும் பிரயோஜனமுள்ளது'' (1தீமோ 4 : 8) என்ற வார்த்தையையும் எப்பொழுதும் உங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.

ஜெபிப்பதைப் போல உங்களால் முடியும்போதெல்லாம் தேவ பெலத்தால் கட்டாயம் உபவாசியுங்கள். ஜெபம் சாதிக்க முடியாத காரியத்தை உபவாசம் இலகுவாக செய்து விடும். ஜெபமும், உபவாசமும் இல்லாத ஒரு கிறிஸ்தவன் உலகத்து மற்ற மனுஷரில் ஒருவனாவான். அவன் ஒரு கிறிஸ்தவன் அல்லவே அல்லன். உலகத்திலிருந்து நம்மை வேறு பிரித்துக் காட்டுவது நமது ஜெப உபவாச வாழ்க்கை மட்டுமேதான்.

உம்முடைய வேதத்தில் நான் எவ்வளவு பிரியமாயிருக்கிறேன்! நாள் முழுவதும் அது என் தியானம்'' (சங் 119 : 97) என்ற தாவீது ராஜாவின் அனுபவம் இந்தப் புதிய ஆண்டில் உங்கள் அனுபவமாக இருப்பதாக. உங்களால் முடிந்த அளவு அதிகமான தேவ வசனங்களை மனப்பாடமாகப் படித்து உங்கள் இருதயத்தில் வைத்துக்கொண்டு உங்கள் பிரயாணங்களிலும், படுக்கையிலும் நீங்கள் படித்த அந்த வசனங்களை உங்கள் மனதிற்குக் கொண்டு வந்து அவைகளைத் தியானியுங்கள். அந்த வசனங்களை நீங்கள் திரும்பத் திரும்ப உங்கள் மனதிற்குக் கொண்டு வரும்போது அவைகள் உங்கள் மனதில் நிரந்தரமாகப் பதிந்து கொள்ளும். நீங்கள் கற்றுக் கொண்ட தேவ வசனங்களுக்கு நடுநடுங்கி கீழ்ப்படியுங்கள் (ஏசாயா 66 : 2) ஆண்டவருடைய வசனங்களுக்கு நீங்கள் அடிபணிந்து ஜீவிக்கும்போதே உங்கள் அஸ்திபாரத்தை கிறிஸ்துவாகிய கன்மலையின் பேரில் ஆணித்தரமாகப் போட்டிருக்கின்றீர்கள் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளலாம் (லூக்கா 6 : 46 - 48). அதுமட்டுமல்ல, திருவசனத்திற்கு நீங்கள் கீழ்ப்படியும் போது ஒருக்காலும் இடறலடையமாட்டீர்கள் (1 பேதுரு 2 : 8) அத்துடன் வேத வசன அறிவு உங்கள் இருதயத்தை ஆளுகை செய்யும்போது சாத்தானால் உங்களை சிறை வைக்க முடியாது (ஏசாயா 5 : 13) அவனுடைய சங்காரத்துக்கும் நீங்கள் தப்பிக் கொள்ளுவீர்கள் (ஓசியா 4 : 6).

நீங்கள் எத்தனை பக்தி, பரிசுத்தம் உடையவர்களாக இருந்தாலும், உங்கள் வாயிலும், உதடுகளிலும் எப்பொழுதும் துதி, ஸ்தோத்திரம், அல்லேலூயா, ஆர்ப்பரிப்பு இருந்தாலும் உங்கள் வாழ்வில் ஈகை, இரக்கம், அன்பு, கருணை, மனதுருக்கம் இல்லாதவர்களாயிருந்தால் அந்த பக்தி வாழ்க்கை குப்பை மேட்டுக்குப் போக வேண்டிய பக்தியாகும். அந்த பக்தி வாழ்க்கையால் யாதொரு பயனும் கிடையாது. அதில் துளிதானும் சந்தேகமே இல்லை (மத் 12 : 7) ''ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறது போல கிரியையில்லாத விசுவாசமும் செத்ததாகும்'' (யாக் 2 : 26) ''திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை

விசாரிக்கிறதும், உலகத்தால் கறைப்படாதபடிக்கு தன்னைக் காத்துக் கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது'' (யாக் 1 : 27) என்று கர்த்தருடைய வார்த்தை திட்டமும் தெளிவுமாகக் கூறுகின்றது. ''துன்னாளைக் கண்டவனுக்காக நான் அழாதிருந்ததும், எளியவனுக்காக என் ஆத்துமா வியாகுலப்படாதிருந்ததும் உண்டானால்..........கர்த்தர் எனக்கு விரோதமாகத் தமது கையை நீட்டுவாராக'' (யோபு 30 : 25) என்றும் ''விதவையின் இருதயத்தைக் கெம்பீரிக்கப் பண்ணினேன்'' (யோபு 29 : 13) என்றும் யோபு பக்தன் கூறுகின்றார். ''சகலவித நற்கிரியைகளுமாகிய கனிகளைத் தந்து'' (கொலோ 1 : 9) ''நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய் கொடுக்கிறவர்களும், உதார குணமுள்ளவர்களாயிருக்கவும்................ அவர்களுக்கு கட்டளையிடு'' (1 தீமோ 6 : 18) என்று அப்போஸ்தலன் நிருபங்களில் திட்டமாக எழுதுவதை நாம் காண்கின்றோம்.

ஜெபம், உபவாசம், வேதவசன தியானம், தேவனுடைய திருவுளத்திற்குப் பிரியமான நற்கிரியைகள் போன்ற நான்கு காரியங்களையும் உங்கள் வாழ்வில் தேவ பெலத்தோடு இந்த புத்தாண்டில் அப்பியாசியுங்கள். உங்கள் கிறிஸ்தவ வாழ்க்கை நிச்சயமாக கனி நிறைந்ததாகவும், கர்த்தருக்குள் மகிழ்ச்சி நிரம்பியதாகவும் இருக்கக் காண்பீர்கள். இந்த பரிசுத்த காரியங்களை எல்லாம் உங்கள் வாழ்வில் நடப்பிக்கக் கூடியது உங்களில் வாசமாயிருக்கும் தேவ ஆவியானவரின் சுத்தக் கிருபை மட்டுமே என்பதை மனதில் நினைத்து அவருடைய கிருபைக்காகக் கெஞ்சுங்கள் (1 கொரி 15 : 10) அதை மனதில் கொண்டுதான் தாவீது ராஜா ''என் வில்லை நான் நம்பேன், என் பட்டயம் என்னை இரட்சிப்பதில்லை'' (சங் 44 : 6) என்று சொன்னார்.

கர்த்தருடைய அளவற்ற அன்பின் கிருபையாலும், தேவப் பிள்ளைகளாகிய உங்கள் அனைவரின் உருக்கமான ஜெபங்களின் காரணமாகவும் வடக்கே இமாச்சல் பிரதேச நமது வாகன தேவ ஊழியங்களை நாங்கள் கர்த்தருக்கு மகிமையாக செய்து முடித்து சுகபத்திரமாகத் திரும்பினோம். உள்ளத்தின் பாரத்தோடு அதற்காக ஒவ்வொரு நாளும் ஜெபத்தில் போராடிய உங்களை தேவன் ஆசீர்வதிப்பாராக. இமாச்சல் பிரதேச ஊழிய சம்பந்தமான தெளிவான விபரங்களை இந்த இதழின் கடைசிப் பகுதியில் நான் எழுதியிருக்கின்றேன். தயவாக வாசித்து அறிந்து கொள்ளுங்கள்.

கடந்த கால நாட்களில் நான் நமது தேவ எக்காள இதழ்களில் எழுதியபடி எனது கிறிஸ்தவ வாழ்வை கர்த்தருக்கு மகிமையாக பரிமளிக்கச் செய்த ஒரு அற்புதமான வாழ்க்கை வரலாறு பரிசுத்த மகாத்துமா சாது சுந்தர்சிங் அவர்களின் வாழ்க்கைச் சரித்திரம்தான். நான் சிறுவனாக இருந்தபோது காலஞ்சென்ற எனது பரிசுத்த தகப்பனார் அந்த பரிசுத்த பக்தனைக் குறித்து பிள்ளைகளாகிய எங்களிடம் சொன்ன அந்த தேவ மனிதரின் பரிசுத்த அனுபவங்கள் என் உள்ளத்தில் பசு மரத்தாணி போல அப்படியே பதிந்தது. எனது தகப்பனார் சிறுவனாக நெல்லை மாவட்டத்திலுள்ள மெய்ஞ்ஞானபுரம் என்ற கிறிஸ்தவ கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தபோது அவர்களுடைய பள்ளிக்கு வந்த சாதுசுந்தர்சிங் அவர்களின் பிரகாசமான முகத்தைக் கண்டு ஆண்டவரின் அடிமையானார்கள் என்பதை நான் ஏற்கெனவே தேவ எக்காளத்தில் எழுதியிருக்கின்றேன். சாது சுந்தர்சிங்கைப்போல ஒரு உண்மையான பரிசுத்த ஜீவியம் செய்ய வேண்டும், அவரைப்போல இமயமலை நாடுகளுக்குச் சென்று கஷ்டப்பட்டுக் கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்ற தணிக்க முடியாத ஆவல் எனது குழந்தைப் பருவத்திலிருந்தே என்னில் வேர் ஊன்றியிருந்தது. நீங்கள் எனது அறைக்கு வந்து பார்ப்பீர்களானால் அந்த பரிசுத்த தேவ மனிதரின் 3 வித்தியாசமான படங்கள் எனது அறையின் சுவரில் தொங்குவதைக் காணலாம். யார், யார் சாதுசுந்தர்சிங் என்ற தேவ பக்தனின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தோ அல்லது அவர் உயிரோடிருந்த நாட்களில் அவரைப் பார்த்தோ அல்லது அவருடைய செய்தியைக் கேட்டோ, அல்லது அவருடன் பேசியோ மனந்திரும்பியிருப்பார்களானால் அந்த மக்களின் மனந்திரும்புதல், அவர்களின் தேவ ஊழியங்கள் மிகுந்த உண்மையும் உத்தமமுமாகக் கடைசி வரை ஒளிவிட்டுப் பிரகாசிக்கும் என்று தேவ மக்கள் கூறுகின்றனர். அது முற்றும் உண்மையான வார்த்தையாகும். அநேக பரிசுத்தவான்களுடைய வாழ்க்கையில் அதை நான் கவனித்திருக்கின்றேன். கர்த்தருக்கே மகிமை. குறிப்பாக, அப்போஸ்தல திருச்சபையைத் தோற்றுவித்த பாஸ்டர் சுந்தரம் ஐயா அவர்களும், Laymen Evangelical Fellowship ஐ உருவாக்கிய N.தானியேல் ஐயா அவர்களும் அதில் அடங்குவர். ஆண்டவருக்கு துதி உண்டாவதாக.

பல ஆண்டு காலங்களுக்கு முன்பாக நான் இமயத்தின் சிம்லா மலைகளிலுள்ள சுபத்து என்ற இடத்திற்குச் சென்று சாது சுந்தர்சிங் வாழ்ந்த அங்குள்ள பங்களாவிற்குச் சென்று அந்த பரிசுத்த மகாத்துமாவைப்போல தேவன் என்னை தமது நாமத்திற்கு மகிமையாக வருங்காலங்களில் எடுத்துப்

பயன்படுத்த வேண்டும் என்று அவர் சமூகத்தில் முழங்காலூன்றி என் கண்ணீரைக் கொட்டி ஜெபித்து வந்தேன். முகத்துக்கு முகம் தெரியாத மேக மூட்டமும், மழை தூறிக்கொண்டிருந்த அந்த அதிகாலை நேரமும், தேவனுக்கு முன்பாக நான் அந்த நாளில் ஏறெடுத்த எனது நொறுங்குண்ட இருதயத்தின் பெருமூச்சும் எனது நினைவில் என்றும் நிலைத்திருக்கும். கர்த்தருக்கே மகிமை.

மேற்கண்ட மாறாத நிகழ்ச்சியைப் போன்றே கடந்த ஆண்டு (2005) அக்டோபர் மாதம் 31 ஆம் தேதியும் எனது வாழ்வில் என்றும் நினைவுகூரப்படும் ஒரு நாளாக நிலைத்துவிட்டது. அந்த நினைவும் சாதுசுந்தர்சிங்கின் காரியமாக உள்ளதுதான். அந்த நாளில் நான் பஞ்சாப் மாநிலத்திலுள்ள லூதியானாவுக்கு அருகிலுள்ள ராம்பூர் கிராமம் சென்று சாதுசுந்தர்சிங்கின் பிறந்த வீட்டைக் கண்டு வந்தேன். அந்த திங்கட் கிழமை காலை நேரம் சகோதரன் நார்ட்டன் அவர்களும், நானும் இமாச்சல் பிரதேசத்திலுள்ள உன்னா என்ற பட்டணத்தில் காலை சுமார் 8 மணிக்கு அங்கிருந்து நேரடியாக லூதியானாவுக்குப் புறப்படும் பேருந்தில் ஜெபத்தோடு ஏறினோம். பேருந்து புறப்பட்ட சற்று நேரத்திற்கெல்லாம் அது பழுதாகிவிட்டது என்று சொல்லி அதை பணிமனைக்குக் கொண்டு சென்று ஓரிரு மணி நேரத்திற்குப் பின்னர் அது திரும்பவும் புறப்பட்டது. நீண்ட தூரம் பயணம் செய்யக் கூடிய பேருந்தின் வேகம் எதுவும் அதில் காணப்படவில்லை. அது எங்களுக்கு மிகவும் கவலையாக இருந்தது. காரணம், நாங்கள் அந்த நாளிலேயே நாங்கள் புறப்பட்ட உன்னா என்ற இடத்திற்கு திரும்பி வந்தாகவேண்டும். ராத்தங்குவதற்கான எந்த ஒரு ஆயத்தத்துடனும் நாங்கள் செல்லவில்லை. செல்வச் செழிப்புமிக்க பஞ்சாப் மாநிலத்தின் சிறிதும் பெரிதுமான அநேக கிராமங்களை எங்கள் பேருந்து கடந்து சென்று கொண்டிருந்தது. கண்ணுக்கு எட்டிய துரம் வரை பசுமையான கோதுமை விளை நிலங்களையும், அந்த விளை நிலங்களில் பஞ்சாப் மாநிலத்தின் ஆண்களும் பெண்களுமான சீக்கிய மக்கள் அயராது பாடுபட்டுக் கொண்டிருப்பதையும் நாங்கள் காண முடிந்தது. தமிழ் நாட்டின் தென் பகுதிகளில் கிறிஸ்தவ தேவாலயங்கள் கிராமங்கள் தோறும் காணப்படுவது போல அந்த பஞ்சாப்பிலும் கிராமத்தின் ஜனத்தொகைக்கு ஏற்றவாறு சிறிதும் பெரிதுமான அழகிய சீக்கிய குருத்துவாராக்கள் கிராமங்களில் காணப்படுகின்றன. ஓரிடத்தில், அங்கு விளைந்த கோதுமையை அநேக லாரிகளில் ஏற்றிக்கொண்டிருப்பதைக் காண முடிந்தது. ஓரிரு கிலோ மீட்டர் தூரம் வரை ரஸ்தாவின் ஓரங்களில் ஆயிரக்கணக்கான கோதுமை

மூட்டைகள் மலைபோல அடுக்கி வைக்கப்பட்டிருப்பதை நாங்கள் கண்டு அதிசயித்துப் போனோம். நாங்கள் சென்று கொண்டிருந்த பேருந்து ஒரு பெரிய பட்டணத்திற்கு வந்ததும் அங்கே நிறுத்தப்பட்டுவிட்டது. அடுத்த பேருந்து பிடித்து லூதியானா பட்டணத்திற்குச் செல்லும்படியாக பேருந்தின் நடத்துனர் பயணிகளைக் கேட்டுக் கொண்டார். நாங்கள் உடனே அடுத்த வாகனத்தைப் பிடித்து நண்பகல் ஒன்று அல்லது இரண்டு மணி சுமாருக்கு லூதியானா வந்து சேர்ந்தோம். லூதியானா பேருந்து நிலையம் புழுதி நிறைந்த இடமாகக் காணப்பட்டதுடன் அப்பொழுது அடித்த வெயிலும் கடுமையாக இருந்தது. சாதுசுந்தர்சிங் பிறந்த ஊரான ராம்பூருக்குச் செல்ல எந்த ஒரு பேருந்து ஓட்டுனருக்கும், நடத்துனருக்கும் சரியான பேருந்தை எங்களுக்கு காண்பிக்க இயலவில்லை. நாங்கள் இருவரும் மனம் சோர்ந்தவர்களாக எங்கள் திட்டத்தை கைவிட்டு விட்டு புறப்பட்ட இடத்திற்கே திரும்பிச் செல்லுவதென்ற திட்டமான தீர்மானத்திற்கு வந்த நேரம் அன்பின் ஆண்டவர் பல்லாண்டு காலத்திற்கு முன்பாக சாதுசுந்தர்சிங் வாழ்ந்த சுபத்துவிலுள்ள அவருடைய பங்களாவிற்கு என்னை வழிநடத்தினதைப் போன்று இந்த தடவை அவர் பிறந்த இடத்திற்கும் வழிநடத்திச் செல்ல வேண்டுமென்று நான் ஜெபித்துவிட்டு லூதியானாவில் இருக்கின்ற ஒரு தேவ ஊழியரின் முகவரியைப் பெற்று அவருக்குப் போன் செய்தேன். அந்த சகோதரன் ஓரளவு எங்களுக்கு கொடுத்த ஆலோசனையின் காரணமாக நாங்கள் அம்பாலா பட்டணம் செல்லும் பேருந்தில் ஏறி 20 கி.மீ. தூரம் பிரயாணம் செய்து துரகா என்ற இடத்தில் நாங்கள் வந்து இறங்கினோம்.

அந்த துரகாவில் ஒரு டிராக்டர் போன்ற டக்கரில் ஏறி மிகுந்த கஷ்டத்துடன் 2 கிமீ. தூரம் பயணம் செய்து ராம்பூர் வந்து சேர்ந்தோம். சுமார் 8 பேர்கள் சற்று சிரமத்துடன் அமரக்கூடிய அந்த வாகனத்தில் 30 பேர்களை வைத்து திணித்துவிட்டனர். வாகனத்தின் மேலேயும் மக்கள் ஏறிக்கொள்ளுகின்றனர். நாம் ராம்பூர் என்று சொல்லுவதை அங்குள்ள மக்கள் ராம்புரா என்று அழைக்கின்றார்கள். மெய்யாகவே, கர்த்தர் அன்று எங்களுக்கு தயவும் இரக்கமும் காட்டியிருக்காத பட்சத்தில் நிச்சயமாக நாங்கள் ராம்பூர் வந்து சேர்ந்திருக்கவே முடியாது. ராம்பூர் கிராமத்திற்குள் அந்த டக்கர் வரவில்லை. சற்று தொலைவில் எங்களை இறக்கிவிட்டு அது வேறு வழியாகச் சென்றுவிட்டது. நாங்கள் அந்த கிராமத்திற்கு நடந்தே சென்றோம். தூரத்தில் அந்த சீக்கிய கிராமத்தைப் பார்த்ததும் எனது உள்ளம் கர்த்தருக்குள் களிகூர்ந்தது. கிராமத்திற்கு முன்பாக ஒரு பெரிய நதி ஓடுகின்றது. அந்த நதியின் பெயர் நீலோ என்பதாகும். நமது சுந்தர் சிறுவனாக இருந்த



சமயம் அந்த நீலோ நதிக்கு வந்து கட்டாயம் ஸ்நானம் செய்திருப்பார், தனது நண்பர்களோடு அந்த ஆற்றில் குளித்து மகிழ்ந்து விளையாடியிருப்பார் என்று என் உள்ளத்தில் எண்ணிக்கொண்டேன். அந்த நதிக்கு மேலாக ஒரு பெரிய பாலம் கட்டப்பட்டுள்ளது. நதியைக் கடந்து அப்பால் ஊர் எல்லைக்குள் வந்ததும் நிழல் தரும் ஒரு பெரிய மரம் நிற்பதையும், அதின் அடியில் வட்டமாக சுற்றிக்கட்டப்பட்டிருந்த திட்டில் ஊரின் பெரியோர்கள் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பதையும் நாங்கள் கவனித்தோம். அந்த ராம்பூர் சீக்கிய கிராமம் நல்ல செல்வந்தமான கிராமம் என்பதைக் காண முடிந்தது. ஒரு பெரிய கூட்டம் எருமை மாடுகள் எங்களுக்கு முன்பாகச் சென்று கொண்டிருந்தது. பார்வோன் தனது சொப்பனத்தில் கண்ட அழகும், புஷ்டியுமான பசுக்களைப் போல அந்த எருமை மாடுகளும் மிகுந்த கொழுமையுடன் காணப்பட்டன. நிறைய பால் கொடுக்கும் அந்த ஒவ்வொரு எருமையும் பல்லாயிரம் ரூபாய் மதிப்புடையவைகளாக இருக்கும் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் கிடையாது.

ஊரில் எந்த ஒரு ஆளிடம் கேட்டாலும், ஏன் ஒரு சிறு பிள்ளையிடம் கேட்டாலும் கூட சுந்தர்சிங் பிறந்த வீடு எங்கே இருக்கின்றது என்று கேட்டால் உடனே அந்த இடத்திற்கு நம்மை வழிகாட்டி அழைத்துச் செல்லக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். அவர் பிறந்த அந்த வீட்டைக்காண உலகின் பல்வேறு இடங்களிருந்து கர்த்தருடைய பிள்ளைகள் வருகின்றனர் என்பதை அதின் மூலம் கண்டு கொள்ள முடிந்தது. நாங்கள் இருவரும் சுந்தருடைய வீட்டிற்கு வந்து சேர்ந்தோம். அது மிகவும் பழமையான வீடு. அந்த வீட்டைக் கண்ட எனக்கு உண்டான மகிழ்ச்சி எல்லையற்றதாகவிருந்தது. நல்ல விசாலமான நீண்ட ஒரு பெரிய வீடாக,

மாடியிலும் அறைகள் வைத்துக் கட்டப்பட்டுள்ளது. கீழ் வீட்டிலிருந்து மேல் தளத்திற்கு ஏறிச்செல்ல நிறைய படிக்கட்டுகள் ஏறவேண்டும். சுந்தர்சிங் தினமும் அந்தப்படிக்கட்டுகளில் ஏறித்தான் மேல் மாடியிலிருந்த அவரது படுக்கை அறைக்கு வந்திருக்க வேண்டும். அங்கிருந்த அவரது அறையில்தான் கர்த்தர் அவருக்குத் தம்மை ஜீவனுள்ள ஆண்டவராக வெளிப்படுத்தி அவரை



தமது அடிமையாக்கினார். அந்த அறையை தேவப்பிள்ளைகளாகிய நீங்களும் காண்பதற்காக ஒரு புகைப்படம் எடுத்து வந்தேன். அந்த வீட்டின் சுவரில் எழுதப்பட்டுள்ள வாசகத்தையும் நீங்கள் காணலாம். சுந்தர்சிங் பிறந்த



அறையில் அவரது தாயார் பயன்படுத்திய ராட்டினமும், அவர் பானம்பண்ணிய பெரிய தம்ப்ளரும் வைக்கப்பட்டுள்ளது. வெண்கலத்தால் செய்யப்பட்ட அந்த கனமான பெரிய தம்ப்ளர் நிறைய ஊற்றப்படும் எந்த ஒரு



பானத்தையும், ஏன்? தண்ணீரைக்கூட நம்மில் எவராலும் முழுமையாக குடிக்கவே முடியாது. அத்தனை பெரிய உயரமான தம்ப்ளர் அது. அந்த தம்ப்ளரை எங்கள் கரங்களில் ஏந்தி நாங்கள் மகிழ்ந்தோம். சுந்தருடைய தாயார் பயன்படுத்திய ராட்டினத்தையும், அந்த தம்ப்ளரையும் நீங்கள் இங்குள்ள



படத்தில் காணலாம். சுந்தர் பிறந்த அறையின் சுவரில் காணப்படும் அவரது 2 புகைப்படங்களையும் நீங்கள் இந்தச் செய்தியில் பார்க்க முடியும். அவரது வீட்டிற்கு மேலாக மாடியில் 2 பளிங்குக் கற்களாலான சிலுவைகள் நாட்டப்பட்டுள்ளன. ராம்பூரிலுள்ள எல்லா மக்களும் அந்தச் சிலுவைகளைக் காணும்படியாக அவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. அந்தச் சிலுவைகளில் ஒன்றையும் ராம்பூர் கிராமத்தின் காட்சியையும் நீங்கள் பார்க்கலாம். சாதுசுந்தர்சிங் பிறந்த இடத்திலும், கர்த்தர் அவருக்குக் காட்சி அளித்த அறையிலும் நான் முகங்குப்புற விழுந்து கர்த்தருக்கு என்னை ஒப்புவித்து ஜெபித்தேன். சகோதரன் நார்ட்டன் அவர்களும் ஜெபித்தார்கள்.

காலையிலிருந்து எந்த ஒரு ஆகாரமும் சாப்பிடாமல் மிகுந்த பசியாக இருந்த எங்களுக்கு சாதுசுந்தர்சிங்கின் வீட்டிலிருந்து கர்த்தருக்கு ஊழியம்செய்து கொண்டிருக்கும் பாஸ்டர் பிலிப் மசி என்பவரின் அன்பான மனைவி ஐலின் அவர்களும், பாஸ்டரின் சகோதரன் ஜாண் மசியும் சற்று நேரத்திற்கெல்லாம் ஆகாரம் தயார் செய்து எங்களுக்கு அருமையாக உணவளித்தார்கள். அன்று இரவு அந்த வீட்டில் தங்களுடன் தங்க வேண்டுமென்று எங்களை அதிகமாக வற்புறுத்தினார்கள். எங்களுக்கும் அப்படித் தங்க ஆசையாகத்தான் இருந்தது. ஆனால், இரவில் மாற்றுவதற்கு எந்த ஒரு மாற்றுடைகளும் நாங்கள் எங்களுடன் கொண்டு செல்லாத காரணத்தால் இரவோடு இரவாக திரும்ப வேண்டியதாயிற்று. அந்த பாஸ்டர் பிலிப் மசி என்ற சகோதரன் அந்த சீக்கிய கிராமத்தில் நல்ல அருமையானதோர் தேவ ஊழியம் செய்து வருகின்றார்கள். ஒவ்வொரு ஓய்வு நாளிலும் 70 சீக்கிய மக்கள் ஆராதனையில் வந்து கலந்து கொள்ளுவதாகவும், அவர்கள் எல்லாருக்கும் மதிய உணவு ஓய்வு நாளில் அளிக்கப்படுவதாகவும், அதற்கான உணவுப்பொருட்களை எல்லாம் அதில் கலந்து கொள்ளும் சீக்கிய மக்களே கொடுப்பதாகவும், ஏன், அந்த பாஸ்டர் குடும்பத்திற்குத் தேவையான அரிசி, கோதுமை, பால், காய்கறி எல்லாம் ராம்பூர் கிராமவாசிகளே கொடுத்து வருவதாகவும் எங்களிடம் சொன்னார்கள். மொத்தம் 6 சீக்கிய குடும்பங்கள் ஞானஸ்நானம் எடுத்திருப்பதாகவும் எங்களிடம் சொன்னது எங்களுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது. அவர்களுடைய ஊழியங்களின் மூலமாக ஆண்டவர் அந்தக் கிராமத்தில் பெரிய அற்புதங்களைச் செய்து வருவதாகவும் எங்களிடம் சொன்னார்கள். கர்த்தருக்கே மகிமை. சகோதரன் பிலிப் மசி அவர்கள் மூலமாக சாதுசுந்தர்சிங் பிறந்த வீட்டில் நடைபெறும் தேவ ஊழியங்களுக்காக நாம் எல்லாரும் ஜெபிப்போம். பாஸ்டர் பிலிப் மசி அவர்களின் குடும்ப புகைப்படத்தையும், அவர்கள் நடத்தும் ஆராதனைக்கு வந்து கலந்து கொண்ட சீக்கிய பெண்களையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். சுந்தர்சிங் பிறந்த வீட்டைப் பார்த்துவிட்டு அவருடைய வீட்டின் அருகிலுள்ள செங்கல் பதித்துள்ள ஒடுக்கமான பாதை வழியாக நாங்கள் வரும்போது தேவனுடைய பிரசன்னத்தை நாங்கள் அதிகமாக உணர்ந்தோம். அந்தப் பாதை வழியாக தேவ மனிதர் சிறுவனாக இருந்தபோது எத்தனை தடவையோ நடந்திருப்பார் அல்லவா? ஆண்டவருக்கு மகிமை உண்டாவதாக.

சாதுசுந்தர்சிங் பிறந்த வீட்டைப் பார்த்துவிட்டு வந்த எனக்கு என் மனக்கண்களுக்கு முன்பாக எப்பொழுதும் நிழலாடிக் கொண்டிருப்பது

எல்லாம் அவர் வீட்டின் மாடியில் நாட்டப்பட்டிருக்கும் 2 வெண் பளிங்குச் சிலுவைகள்தான். காரணம், சாதுசுந்தர்சிங் அதிகமாக நேசித்தது அந்தச் சிலுவைதான். ''சிலுவையே மோட்சம்'' (Cross is Heaven) என்று அவர்



அடிக்கடிச் சொல்லுவார். தனது புத்தகங்களில் அதைத் திட்டமாக எழுதினார். மிகுந்த செல்வந்தனான பெற்றோருக்கு அவர் பிள்ளையாகப் பிறந்த போதினும் தன்னை ஆட்கொண்ட தன் அன்பின் இரட்சகருக்காக அவர் தன்னை தரித்திரனாக்கி சிலுவையைத் தனது கரங்களில் எடுத்துக்கொண்டார். தனது புத்தகங்களில் ஒன்றான ''திருவடி உபதேசம்'' என்ற புத்தகத்தில் தான் ஒரு நாள்



இராக்காலம் இமயமலைகளிலுள்ள ஒரு கிராமத்திற்கு வெளியே ஒரு மலைப் பாறையில் தனியனாக அமர்ந்து தேவனை நோக்கி ஜெபித்துக்கொண்டிருந்த நேரம் ஒரு பிச்சைக்காரன் தன்னண்டை வந்து பிச்சைக் கேட்டபோது அவர்

அந்த மனிதனுக்குச் சொன்ன பதில் இதுதான் ''நானும் உன்னைப்போல ஒரு பிச்சைக்காரன்தான், உனக்குத் தருவதற்கு என்னிடம் ஒன்றுமில்லை. அதோ தெரியும் அந்த கிராமத்திற்குள் சென்று மக்களிடம் கேட்டுப் பார்'' என்று சொல்லும் வார்த்தைகள் நம்மை மெய் சிலிர்க்க வைப்பதாக இருக்கின்றது. அதிலும் ஒரு புதுமை என்னவெனில் அவரிடம் பிச்சை கேட்க வந்த பிச்சைக்காரனும் சுந்தர்சிங்கை ஆட்கொண்ட அவரது அன்பின் ஆண்டவர் என்பதுதான்! தேவனுடைய வார்த்தையும் அதை மெய்ப்பிக்கும் வண்ணமாக ''அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல் தம்மைத் தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்'' (பிலி 2 : 6,7) என்று கூறுகின்றது.

''அன்பின் ஆண்டவர் இயேசுவைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரைப் பின்பற்றிச் செல்லும் ஒவ்வொரு மெய்க்கிறிஸ்தவனின் பாதையும் இந்த உலகத்தில் சிலுவைப் பாதைதான். உங்கள் வாழ்வில் சிலுவை இல்லாத பட்சத்தில் அது ஒரு செத்த வாழ்க்கை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கை ஓட்டம் முடிவுபெறும் காலம் வரை சிலுவையும் அங்கேயே இருக்கும். கிறிஸ்து இயேசு ஏற்கெனவே சிலுவையில் தொங்கி பாடு அனுபவித்துவிட்டார், எனவே நாம் இனி பாடுகள் அனுபவிக்க அவசிமில்லை என்று யாராவது பிரசங்கித்தால் அந்த மக்கள் தேவனுடையதல்லாத வேறு ஒரு மாறுபாடான சுவிசேஷத்தைப் பிரசிங்கிக்கின்றார்கள். அந்த மக்களைக் குறித்து நாம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும். அந்த மக்கள் கிறிஸ்துவின் சிலுவைக்குப் பகைஞர்கள் (Enemies of the Cross) (பிலி 3 : 18) '' என்று ஒரு பக்தன் எழுதுகின்றார். பாடு அனுபவிப்பதைக் குறித்து அப்போஸ்தலனாகிய பவுலின் வார்த்தைகளை நாம் நினைத்துக் கொள்ள வேண்டும் (2 தெச 1 : 4,5 2 தீமோ 2 : 3,10, 2 தீமோ 4 : 5) ''நாம் அநேக உபத்திரவங்களின் வழியாக தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டும்'' (அப் 14 : 22) என்று அவர் தெளிவுபடுத்தியுள்ளார். அப்போஸ்தலனாகிய பேதுருவும் ''கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின் வைத்துப் போனார்'' (1 பேதுரு 2 : 21) என்று எழுதியதுடன் ''துன்பப்படவேண்டியது அவசியம்'' (1 பேதுரு 1 : 6) என்றும் எழுதி நமக்குள்ள நிச்சயமான பாடுகளை தெளிவாக முன் அறிவித்துள்ளார்.

''உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு'' (யோ 16 : 33) என்று நம் அருமை இரட்சகர் திட்டமாகக் கூறியிருக்கின்றார். மோட்சத்தில் காணப்படும் தேவ மக்களைக் குறித்து ''இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள், இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக் குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்'' (வெளி 7 : 14) என்று கூறப்படுகின்றது. ''அவர் அசட்டை பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்த வருமாயிருந்தார், அவரைவிட்டு நம்முடைய முகங்களை மறைத்துக் கொண்டோம், அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார், அவரை எண்ணாமற் போனோம்'' (ஏசா 53 : 3) என்று நம் அருமை இரட்சகர் இந்த உலகத்தை துன்ப துயரங்களோடு கடந்து சென்றிருப்பதைக் காண்கின்ற கிறிஸ்தவ மக்கள் இந்த உலகத்தில் எல்லா சுகபோகங்களோடும் ஆனந்தமாக வாழ ஆசைப்படுகின்றனர். அந்த ஆசீர்வாத வாழ்க்கையை மேடைகளிலிருந்து அள்ளி வழங்கும் செழிப்பின் உபதேச (Prosperity Gospel of Health and Wealth) பிரசங்கிமார்களின் பிரசங்கங்களைக் கேட்க மக்கள் திரள் திரளாக ஓடிக்கொண்டிருக்கின்றனர். இந்த உலகத்தில் எல்லா ஆனந்த பாக்கியங்களோடு குறைவின்றி வாழ்ந்து மரணத்திற்குப் பின்னர் மோட்சானந்த பேரின்பங்களையும் தாங்கள் சுதந்தரித்துக் கொள்ள வேண்டும் என்பது இந்த மக்களின் பகற் கனவாகும். இந்த உலகத்தின் அதிபதியாம் சாத்தான் உங்களை இரண்டு இடங்களிலும் ஆனந்தங்களை அனுபவிக்க விட்டுவிடுவான் என்று நினைக்கின்றீர்களா? இந்த உலகத்தின் மாயாபுரி சந்தைச் சரக்குகளைக் காண்பித்து உங்களை மயக்கி இந்த உலகத்துடன் உங்களை ஓயப்பண்ணி எரி நரகத்தில் தள்ளுவதே சாத்தானின் நிச்சயமான குறிக்கோளாகும்.

சிலுவையைப் பிரசிங்கியாத தேவ ஊழியர்களின் கூட்டங்களை நாடி ஓடாதேயுங்கள். சரீர சுகத்தையும், செல்வத்தையும், வாழ்வின் வளத்தையும் அவர்கள் உங்களுக்குக் காண்பித்து சிலுவையையும், சிலுவைப் பாடுகளையும் உங்களுக்கு மறைக்கின்றார்கள். அவர்கள் ஆபத்தானவர்கள். ''இயேசு கிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும் உங்களுக்குள்ளே அறியாதிருக்க தீர்மானித்திருந்தேன்'' (1 கொரி 2 : 2) என்றும் ''நாங்களோ சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பிரசங்கிக்கிறோம்'' (1 கொரி 1 : 23) என்றும் அப்போஸ்தலன் திட்டமாக எழுதுகின்றார்.

"உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்பு கூராதிருங்கள், ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகள் எல்லாம் பிதாவினாலுண்டானவைகள் அல்ல, அவைகள் உலகத்தினால் உண்டானவைகள்" (1 யோ 2 : 15, 16) என்று கர்த்தருடைய வார்த்தை கூறுகின்றது. தேவனுடைய வார்த்தை அத்தனை தெளிவாக இருந்தபோதினும் கிறிஸ்தவ மக்கள் தங்கள் மரணத்திற்குப் பின்னர் இந்த உலகத்தையே தங்கள் தலையில் கட்டி தூக்கிக் கொண்டு செல்லுகின்றவர்களைப் போல உலகத்தை அத்தனையாக நேசித்து அன்புகூருகின்றார்கள். உலகத்து மக்களைப்போல வாழ்கின்றனர். பல அறைகளைக் கொண்ட அழகிய மாடி வீடுகளைக் கட்டுகின்றனர். கொஞ்ச காலம் அதில் வாழ்கின்றனர், ஆனந்திக்கின்றனர். அதற்குள்ளாக நினையாத நேரம் அந்தக் குடும்பத்தின் தலைவனோ அல்லது தலைவியோ மரித்துவிட்டால் அந்த வீட்டை அப்படியே பாழடையப் போட்டுவிடுகின்றனர். அந்தப் பெரிய வீட்டைப் பெருக்கி சுத்தம் செய்யக்கூட அவர்களுக்கு பெலனில்லாமல் போய்விடுகின்றது. பெற்ற பிள்ளைகள் தங்கள் அலுவல்களின் காரணமாக தொலை தூரங்களில் வாழ்கின்றனர். அவர்களுக்கு வந்து தங்கள் வீட்டைக் கவனிக்க நேரமேஃது? இறுதியில் வீட்டின் தலைவனோ அல்லது தலைவியோ அந்தப் பெரிய மாளிகை வீட்டின் ஒரு சிறிய அறையில் தன்னந்தனியே ஒதுங்கிவிடுகின்றனர். தங்கள் வாழ்நாட்காலத்தில் கர்த்தரைத் தேடாத அந்த மக்களுடைய வாழ்வில் ஆண்டவர் இயேசு இல்லாத காரணத்தால் அவர்களின் வாழ்க்கை பரிதபிக்கப்படத்தக்கதாக மாறிவிடுகின்றது. மரித்த பின்னர் அவர்களை சூழக்கூடிய காரிருள் (யூதா 13) இந்த உலகத்திலேயே சூழ்ந்து விடுகின்றது. எத்தனை பரிதாபம் பாருங்கள்! இந்த உலகத்தை நேசித்து இந்த உலகத்துக்காக வாழும் மக்களுக்கு சாத்தான் அளிக்கும் இறுதி வெகுமதி அதுவேதான்.

இதைக் கருத்தோடு வாசிக்கும் அன்பான தேவப்பிள்ளையே, இரட்சிப்பு முற்றும் நமக்கு இலவசமானது "கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு" (எபே 2 : 8) ஆனால், நித்திய ஜீவனை நாம் சுதந்தரித்துக்கொள்ள கட்டாயம் விலைக்கிரயம் செலுத்தியே ஆகவேண்டும். "நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ளும்படி நான் என்ன செய்ய வேண்டும்? " என்று கேட்ட அந்த ஐசுவரியமுள்ள வாலிபனுக்கு ஆண்டவர் அளித்த

பதிலைப் பார்த்தீர்களா? ''நீ போய் உனக்கு உண்டானவைகளை எல்லாம் விற்று தரித்திரருக்குக் கொடு...................... பின்பு சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றிவா'' (மாற் 10 : 21) என்று கூறுகின்றார். முதலாவது, அவனுக்கு உண்டான அனைத்தையும் விற்று தரித்திரருக்கு கொடுத்த ஒரு காரியத்திலேயே அவனும் தரித்திரனாகிவிடுகின்றான். பின்னர் அந்த தரித்திரத்துடன் சிலுவையை எடுத்துக்கொண்டு ஆண்டவரைப் பின்செல்ல வேண்டும். எத்தனை பெரிய விலைக் கிரயம் பாருங்கள். ஆம், நாம் நித்திய ஜீவனை சுதந்தரித்துக்கொள்ள வேண்டுமானால் பெரிய கிரயம் செலுத்த வேண்டும்.

அதைக் கருத்தில் கொண்டுதான் அன்பின் இரட்சகர் எல்லா மக்களும் மோட்சம் போய்ச் சேர முடியாது என்று சொன்னார். ''ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும் வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்'' (மத் 7 : 14) என்றும் ''இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப்படுங்கள், அநேகர் உட்பிரவேசிக்க வகை தேடினாலும் அவர்களாலே கூடாமற் போகும்'' (லூக் 13 : 24) என்ற ஆண்டவருடைய வார்த்தைகள் நம்மை நடுநடுங்கப்பண்ணுவதாக இருக்கின்றது. அது மாத்திரமல்ல, நம்மை நடுநடுங்கப்பண்ணக்கூடிய மற்றொரு தேவ வார்த்தையும் உண்டு. ''பயப்படாதே, சிறு மந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்'' (லூக்கா 12 : 32) என்பதே அந்த வசனமாகும். ஆண்டவருடைய ராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளப் போவது திரளான ஆடுகளுள்ள பெரு மந்தையல்ல, சொற்பமான ஆடுகளைக் கொண்ட சிறு மந்தை மாத்திரமே தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணிய (1 கொரி 2 : 9) மகிமையின் ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளும். ''யாக்கோபு என்னும் பூச்சியே, இஸ்ரவேலின் சிறு கூட்டமே'' (ஏசாயா 41 : 14) என்று தமது சிறு கூட்டத்தை மட்டுமே தேவன் சுட்டிக் காண்பிப்பதை நாம் பார்க்கின்றோம்.

தேவப்பிள்ளையே, தேவனுடைய அந்த சிறு மந்தையில், அந்த இஸ்ரவேலின் சிறு கூட்டத்தில் நீ உன்னைக் காண்கின்றாயா? அதற்கான விலைக்கிரயம் உனக்கு உண்டு. ''கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும் வழி விசாலமுமாயிருக்கிறது, அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர்'' (மத் 7 : 13) என்ற தேவ வசனத்தின்படி உலகத்தினாலுண்டானவைகளான மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமையாகிய உலக மாய்கைகளைத் தேடி மக்கள் திரள் திரள் கூட்டமாக அழிவை நோக்கி

ஓடிக்கொண்டிருக்கின்றனர். இந்த உலகம் உடனடியாக அளிக்கக்கூடிய ஆசை இன்பங்களே அவர்களுக்குப் பெரிதாகத் தெரிகின்றது. இந்த உலகத்து மக்களைப் போல அவர்கள் புசிக்கவும், குடிக்கவும், கட்டவும், நாட்டவும், தங்கள் பொன்போன்ற காலங்களை ஆண்டவருடைய பாதங்களில் செலவிடுவதற்குப் பதிலாக தொலைக் காட்சியிலும், செய்தித்தாட்களிலும், வீண் வார்த்தைகள் பேசி பாழாக்குவதிலும் செலவிடுகின்றனர். இந்த உலகத்தின் டாம்பீகங்களிலும், சுகபோகங்களிலும், ஆடம்பரங்களிலும் வாழத் தங்களையே அவர்கள் விற்றுப் போட்டனர்.

மனந்திரும்புதல், பாவ மன்னிப்பு, பரிசுத்தம், ஆண்டவருடைய வார்த்தைகளுக்கு நடுநடுங்கிக் கீழ்ப்படிதல் போன்ற ஆரோக்கியமான உபதேசத்தைக் கேட்க இந்த மக்கள் மனமற்றவர்களாக செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைக்கேற்ற போதகர்களை தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு சத்தியத்துக்குச் செவியை விலக்கி சாத்தானாம் பிசாசு தங்களுக்கு முன்பாக வைத்துள்ள விசாலமான பாதையிலே துணிகரமாகச் சென்று கொண்டிருக்கின்றனர்.

இந்த மக்கள் தெரிந்து கொண்ட பிரசங்கிகள் மேடைகளிலிருந்து இந்த வையகம் அளிக்கக்கூடிய நீர்மேல் குமிழி வாழ்வின் கானல் நீர் இன்பங்களை என்றும் நிலைத்து நிற்கக்கூடிய இன்பங்களாகவும், அவைகளே அவர்களுக்கு அத்தியந்த அவசியம் என்றும் அந்த மாயாபுரி சந்தைச் சரக்குகளையே பிரபலப்படுத்தி, புகழ் பாடிப் பேசிக்கொண்டே இருக்கின்றனர். அதின் காரணமாக தேவ ஜனங்கள் தேவன் தங்களுக்கு முன்பாக வைத்துள்ள சிலுவைப் பாதையை தெரிந்து கொள்ள மனமற்று அழிவின் பாதையைத் தங்களுக்குத் தெரிந்து கொண்டு அதின் முடிவை உணராமல் கண்ணின் காட்சிகளிலும், நெஞ்சின் வழிகளிலும் நடந்து கொண்டிருக்கின்றனர்.

சிலுவைப் பாதையை தம்முடைய பிள்ளைகாளகிய நாம் தெரிந்து கொள்ளும்படியாக நமக்குப் போதித்து அந்தச் சிலுவைப் பாதையிலேயே தனது மரணபரியந்தம் சென்ற நம் அருமை இரட்சகரின் வாழ்க்கையை கவனித்தீர்களா? அவர் நினைத்திருந்தால் அரச குடும்பத்தில் பிறந்து தங்கத் தொட்டிலில் தாலாட்டப்பட்டிருக்கலாம். கர்த்தருடைய பரிசுத்த ஊழியத்தின் பாதையில் ராஜஸ்தான் மாநிலம் சென்றிருந்த ஒரு சமயம் பிக்கானீர் என்ற பட்டணத்திலுள்ள பண்டைய கால மன்னர்களின் கோட்டையில் உள்ள அரண்மனையில் அரச குமாரர்கள் தாலாட்டப்பட்ட தங்கத் தொட்டில்களை நான் கண்டேன். அந்தவித தங்கத் தொட்டில்களை

எல்லாம் உங்களுக்காகவும் எனக்காவும் அன்பின் ஆண்டவர் வெறுத்து ஏழைக்கு ஏழையாக கந்தையால் பொதியப்பட்டவராக மாட்டுத் தொழுவத்திலுள்ள முன்னணையை தமக்குத் தெரிந்து கொண்டார். சுத்திகரிப்பின் நாட்கள் நிறைவேறினபோது அவரைக் கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுக்க எருசலேம் தேவாலயம் வந்தபோது கர்த்தருடைய நியாயப்பிரமாணத்தில் சொல்லியிருக்கிறபடி ஆட்டுக்குட்டியை பலி செலுத்த சக்தி இல்லாத காரணத்தால் (லேவி 12 : 8) அவருடைய பெற்றோர் ஒரு ஜோடு காட்டுப் புறாவையாவது அல்லது ஒரு ஜோடு புறாக் குஞ்சுகளையாவது பலியாகச் செலுத்த தீர்மானித்த செயல் அவர்களின் கடைநிலையான ஏழைக்கு ஏழையான ஏழ்மை நிலையைக் காண்பிக்கின்றதல்லவா? (லூக்கா 2 : 24) அவர் பிறந்த வீட்டைப் பாருங்கள். தச்சு வேலை செய்யும் ஏழை தச்சாசாரி வீட்டில் பிறந்தார். மாதச் சம்பளம் வாங்கும் அரண்மனை உத்தியோகஸ்தர்களின் வீட்டிலோ அல்லது குறைவின்றி வருமானம் வந்து கொண்டிருக்கின்ற வசதியான வீட்டையோ அவர் தெரிந்து கொள்ளவில்லை. தச்சு வேலை செய்வோருக்கு நிரந்தரமான வேலையும், வருமானமும் எங்கே? யாராவது புதிதாக வீடு கட்டினால் அல்லது உழவுத் தொழில் ஆரம்பித்தால் மட்டுமே கொஞ்ச நாட்களுக்கு வேலை இருக்கும். அதிலும் போட்டிக்கு தச்சர்கள் கட்டாயம் இருப்பார்கள். அந்தவிதமான சூழ்நிலையில் கஷ்டம், கண்ணீர், வறுமை, பாடுகளை தன்னளவில் கட்டாயம்அனுபவித்து ஏழைக்கு ஏழையாகத் தன்னைச் சரிநிகர் பண்ணிக் கொள்ளவேண்டும் என்பதற்காக யோசேப்பு தச்சன் வீட்டில் பிறந்தார். அத்துடன் காரியம் முடிவடையவில்லை, குறைந்த பட்சம் மொத்தம் 10 பேர் (பெற்றோரையும் சேர்த்து) அல்லது கட்டாயம் 9 பேர்களுள்ள பெரிய குடும்பத்தில் அவர் பிறந்தார் (மாற்கு 6 : 3) என்று நாம் நிச்சமாக யூகிக்கலாம். ஆ, இரட்சகர் இயேசுவின் அன்பை நாம் என்னவென்று சொல்லுவது!

அன்பின் ஆண்டவரைப் பின்பற்றிச் சென்ற அவரது 12 சீடர்களுக்கும் நேரத்திற்கு நேரம் நல்ல கொழுமையான ருசியுள்ள உணவு அளித்து அவர்களை பசி பட்டினியின்றி எப்பொழுதும் அவர்கள் வயிறு நிரம்பியிருக்கத்தக்கதாக ஆண்டவர் அவர்களை வழிநடத்தினார் என்று நீங்கள் நினைக்கின்றீர்களோ? இல்லவே இல்லை. அடிக்கடி அவர்கள் பசி பட்டினியோடு தங்கள் ஆண்டவரோடு வழிநடந்து செல்ல நேரிட்டது. ''அவருடைய சீஷர்கள் பசியாயிருந்து கதிர்களைக் கொய்து தின்னத் தொடங்கினார்கள்'' (மத் 12 : 1) என்று நாம் வாசிக்கின்றோம். ''நரிகளுக்கு குழிகளும், ஆகாயத்துப் பறவைகளுக்கு கூடுகளும் உண்டு, மனுஷ

குமாரனுக்கோ தலை சாய்க்க இடமில்லை'' (லூக் 9 : 58) என்ற வசனத்தின்படி இந்த உலகத்தில் அவர் தலைசாய்க்க இடமற்றவராயிருந்தார். அவர் மரித்தபோது அவரது சரீரத்தை வைப்பதற்கு அவருக்கென்று சொந்தமாக ஒரு கல்லறை பூமி கூட கிடையாது. மற்றொரு மனிதன் தனக்கென்று வெட்டி வைத்திருந்த கல்லறையில் அவரது சடலம் வைக்கப்பட்டது (மத் 27 : 60) அத்தனை ஏழைக்கோலமாக சிலுவைப் பாதையில் அன்பின் ஆண்டவர் கடந்து சென்றார்.

அப்படியே ஆண்டவரைப் பின்பற்றிய அவருடைய அடியார்கள் எல்லாரும் அவரைப் போலவே தங்களுடைய சிலுவையை சுமந்து செல்லுகிறவர்களாகவிருந்தார்கள். அவர்கள் தங்களுக்கென்று வீடு வாசல்களைக் கட்டி, நிலபுலங்களை வாங்கி, திராட்சை தோட்டங்களையும், ஒலிவத் தோப்புகளையும் கொண்டு ஆடம்பரத்தோடும் ஐசுவரியத்தோடும் வாழவில்லை. அவர்கள் நினைத்திருந்தால் இந்த உலக வாழ்வில் தங்களுக்கென்று எத்தனை எத்தனையோ காரியங்களை சாதித்துக் கொடிகட்டிப் பறந்திருக்கலாம். அப்போஸ்தலனாகிய பரிசுத்த பவுல் தம்முடைய இறுதி நாட்களை ரோமாபுரியிலுள்ள ஒரு வாடகை வீட்டில் செலவிட்டதாக நாம் பார்க்கின்றோம் (அப் 28 : 30) ஏன், அவர் நினைத்திருந்தால் எத்தனை வீடுகளை அவர் தனக்கென்று ரோமாபுரியில் சொந்தமாக வாங்கி வைத்திருக்கலாம். தான் சுகமளித்த மக்களிடமெல்லாம் காணிக்கை வசூல் செய்து குறிப்பாக மெலித்தா தீவின் முதலாளியாகிய புபிலியு என்பவனின் தகப்பனை குணமாக்கியதால் ஒரு பெரிய தொகையையே அந்த மனிதனிடம் சன்மானமாகப் பெற்று வந்து தனக்கென்று பெரிய பெரிய வீடு வாசல்களை ஆங்காங்கு கட்டியிருக்கலாமே! தங்கள் கர்த்தரின் சிலுவைக்காக தங்களை ஒன்றுமில்லாத வெறுமையாக்கிக் கொண்டார்களே (2 கொரி 6 : 10) இந்த வையகம் அளிக்கும் சொற்ப கால இன்பங்களுக்காக கிறிஸ்துவின் மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால் எல்லா மனுஷரைப் பார்க்கிலும் நாங்கள் பரிதபிக்கப்படத்தக்கவர்களாக இருப்போம் (1 கொரி 15 : 19) என்று சொன்னார்களே!

இதைக் கருத்தோடு வாசிக்கும் அன்பான தேவப் பிள்ளையே, உன்னுடைய ஆண்டவரைப் போல இந்த உலகத்தில் நீ சிலுவைப் பாதையை தெரிந்து கொள்ளுவாயா? இந்த உலகத்தில் நீ அனுபவிக்க எல்லா வசதிகளும், வாய்ப்புகளும் உனக்கிருந்தபோதினும் ''இப்படி நான் அவரையும், அவர் உயிர்த்தெழுதலின் வல்லமையையும், அவருடைய பாடுகளின் ஐக்கியத்தையும்

அறிகிறதற்கும், அவருடைய மரணத்திற்கொப்பான மரணத்திற்குள்ளாகி எப்படியாயினும் நான் மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்திருப்பதற்கு தகுதியாகும்படிக்கும் அவருக்காக எல்லாவற்றையும் விட்டேன் குப்பையுமாக எண்ணுகிறேன்'' (பிலி 3 : 10) என்ற உன் ஆண்டவருக்காக எல்லாவற்றையும் அற்பமும் குப்பையுமாக எண்ணி, பக்தன் பாடியது போல

பரலோக நாடெந்தன் இன்ப நாடாம் எனக்கு
என்று நான் கண்டு களிப்பேனோ!

வெறுத்திடுவேன் எந்தன் ஜீவனை
லோகத்தில் செல்லுவேன் கஷ்டத்தின் பாதையில்.
மாயை மாயையே லோகத்தின் இன்பமே,
வாடா முடி சூட ஏகுவேன்.

என்ற பாடல் வரிகளின்படி லோகத்தில் உன் ஜீவனை வெறுத்து சிலுவையைத் தோளில் சுமந்து உன் ஆண்டவர் இயேசுவின் பின் செல்லத் தீர்மானிப்பாயா? தினமும் உன்னால் முடிந்த அளவு அதிக நேரத்தை ஆண்டவருடைய பாதங்களில் ஜெபத்தில் செலவிடுவாயா? உலகம் தனது ஆழ்ந்த நித்திரையிலிருக்கையில் இருக்கும் இரா ஜாமங்களில் நீ எழுந்து அழிந்து போகும் ஆத்துமாக்களுக்காகவும், உனது தனிப்பட்ட வாழ்வின் பரிசுத்தத்திற்காகவும் பாரத்தோடு ஜெபிப்பாயா? உபவாசத்திற்கு முக்கிய இடம் கொடுப்பாயா? ஜெபமும், உபவாசமும் மாத்திரமே உனது கிறிஸ்தவ வாழ்க்கையை பிரகாசமுடையதாக்கும் என்பதை நிச்சயமாக மனதில் வைத்துக் கொள். ஜெபமும், உபவாசமும் உன் வாழ்க்கையில் இல்லையேல் உனது கிறிஸ்தவ வாழ்க்கை ஒன்றுமில்லாத சூன்யம் மாத்திரமே என்பதை ஆணித்தரமாக உன் இருதயமாகிய பலகையில் எழுதிக் கொள்.

''அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்'' (1 பேதுரு 5 : 2) என்ற அப்போஸ்தலனின் வார்த்தையை மனதில் கொண்டு மற்ற தேவ ஊழியர்களைப் போன்று பணம் சம்பாதிக்கும் ஒரு வியாபாரத்தைப் போல கர்த்தருடைய ஊழியத்தைச் செய்யாமல், பொருளாசையுடையவர்களாய் தந்திரமான வார்த்தைகளால் மக்களின் மனதை உங்களுக்கென்று ஆதாயப்படுத்திக் கொள்ளாமல் ''வெகு மனத்தாழ்மையோடும், மிகுந்த கண்ணீரோடும் கர்த்தரைச் சேவித்தேன்'' (அப் 20 : 19) என்ற பரிசுத்த பவுல் அப்போஸ்தலனைப் போல கர்த்தர் உங்களது

கரங்களில் ஒப்புவித்துள்ள அவரது உன்னதமான ஊழியத்தை பயத்தோடும், நடுக்கத்தோடும் செய்யுங்கள். ''தேவரீர் உமது அடியானை அறிவீர்'' (1 நாளா 17 : 18) என்று தாவீது இராஜா கூறியது போல ''ஆண்டவர் என்னையும், நான் அவருக்காக உண்மையோடும், உத்தமத்தோடும் செய்யும் எனது ஊழியத்தையும் அறிகின்ற தேவனாக இருக்கின்றார்'' என்று உங்களது மார்பை தட்டித் தைரியமாகச் சொல்லும் அளவுக்கு உங்கள் ஊழியங்கள் இருப்பதாக. ''தகப்பனுக்கு பிள்ளை ஊழியஞ் செய்வது போல அவன் (தீமோத்தேயு) என்னுடனே கூட சுவிசேஷத்தினிமித்தம் ஊழியஞ் செய்தான்'' (பிலி 2 : 2) என்ற தேவ வார்த்தையின்படி பெற்ற தகப்பனுக்கு பிள்ளை ஊழியம் செய்வது போல மிகுந்த தேவ அன்போடும், தியாகத்தோடும், உத்தமமான இருதயத்தோடும் உங்களது ஊழியத்தைச் செய்யுங்கள். உலகப்பிரகாரமாக ஆண்டவர் உங்களுக்கு எல்லா ஆசீர்வாதங்களையும், வசதி வாய்ப்புகளையும் கொடுத்திருந்தாலும் அவைகளில் உங்கள் மனதை செலுத்தாமல் உங்களைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ள எந்த ஒரு உரிமையும் இல்லாத அடிமையைப் போல சிலுவையின் மரணபரியந்தம் தன்னைத் தாழ்த்தின உங்கள் அருமை இரட்சகரை உங்கள் மனதில் நினைத்தவர்களாக உங்கள் சிலுவையை தோளில் சுமந்து கொண்டு தேவன் உங்களுக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடுங்கள்.

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள ராம்பூர் கிராமத்தில் தனது தந்தையின் வீட்டிலுள்ள மேல்மாடியின் சின்னஞ்சிறிய அறையில் தனக்குக் காட்சி அளித்த தன் அருமை இரட்சகருக்கு தனது மரணபரியந்தம் எரிந்து ஜொலித்துப் பிரகாசித்த சாதுசுந்தர்சிங்கை அடிக்கடி உங்கள் மனதில் நினைத்துக் கொள்ளுங்கள். தன் ஆண்டவருக்காக சிலுவை சுமந்த அந்த பரிசுத்த பக்தனால் உலகம் முழுவதும் இன்று ஆண்டவர் இயேசுவின் பரிசுத்த நாமம் பரிமள தைலமாக வாசனை வீசி பரிமளிக்கின்றது. அந்த பரிசுத்த பக்தன் சென்ற இடங்களில் எல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாக அவரண்டை வந்து ஆண்டவர் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்களே! அவரைப் பார்த்தவர்கள் எல்லாரும் அவருடைய பிரகாசமான முகச்சாயலில் இயேசு இரட்சகரைக் கண்டார்களே! தனக்கென ஆஸ்தி ஐசுவரியங்களை அந்த தேவ ஊழியர் சேர்த்துக் குவித்து வைக்கவில்லையே. தனது பரம எஜமானர் பணத்தைக் கையினால் தொடுவதற்குக் கூட விரும்பாமல் ''நான் பார்க்கும்படி ஒரு பணத்தை என்னிடத்தில் கொண்டு வாருங்கள்''

(மாற் 12 : 15) என்றாரே அதைப் போலவே சுந்தரும் பணத்திற்கு சற்றேனும் முக்கியத்துவம் கொடுக்கவே இல்லை. எங்காவது ஒரு இடத்தில் உள்ள சபையில் கர்த்தருடைய செய்தியைக் கொடுக்கும்படி அவரை அழைத்தால் பிரசங்கித்ததற்காக காணிக்கை கொடுத்தால் அதை வாங்காமல் தான் அடுத்துச் செல்ல வேண்டிய ஊருக்குச் செல்லுவதற்கான ஒரு ரயில்வே டிக்கெட் மட்டும் எடுத்துக் கொடுத்தால் அதுவே போதுமானது, பணம் கட்டாயம் வேண்டவே வேண்டாம் என்பார். அதற்கும் மீறி பணத்தை வலுக்கட்டாயமாக மக்கள் அவருக்குக் கொடுத்தால் தன்னை நாடி வரும் பிச்சைக்காரனுக்கு அந்தப் பணப் பொட்டணத்தை அப்படியே எடுத்துக் கொடுத்துவிடுவார். அந்தப் பொட்டணத்தில் எத்தனை ரூபாய் இருந்தது? பிச்சைக்காரனுக்கு எவ்வளவுதான் கொடுக்க வேண்டும்? என்ற கட்டுப்பாடு, நியதி எல்லாம் இரக்கத்தின் உருவான அந்த பரிசுத்த மகாத்துமாவிடம் இல்லாதிருந்தது.

தேவனுடைய மகிமையின் சுவிசேஷத்தை உலக நாடுகள் தோறும் எடுத்துச் சென்று உலகம் முழுவதும் அதைப் பிரசிங்கித்த அவருக்குத் தாம் சென்ற இடங்களில் எல்லாம் தேவ மக்கள் எவ்வளவோ பணங்களை காணிக்கைகளாக அவருக்குக் கட்டாயம் கொடுத்திருப்பார்கள். ஆனால்,தேவ மனிதர் அவைகளை எல்லாம் ஏற்றுக்கொள்ளாமல் தான் செல்ல வேண்டிய நாடுகளுக்குச் செல்லத் தேவையான கப்பல் அல்லது விமான யாத்திரைக்கான டிக்கெட்டுகளை மாத்திரம் தனக்கு எடுத்துத் தரும்படியாக கேட்டுப் பெற்று இறுதியில் தனது இந்திய தாய் நாட்டிற்கு வந்து சேரும்போது வெறுங்கையனாக வந்து சேருவார். நமது இன்றைய பிரசங்கிமார்கள் என்றால் அவர்கள் சென்ற நாடுகளில் மக்கள் கொடுத்த காணிக்கைகளும், அன்பளிப்புகளும் சூட்கேஸ்களில் நிரப்பப்பட்டு அவர்கள் இந்தியா வருமுன் அந்த சூட்கேஸ்கள் விமான நிலையம் வந்து அவர்கள் வருகைக்காக காத்துக்கிடக்கும். எல்லா தேவ ஊழியர்களையும் நான் இங்கு குறிப்பிடவில்லை. ஒரு சமயம் சாதுசுந்தர்சிங் தனது உலக நாடுகளின் சுவிசேஷ சுற்றுப் பயணத்தின் போது இலங்கை தேசம் வந்தபோது அங்குள்ள பட்டணத்தின் சுவர் ஒன்றில் ''உலகப் புகழ்பெற்ற பிரசங்கியார் சாதுசுந்தர்சிங் அவர்கள் பேசுகின்றார்'' என்ற ஒரு சுவரொட்டியை அவர் வாசித்து நடுநடுங்கிப்போனதாகவும், அவர் உடம்பெல்லாம் பயத்தால் வியர்த்துக் கொட்டினதாகவும் அவர் தமது புத்தகத்தில் எழுதுகின்றார். கேரளா மாநிலத்தில் ஆண்டுதோறும் நடைபெறும் உலகப் புகழ்பெற்ற மாராமன் கன்வென்ஷனில் பேசும்படியாக ஒரு தடவை சாதுசுந்தர்சிங்

அழைக்கப்பட்டிருந்தபோது அவருக்கென்று மேடையில் போடப் பட்டிருந்த விசேஷித்த மேன்மையான ஆசனத்தில் உட்காராமல், செய்தி

கேட்க வந்த மற்ற மக்களைப் போல கீழே தரையில் சம்மணம் போட்டு ஏழைக்கு ஏழையாக அமர்ந்திருந்தாரே அந்த மகாத்துமா! ஆ, எத்தனை மனத்தாழ்மை நிறைந்த தேவ பக்தன். இன்றைக்கு நம் நடுவிலுள்ள அற்புதம், அடையாளங்களை நிகழ்த்துகின்ற பிரசங்கிமார்களுக்கும் அந்த பரிசுத்த தேவ மனிதருக்கும் உள்ள பெரும் பிளப்பான வித்தியாசத்தைக் கவனித்தீர்களா? ஆம், தனது தோளில் தனது வாழ் நாள் காலம் முழுவதும் தூக்கிச் சுமந்த சிலுவை அவருக்குக் கற்றுக் கொடுத்த பாடம் அது. தனது பரம எஜமானரின் பாதங்களில் கற்றுக்கொண்ட பரலோகப் பாடம் அது (எபே 4 : 21).

தந்தையின் மூலமாக அவருக்குக் கிடைத்த பெரும் செல்வத்தைக் கொண்டு எல்லா வசதிகளோடும் கஷ்டமின்றி வாழ்வதற்குப் பதிலாக தனது வாழ்நாள் முழுவதும் தன் ஆண்டவருக்காக சிலுவை சுமக்கலானார். ஆண்டாண்டுதோறும் தீபெத் நாட்டிற்கு தேவனுடைய சுவிசேஷத்தை சொல்லொண்ணா பாடுகள் துயரங்களின் ஊடாக சுமந்து கொண்டு சென்று அந்தக் கொடுமைக்கார லாமாக்கள், இரக்கமற்ற தீபெத்தியர்கள் மத்தியில் பிரசங்கித்து, பிரசங்கித்து இறுதியில் அந்த மக்களுக்காகவே தனது ஜீவனையும் அவர் அர்ப்பணம் செய்தார். தன்னை ஆட்கொண்ட தனது அன்பின் ஆண்டவருக்காக தன்னை ஒன்றுமில்லாத பிச்சைக்காரனாக்கிக் கொண்ட சாதுசுந்தர்சிங் என்ற அந்த பரிசுத்த மகாத்துமாவின் படத்தையும் நீங்கள் பார்த்து மகிழ இந்தச் செய்தியில் அதைப் பிரசுரித்திருக்கின்றேன்.

வாசிக்கும் அன்பான தேவப்பிள்ளையே, ''சிலுவையே மோட்சம்'' என்று பறைசாற்றிய அந்த பரிசுத்த தேவ பக்தன் தனது வாழ்நாட்காலம் முழுவதும் சிலுவையையே தனது ஆண்டவருடைய கட்டளைப்படி அனுதினமும் தூக்கிச் சுமந்தார். அந்தச் சிலுவைதான் அவரது ஆனந்தமும்,

களிகூருதலுமாகவிருந்தது. அந்தச் சிலுவையைவிட்டு அவரால் ஒரு கண நேரம் கூட பிரிந்து வாழ முடியவில்லை. அந்தச் சிலுவையே அவரை மிகவும் பத்திரமும் பாதுகாப்புமாகப் பரலோகம் கொண்டு போய்ச் சேர்த்தது.

அந்த பாக்கிய சிலுவையே பரதேசியும், அரதேசியுமான உனக்கு இந்தப் பாழ் உலகத்தில் அடைக்கலமும், ஆறுதலுமாக இருப்பதாக. மற்ற மக்கள் தங்கள் இஷ்டம் போல தங்கள் தங்கள் வழியை இந்த உலகத்தில் தெரிந்து கொள்ளட்டும். மனதும், மாம்சமும் விரும்பும் வழிகளில் அவர்கள் நடக்கட்டும். ஆனால் உனது பாதை சிலுவைப் பாதை மட்டுமே. அந்தச் சிலுவைப் பாதையே உன்னைத் தனது இரத்தக் கிரயத்தால் கொண்ட உன் ஆத்தும நேசரின் ராஜ பாதை. பாடுகள், கண்ணீர்கள், கிலேசங்கள், பெருமூச்சுகள், வியாகுலங்களால் அந்தச் சிலுவைப் பாதை நிரம்பியிருந்தாலும் அது ஒன்றே பாதுகாப்பானது. அந்தச் சிலுவைப் பாதையே ஜீவப்பாதையுமாகும். அந்தச் சிலுவைப் பாதை ஒன்றை மட்டுமே நாம் தெரிந்து கொள்ள அன்பின் கர்த்தர் உங்களுக்கும், எனக்கும் தயைபுரிவாராக. ஆமென்.

வாழ்க சிலுவையே வாழ்க!
பாரமற்ற பாரமே,
உன்னை முழு மனதார
தோள்மேல் ஏற்றுக்கொள்வேனே.
சிலுவை சுமந்தோராக
அவரைப் பின்பற்றுவோம்,
தீரங்கொண்டு வீரராக
துன்பம் நிந்தை சகிப்போம்.

வாழ்க சிலுவையே வாழ்க,
மோட்சத்தின் முன் தூதனே,
நீதிமான்கள் இளைப்பாற
நேர் வழியாம் வாசலே!

உம்மைப் போல என்னை மாற்றும், இயேசய்யா உம்மைப் போல என்னை மாற்றும்

(காலஞ்சென்ற ''வருகையின் தூதன்'' ஆசிரியர் Rev. S. தேவதாசன் ஐயா அவர்களைக் குறித்து உங்கள் சகோதரனின் எளிமையான சாட்சி)



''வழிகளிலே நின்று, பூர்வப் பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள், அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்'' (எரேமியா 6 : 16) என்ற பூர்வப்பாதைகளையும், நல்ல வழியான மனந்திரும்புதலையும், பாவ மன்னிப்பையும் (லூக்கா 24 : 47) சிலுவையையும், சிலுவைப் பாதையையும் (1 கொரி 1 : 23 - 24 , 2 : 2) தேவ ஜனத்துக்குப் பிரசிங்கித்த மெய் தேவ பக்தர்களில் தேவதாசன் ஐயா அவர்களும் ஒருவராவார்கள். நல்ல பூரண வயதான 101 ஆம் வயதில் தனது நித்திய பேரின்ப இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்த ஐயா அவர்களின் மரணத்தைக் கேள்விப்பட்ட, அவர்களை அறிந்த ஒவ்வொரு கர்த்தருடைய பரிசுத்த தேவப்பிள்ளையும் ''என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரை வீரருமாயிருந்தவரே'' என்று தங்கள் உள்ளத்தில் புலம்பி அழும் அளவிற்கு அவர்கள் கர்த்தருடைய நாமத்திற்கு மகிமையாகவும், அநேக ஆயிரம், ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாகவும் மிகவும் சிறப்பான தேவ ஊழியம் செய்தவர்கள். சபைப் பாகுபாடின்றி அநேகமாக தமிழ்நாட்டில் உள்ள எல்லா சிறிய பெரிய ஊர்களிலுள்ள தேவாலயங்களிலும், ஜெப வீடுகளிலும், கன்வென்ஷன் கூட்டங்களிலும், உயிர் மீட்சி கூட்டங்களிலும் தேவச் செய்தியை ஆத்தும பாரத்தோடு பகிர்ந்து கொண்ட மெய் தேவ பக்தன் அவர்கள். சிறந்த வேத அறிவுடையவர்கள். அவர்களுடைய தேவச் செய்தியைக் கேட்டு தங்கள் ஆவிக்குள் பரவசமடையாமல் எவரும் இருக்கவே முடியாது. அப்படியே இலங்கை தேசத்திலும் அவர்கள் பல இடங்களில் பிரசிங்கித்திருப்பார்கள் என்று நாம் நிச்சயமாக நம்பலாம். அவர்களுடைய ஊழியங்களால் ஆண்டவரண்டை வழிநடத்தப்பட்ட ஆத்துமாக்களின் எண்ணிக்கையை நாம் நமது அருமை இரட்சகரை முகமுகமாக பரலோகில் தரிசிக்கும் அந்த பாக்கிய நாளில் கண்டு கர்த்தரை ஸ்தோத்தரிப்போம்.

மிகவும் எளிமையான தேவ ஊழியன்

தாங்கள் பேசும் கூட்ட மேடை வரை தங்கள் கார் போகக்கூடிய வழியை அமைத்துத்தரக் கேட்டும், தாங்கள் தங்கும் அறைகள் முழுமையாக குளிர்சாதன வசதிகள் கொண்டதாக இருக்க வேண்டும் என்றும், போக வர விமான பயணத்துக்கான செலவுகள் கொடுக்கப்படவேண்டுமென்றும், பேசுவதற்கு நாள் ஒன்றுக்கு இத்தனை ஆயிரம் ரூபாய் கட்டாயம் கொடுக்கப்படவேண்டுமென்றும், இன்னும் இந்தவிதமாகத் தங்கள் நிபந்தனைப் பட்டியலை நீளமாக்கி பிரபல்யமான தேவ ஊழியர்கள் தங்களை அழைக்கும் சபைகளை வற்புறுத்திக்கேட்கும் இந்தக் கடைசி கால நாட்களில், ஐயா அவர்கள் தனது பரம எஜமானரைப் போல தாழ்மையின் கோலத்தை எடுத்திருந்தார்கள். அவர்கள் பேசும் கூட்டத்திற்கு எந்த ஒரு பணமும், எந்த ஒரு வசதியும் கேட்டதே கிடையாது. நான் வாலிபனாக இந்த மலை நாட்டிலுள்ள ஒரு தேயிலைத் தோட்டத்தில் குமஸ்தாவாக வேலை செய்து கொண்டிருந்த நாட்களில் ஒரு நாள் அவர்கள் என்னோடு கூட ஒரு சிறிய வீட்டில் தங்கியிருந்தார்கள். எழுந்து நின்றால் தலை தட்டக்கூடிய அத்தனைச் சிறிய அந்த மாடி வீட்டில் போடப்பட்டிருந்த ஒரு சிறிய கட்டிலில் அவர்கள் படுத்திருந்தார்கள். நான் அவர்களுக்கு கீழே தரையில் பாயை விரித்துப் படுத்திருந்தேன். வீட்டில் கழிப்பறை வசதி கிடையாது. அதை அவர்கள் சற்றும் பொருட்படுத்தாமல் மகிழ்ச்சியோடு வீட்டிற்கு அருகில் உள்ள தேயிலைக்காட்டிற்குப் போய் வந்தார்கள். ஆ, எத்தனை எளிமை! இரவில் வெகு நேரம் வரை தங்களுடைய வருகையின் தூதன் பத்திரிக்கையில் வெளியிடுவதற்கான மொழி பெயர்ப்பு வேலையைச் செய்து கொண்டும், ஜெபித்துக்கொண்டும் இருந்தார்கள்.

உம்மைப்போல என்னை மாற்றும், இயேசய்யா உம்மைப்போல என்னை மாற்றும்

கோத்தகிரியில் உள்ள யூனியன் ஹால் என்ற இடத்தில் ஐயா அவர்களை தேவச்செய்தி கொடுக்கும்படியாக ஒரு கூட்டம் ஒழுங்கு செய்திருந்தேன். அதில் அவர்கள் கிறிஸ்தவ மக்களுக்கு கற்றுக்கொடுத்த ஒரு சிறிய பல்லவியின் ஒரு அடியையே மேலே நீங்கள் காண்கின்றீர்கள். ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது ஆண்டவராகிய இயேசுவைப்போல மாற வேண்டும் என்பதே ஐயா அவர்களின் இருதயத்தின் கதறுதலாகவிருந்தது. அந்தக் கூட்டங்கள் ஒன்றில் அவர்கள் சொன்ன ஒரு சம்பவம் எனக்கு இன்னும் நினைவில் உள்ளது. புகழ்பெற்ற மிஷனரியான ஸ்டான்லி ஜோன்ஸ் என்பவர்

நமது தேசத் தந்தை காந்தி அடிகளிடம் சென்று ''ஐயா, இந்திய தேசத்தில் கிறிஸ்தவ மார்க்கம் முதல் நூற்றாண்டிலேயே ஆரம்பமான போதினும், எந்த ஒரு வளர்ச்சியும் இல்லாமல் அப்படியே அது தேக்க நிலையிலேயே இருப்பதன் காரணம் என்ன என்று கேட்டபோது ''இந்தியாவில் உள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒரு சின்ன இயேசுவாக மாறிவிட்டால் இந்தியாவை நீங்கள் விரைவில் கிறிஸ்தவ நாடாக மாற்றிவிடலாம்'' என்று காந்தி அடிகள் பதில் கூறினாராம். அப்படியே கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் கட்டாயம் ஒரு சின்ன இயேசுவாக மாற்றமடைய வேண்டும் என்று வற்புறுத்திக் கூறினார்கள். அத்துடன் ''ஆண்டவரே, என்னை உம்மைப்போல மாற்றும், உமது சாயலை என்னில் தாரும்'' என்று நாம் கெஞ்சிக் கதற வேண்டும் என்றும் ஐயா அவர்கள் சொன்னார்கள். கிறிஸ்தவனின் தனிப்பட்ட வாழ்வின் பரிசுத்தத்தை தனது தேவச் செய்திகளில் எல்லாம் மிகவும் வலியுறுத்திக் கூறி வந்தார்கள். ''என்னுடைய சபை செத்துப் போயிற்று என்று சொல்லாதே. செத்தது சபை அல்ல, தனி மனிதனாகிய நீயேதான் செத்திருக்கின்றாய். நீ சரியாகிவிட்டால் உனது சபையும் சரியாகிவிடும்'' என்பார்கள்.

''வேடன் வருவான், வலையை விரிப்பான், நாங்கள் அகப்பட மாட்டோம், செட்டைகளை அடித்து பறந்தே போய்விடுவோம்'' என்று சாத்தானால் பிடிபட்டு, சாத்தானுடைய கூடைக்குள் இறக்கைகளை ஒடித்துப் போடப்பட்டவர்களாக அவனுக்கு ஆகாரமாகக் கிடந்து கொண்டே கிறிஸ்தவ மக்கள் பலரும் உலக மக்களைப் போல பாவத்தில் வாழ்ந்து கொண்டே தங்கள் ஆவிக்குரிய நிர்ப்பந்தமான நிலையை உணராமல் தாங்கள் மோட்சம் போகப் போகின்றவர்களைப் போல இன்று ஆனந்த பரவசத்துடன் பாடிக்கொண்டிருக்கின்றார்கள் என்ற ஐயாவின் வார்த்தைகள் நம்மை நடுநடுங்கப் பண்ணுவதாகவிருக்கும்.

அவருடைய வாயிலிருந்து புறப்பட்ட கிருபையுள்ள வார்த்தைகள் (லூக்கா 4 : 22)

அன்பின் ஆண்டவர் இயேசுவின் வாயிலிருந்து கிருபையுள்ள வார்த்தைகள் புறப்பட்டதாக நாம் வேதாகமத்தில் வாசிக்கின்றோம். அந்தப்படியே ஐயாவின் ஜெபம், எழுத்துக்கள், வாயின் வார்த்தைகள் எல்லாம் கிருபை நிறைந்ததாகவிருந்ததை அவர்களோடு பழகிய அனைவரும் நிச்சயமாக கண்டிருக்க முடியும். நமது தேவ எக்காள பத்திரிக்கையை அவர்களுடைய தூதன் அச்சகத்தில் ஆரம்ப கால நாட்களில் பல ஆண்டுகள்

நாம் அச்சிட்டதால் ஐயாவை நான் பல தடவைகள் சந்திக்கவும், அவர்களுடைய ஜெபத்தைக் கேட்கவும், அவர்களோடு பேசவும் எனக்கு நல்ல வாய்ப்பு கிடைத்தது. கர்த்தருக்கே மகிமை. அவர்களுடைய வார்த்தைகள் தேவ வசனத்தின்படி சுருக்கமானதாகவிருக்கும் (பிரசங்கி 5 : 2) உலகத்து மனுஷர்களைப்போல நாம் அவர்களிடம் மனம்போல பேசிக் கொண்டேயிருக்க முடியாது. தேவையான வார்த்தைகளை அருமையாக நம்மோடு பேசி நமக்காக ஜெபித்து நம்மை அனுப்பிவிட்டுத் தனது ஆண்டவருடைய வேலையைச் செய்யத் தொடங்கிவிடுவார்கள். வருகையின் தூதன் பத்திரிக்யையில் அவர்கள் எழுதும் அவர்களின் தலையங்கச் செய்தி படிக்கப்படிக்கத் தெவிட்டாததாக இருக்கும். எந்த ஒரு மனிதனும் நகல் செய்து கொள்ள முடியாத ஒரு தனிப்பட்ட பரிசுத்த நடையை அவர்கள் தேவகிருபையால் தனக்கென்று ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். அப்படியே வருகையின் தூதனில் ஆங்கிலத்திலிருந்து தமிழில் அவர்கள் மொழிபெயர்த்து எழுதும் செய்திகளும் பரிசுத்த நடைகொண்டதாகவும், வாசிக்கும் நம்மை ஆவியில் அனல் மூட்டச் செய்வதாகவும் இருக்கும். அந்த எழுத்துக்கள் எல்லாம் மாம்ச சிந்தையில், மாம்ச பெலனால் எழுதப்படாமல் பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையோடு தேவ பெலத்தால் எழுதப்பட்டிருப்பதை அதை வாசிக்கும் எந்த ஒரு கர்த்தருடைய பிள்ளையும் எளிதில் கண்டு கொள்ள முடியும். கிருபை நிறைந்த அனல் மூட்டும் பாடல்களை இயற்றி எழுதும் கிருபையையும் தேவன் அவர்களுக்குக் கொடுத்திருந்தார். அவர்கள் அப்படி எழுதிய ஒரு பாடலின் வரிகள் இன்றும் என் நினைவில் மறக்காமல் உள்ளது.

குடித்து வெறித்து மயங்குகின்றாய்,
கூத்து நடனம் ஆடுகின்றாய்,
நடிக்கும் படங்களை நாடுகின்றாய்,
நாசத்தின் வழியில் ஓடுகின்றாய்,
எதை நீ அறுக்கப் போகின்றாய்?

தேவதாசன் ஐயா அவர்கள் தனது தலையங்கச் செய்தி ஒன்றில் ஒரு சமயம் ''இன்று நம்மிடையே போதனையாளர்கள் நிறைய பேர் உண்டு, ஆனால், சாதனையாளர்கள்தான் கிடையாது'' என்று எழுதியிருந்தார்கள். எத்தனை உண்மை! எத்தனை சத்தியமான வார்த்தைகள்! இன்று கிறிஸ்தவ மேடைகளிலே நின்று கல்லும் கனியும் வண்ணமாகப் பேசும் கவர்ச்சிகரமான கிறிஸ்தவ பேச்சாளிகள் பலர் நம்மிடையே உண்டு. அப்படியே கிறிஸ்தவ போதனைகளை தங்கள் தலை அறிவினால் வியாபார நோக்கத்தோடு

எழுதக்கூடிய கிறிஸ்தவ எழுத்தாளர்களும் நம்மிடையே ஏராளம் ஏராளம் பேர் உண்டு. ஆனால், அவர்களிடம் சாதனை கிடையாது. தங்களுடைய பக்தி வாழ்வின் சாதனையை அவர்களால் தேவ ஜனத்திற்கு முன்பாக வைக்க முடியாது. அவர்களுடைய ஜெப உபவாச வாழ்க்கையை, அவர்களுடைய ஆடம்பரமற்ற தாழ்மையான எளிய பரிசுத்த வாழ்க்கையை, அவர்களுடைய ஆத்தும பாரம் கொண்ட சிலுவை வாழ்க்கையை, அவர்களுடைய சரீர ஒடுக்கத்தை அவர்களுடைய வாழ்க்கையை உற்று நோக்கும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு மாதிரியாக வைக்க அவர்களால் முடியாது (1 கொரி 11 : 1) ஐயா அவர்கள் தனது வாழ்க்கையை உபவாசத்தால் ஒடுக்கியவர்கள். அவர்களுடைய உணவு பழக்கத்தை நீங்கள் கவனித்தால் குழந்தையைப்போல அத்தனை குறைவாக தனது ஆகாரத்தை எடுத்து வந்தார்கள். அவர்களுடைய சரீரமும் நீங்கள் அறிந்தபடி மிகவும் ஒடிசலாக பக்தியின் பரிசுத்த உருவமாகவிருக்கும். ஜெப மாந்தனாக விளங்கிய அவர்கள் உபவாசத்திலும் சிறந்து விளங்கினார்கள் (அநேக முறை உபவாசங்களிலும் 2 கொரி 11 : 27) அவர்களுடைய உபவாச காரியத்தைக் குறித்து அவர்கள் எழுதின ஒரு சம்பவம் உங்களுக்கு ஆசீர்வாதமாகவிருக்கும் என்ற ஆசையோடு கீழே தருகின்றேன்:-

(எனது உபவாச நாள், ஆறு நாள் கடந்து ஏழாவது நாள் ஆனது. கீழே ராமநதி பாய்கின்றது. சமதளத்திலிருந்து 6 மைல் தூரமுள்ள மலையில் ஏறி ஜெபித்துக்கொண்டிருந்தேன். ஏழாவது நாளில் ஆவியானவர் உயரமான இடத்திற்கு என்னை அழைத்துச் சென்றார். பகல் மணி 12. சதுரப் பாறையில் உட்கார்ந்து ஜெபித்துக்கொண்டிருந்தேன். நேசரைக் கண்டேன். மகிழ்ந்தேன். ஆனந்தமடைந்தேன். மாலை மணி 3. பசியால் தளர்ந்தேன். ஆகாரம் தந்து அனுப்பும் என்று கேட்டேன். வானத்திலிருந்து ஒரு வெள்ளித்தாலம் வருவதை ஆவியில் கண்டேன். எனவே கண்ணைத் திறந்து பார்த்தேன். நான் இருந்த பாறையில் சூடான சாதமும், வெண்மையான சாதத்தை மூடத்தக்கதாகவுள்ள இறைச்சிக் குழம்பும் சுடச் சுட ஆவி கிளம்பிய வண்ணம் இருந்தது. அதுமட்டுமல்ல, பக்கத்தில் ஒரு பாத்திரத்தில் தண்ணீரும் இருந்தது. ஆவலோடு அள்ளி அள்ளிச் சாப்பிட்டேன். தண்ணீரைக் குடித்தேன். தேன் போலும், நவரசமான திராட்சை ரசம் போலவும் இருந்தது. கைகளைக் கழுவினேன். மீண்டும் ஜெபித்தேன். பாத்திரம் பரலோகம் சென்று கொண்டிருந்தது. அதைப் பார்த்தவாறே மகிழ்ந்து வீட்டிற்கு ஆடிப்பாடி வந்தேன். எத்தனை ஆச்சரியமான காரியம் இது? நீங்களும் கர்த்தரை விசுவாசியுங்கள். உபவாசத்தில் பசியாற்றின தேவனல்லவா அவர்!)

கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என் மேல் இருக்கிறார் (ஏசாயா 61 : 1)

நான் ஐயாவை அறிந்து அவர்களுடன் நெருக்கமாகப் பழகியிருந்தது போல எனது பரிசுத்த மாமியாரான காலஞ்சென்ற ஞானமணி அம்மா அவர்களும் (''முள்வேலிக்குள் பரதேசி'' என்ற அருமையான புத்தகத்தை எழுதியவர்கள்) அவர்களுடைய பிள்ளைகளும் அவர்களுடன் நெருக்கமாகப் பழகியிருந்தார்கள். காலஞ்சென்ற எனது அருமை மனைவி ஐயாவை தனது சொந்த தகப்பனைப்போல நேசித்தவர்கள், அவர்கள் மேல் நல்ல அன்பும், கண்ணியமும் வைத்திருந்தார்கள். எங்களுடைய குடும்ப வாழ்வில் ஏதாவது ஏற்றத் தாழ்வுகள் இருந்தாலும் அதை ஐயாவுடன் கடிதத்தின் மூலமாகப் பகிர்ந்து கொண்டு விடுவார்கள். ஒரு சமயம், மனைவி தனது பெலவீனத்தின் காரணமாக என்னைக் குறித்து முற்றும் தவறான ஒரு காரியத்தை ஒரு இன்லாண்ட் லட்டரில் எழுதி ஐயாவுடைய முகவரியையும் அதில் எழுதி வைத்திருந்தார்கள். அந்தக் கடிதத்தை கண்ட நான் அதை அவர்களுக்கு அனுப்ப வேண்டாம் என்று திட்டமாகச் சொல்லியும் தன் இஷ்டப்படி அதை சில தினங்களுக்குப் பின்னர் தபாலில் சேர்த்துவிட்டதை நான் அறிந்தேன். ஐயா அவர்கள் என்னைக் குறித்து தவறாக எதுவும் நினைத்துவிடக்கூடாது என்ற எனது மாம்ச பிரகாரமான தூண்டுதலால் நான் அவர்களுக்கு கடிதம் எழுதினேன். உடனே அவர்கள் எனக்குப் பதில் எழுதினார்கள். ''எனது கடிதங்களுடன் ஒரு இன்லாண்ட் கவரும் காணப்பட்டது. அந்தக் கடிதத்தை நான் திறந்து வாசிப்பதற்காக முயற்சித்தபோது பரிசுத்த ஆவியானவர் நீ அதை திறந்து வாசிக்க அவசியமில்லை அதை அப்படியே குப்பைக்கூடையிலே போட்டுவிடு என்று சொன்னார். மகள் கிரேஸ் (எனது மனைவி) எனக்கு எழுதின கடிதம் அதுவாகத்தான் இருக்கும் என்று நினைக்கின்றேன்'' என்று எழுதினார்கள். அத்தனை பிரத்தியட்சமாக கர்த்தருடைய பரிசுத்த ஆவியானவர் ஐயா அவர்களுடைய தனிப்பட்ட வாழ்விலும், அவர்களுடைய தேவ ஊழியங்களிலும் கிரியை நடப்பித்து தம்முடைய நாமத்தை மகிமைப்படுத்தி வந்தார். கர்த்தருக்கே மகிமை.

பாவியாகிய என்னை தேவன் பின் வரும் நாட்களில் தமது நாமத்திற்கு மகிமையாக பயன்படுத்தி நமது தேவ எக்காள ஊழியங்களையும் ஆசீர்வதிப்பார் என்று ஐயா அவர்கள் தீர்க்கத்தரிசனமாக எனது பரிசுத்த மாமியாரிடம் சொன்ன வார்த்தைகள் இன்று நிறைவேறுவதைக் நான் கண்டு கர்த்தருக்குத் துதி ஏறெடுக்கின்றேன்.

சிலுவை சுமந்தோனாக இயேசு உம்மைப் பற்றினேன், ஏழைப் பரதேசியாக மோட்ச வீடு நோக்குவேன்.

தேவதாசன் ஐயா அவர்கள் எழுதிய புத்தகங்களில் என்னை அதிகமாகக் கவர்ந்தது வேதாகமத்தின் 66 புத்தகங்களின் பேரில் அவர்கள் எழுதிய பிரசங்கங்களான ''தெளிதேன் துளிகள்'' என்ற புத்தகம்தான். பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு என்ற 2 தொகுப்புகளில் எழுதப்பட்ட அந்தப் புத்தகங்களை நான் மிகுந்த ஆசை ஆவலோடு வாசித்து மகிழ்ந்திருக்கின்றேன். குறிப்பாக அந்தப் பிரசங்கங்களில் அவர்கள் பயன்படுத்தியிருக்கும் நமது நெஞ்சத்தை நெகிழ்விக்கும் சிறப்பான உதாரணங்களை நாம் என்றும் மறக்கவியலாது. அப்படி அவர்கள் தனது மேற்கண்ட புத்தகத்தில் குறிப்பிட்ட ஒரு அருமையான விளக்கப்படத்துடன் அவர்களுடைய பரிசுத்த பக்தி வாழ்வின் சாட்சியை நான் முடிக்க விரும்புகின்றேன்.

மிகுந்த செல்வச் சீமானான ஒரு மனிதன் தனது மகளை மேற்படிப்புக்காக ஒரு பெரிய பட்டணத்துக்கு அனுப்பி வைத்தான். அந்தப் பட்டணத்துக்குச் சென்ற அவள் அங்கு நடைபெற்ற ஒரு எழுப்புதல் கூட்டத்தில் பங்குபெற்று தன்னை முற்றுமாக ஆண்டவருக்கு ஒப்புவித்தாள். தான் தனது கர்த்தரில் கண்டடைந்த உலகம் தரக்கூடாத மேலான தேவ சமாதானத்தைக் குறித்து மகிழ்ச்சி பொங்க தனது தந்தைக்கு கடிதம் எழுதினாள். கடிதத்தைப் பெற்றுக்கொண்ட அந்த தகப்பன் ''மகளே, நான் உன்னை அங்கு அனுப்பியது நீ படித்துப் பட்டம் பெற்று உலக வாழ்வில் சீரும் சிறப்புடன் வாழ்வதற்காகத்தானே ஒழிய மனந்திரும்பி இரட்சிக்கப்படுவதற்காக அல்ல. மார்க்கமானது ஏழைகளுக்கும், சொஸ்த புத்தியற்றவர்களுக்குமே தவிர நம்மைப் போன்ற செல்வந்தர்களுக்கு அல்ல. நீ உனது தீர்மானத்தை மாற்றிக்கொள்ளாதபட்சத்தில் உடனே வீடு வந்து சேர்'' என்று எழுதினான்.

கடிதம் கிடைத்ததும் அந்த வாலிப மகள் அடுத்த வண்டியிலேயே ஊர் வந்து சேர்ந்தாள். தகப்பன் எவ்வளவோ சொல்லியும் அவள் தனது ஆண்டவருடைய பேரிலுள்ள அன்பை விட்டுக்கொடுக்க மனமற்றவளாக இருந்தபடியால் அவளை தனது வீட்டைவிட்டுப் போகும்படியாகச் சொன்னான். வீட்டிலுள்ள தனக்குத் தேவையான பொருட்களை ஒரு சிறிய மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு வீட்டின் படிக்கட்டுகளைக் கடந்து சென்ற அவள் திரும்பி வந்து தனது தகப்பனிடம் தான் விரும்பும் ஒரு பாடலை வீட்டின் பியானோ வாத்தியத்தில் இசைத்துப் பாடிவிட்டுச் செல்ல அனுமதி

தரும்படிக் கேட்டாள். தகப்பன் அவளை அனுமதித்ததும் அந்த வாத்தியத்தில் அவள் அமர்ந்து :-

சிலுவை சுமந்தோனாக
இயேசு, உம்மைப் பற்றுவேன்,
ஏழைப் பரதேசியாக
மோட்ச வீடு நாடுவேன்,
உற்றார், மேன்மை, ஆஸ்தி, கல்வி,
ஞானம், லோகம் அனைத்தும்
அற்பக் குப்பை என்று எண்ணி,
வெறுப்பேனே முற்றிலும்.

உமக்காகப் பாடுபட்டோன்
நஷ்டப்படமாட்டானே,
உமக்கென்று ஜீவன் விட்டோன்
சாகா ஜீவன் பெற்றானே,
உம்மை வல்ல மீட்பர் என்று
சொல்லி, நித்தம் பற்றுவேன்,
கஸ்திபட்டும் சாவை வென்று,
வாடா கிரீடம் பெறுவேன்.

என்ற பாடலை உள்ளம் உருகப் பியானோவை இசைத்துப் பாடிவிட்டு தனது மூட்டையை எடுத்துத் தோளில் போட்டுக் கொண்டு வீட்டைவிட்டு வெளியே நடந்து சென்றதைப் பார்த்த அந்த தகப்பன் தன்னை அடக்கிக் கொள்ளக் கூடாமல் ஓடோடி வந்து தன் மகளைக் கட்டிப் பிடித்து கண்ணீர்விட்டுக் கதறி அழுது ''மகளே, இயேசுவின் அன்பு இத்தனை வல்லமையுடையதாக இருக்குமானால் நானும் அந்த ஒப்பற்ற அன்பை என் உள்ளத்தில் பெற்றுக்கொள்ள விரும்புகின்றேன். அதை நான் எப்படிப் பெற்றுக்கொள்ளலாம் என்பதை இங்கே உட்கார்ந்து என்னிடம் சொல்லு'' என்று கூறி அந்தச் செல்வச் சீமானும் ஆண்டவருடைய அன்பின் அடிமையானான்.

மேற்கண்ட அந்த மகளைப் போல, ஐயா அவர்களும் தனது வாழ்வில் ஆண்டவருடைய கல்வாரி அன்பைக் கண்டு ருசித்து அந்த அன்புக்கு அடிமையாகி தனது ஜீவகாலபரியந்தம் அந்த அன்பின் சொரூபிக்கு

உண்மையும் உத்தமமுமாக தொண்டு செய்யும் தேவப்பிள்ளையானார்கள். அத்துடன், உலக மாய்கையில் சிக்கி அந்த உலக மாய்கையில் இழுப்புண்டு செல்லும் ஒவ்வொரு கிறிஸ்தவனையும் பார்த்து ''கிறிஸ்தவனே, உனது வாழ்வின் நோக்கம் ''இனி நான் அல்ல, கிறிஸ்துவே'' (கலா 2 : 20) என்ற அனுபவத்தைக் கண்டடைவதும், அதற்கப்பால் நித்திய நரக அக்கினியை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆத்துமாவையும் சந்தித்து உனக்காக ஒருவர் கல்வாரிச் சிலுவையில் இரத்தம் சிந்தி மாண்டு நீ என்றுமாக ஆனந்தமாக வாழ ஒரு மகிமையின் மாளிகையை ஆயத்தம் செய்து வைத்திருக்கின்றார். அதை நீ கால தாமதமின்றி சுதந்தரித்துக் கொள் என்று அறைகூவி அழைப்பதை தவிர வேறொன்றுமில்லை. இந்த ஒரு நோக்கமே அல்லாமல் உன் வாழ்வில் வேறு ஒரு நோக்கமிருந்தால் அந்த வாழ்க்கை இறுதியில் பாழும் பயனற்றதாகவே முடிவடையும் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்'' என்று சவால்விட்டு அழைத்தார்கள்.

இன்று கிறிஸ்தவ வட்டாரங்களில் தேவ ஊழியர்கள் அநேக கோடி ரூபாய்களுக்கு அதிபதிகளும், முதலாளிகளுமாகவிருந்து சுகபோகங்களில் வாழ்ந்து, புறமதஸ்தர் அதைக் கண்டு மனக் கொதிப்படைந்து அந்தக் காரியங்களை எல்லாம் தங்கள் தினசரி செய்தித்தாட்களில் எழுதி விளம்பரப்படுத்தவும், கர்த்தரைத் தூஷிக்கவும் தக்கதாக ஊழியம் செய்து கொண்டிருக்கும் இந்தக் கடைசி கால நாட்களில் தேவதாசன் ஐயா அவர்கள் தன் பரம எஜமானரின் கட்டளைப்படி தனது வாழ்நாட் காலம் முழுவதும் சிலுவையை சுமந்தவர்களாகவும் (லூக்கா 9 : 23) சிலுவையையே தேவ ஜனத்திற்குப் பிரசங்கித்தவர்களாகவும் (1 கொரி 2 : 2) சிலுவை வீரனாக தன் அன்பின் ஆண்டவர் இயேசுவுக்கு தாவீது ராஜாவைப்போல தன் காலத்திலே கர்த்தருடைய சித்தத்தின்படி அவருக்கு ஊழியம் செய்தபின் நித்திரையடைந்திருக்கின்றார்கள்(அப் 13 : 36) ஐயா அவர்களின் பரிசுத்தமான ஜீவியம், அழியும் ஆத்துமாக்களைக் குறித்த அவர்களின் மெய்யான ஆத்தும பாரம், தேவ சித்தத்தின்படியான அவர்களின் கனி நிறைந்த அருமையான தேவ ஊழியம், மெய் தேவ பக்தர்களுக்கு சவாலாக விட்டுச்சென்ற அவர்களின் முன் மாதிரியான பிரகாசமான பக்தி வாழ்க்கை தேவ மக்களால் என்றும் நினைவுகூரப்படும் என்பதுடன் தமிழ் கிறிஸ்தவ திருச்சபை உள்ள காலம் வரை தேவதாசன் ஐயா அவர்கள் மிகுந்த களிகூருதலுடன் நினைவுகூரப்படுவார்கள் என்பதில் துளிதானும் சந்தேகம் கிடையாது. எல்லா துதி, கனம், மகிமை நம் ஆண்டவர் இயேசு ராஜா ஒருவருக்கே. ஆமென்.

இமாச்சல் பிரதேசத்தில் நடைபெற்ற தேவ ஊழியங்கள்

''இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, மேலே வானத்திலும் கீழே பூமியிலும் உமக்கு ஒப்பான தேவன் இல்லை. தங்கள் முழு இருதயத்தோடும் உமக்கு முன்பாக நடக்கிற உமது அடியாருக்கு உடன்படிக்கையையும், கிருபையையும் காத்து வருகிறீர்'' *(1 இராஜாக்கள் 8 : 23)*

''பரலோகத்தின் தேவனாகிய கர்த்தாவே, உம்மில் அன்புகூர்ந்து, உம்முடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கு, உடன் படிக்கையையும் கிருபையையும் காக்கிற மகத்துவமும் பயங்கரமுமான தேவனே'' *(நெகேமியா 1 : 5)*

அக்கினி ஜுவாலையைப் போன்ற கண்களையுடையவரும், உலைக் களத்தில் காய்ந்த பிரகாசமான வெண்கலம் போன்ற பாதங்களையுடையவரும், பெரு வெள்ளத்து இரைச்சலைப் போன்ற சத்தத்தை உடையவரும், வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போன்ற முகத்தை உடையவரும், தமது வலது கரத்தில் ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டு ஏழு பொன் குத்து விளக்குகளின் மத்தியிலே உலாவிக் கொண்டிருப்பவருமாகிய *(வெளி 1 : 14 - 16, 2 : 1)* ஆண்டவருக்கு முன்பாக உண்மையும், உத்தமமுமாக ஊழியம் செய்யும் அவருடைய பரிசுத்த அடியார்களுக்கு அந்த வல்ல தேவன் இன்றும் கைகொடுத்து உதவும் ஜீவனுள்ள கன்மலையாக இருக்கின்றார் என்பதை இந்த தடவை நடைபெற்ற நமது இமாச்சல் பிரதேச தேவ ஊழியத்தின் மூலமாக மீண்டும் ஒரு முறை பலமாக நிரூபித்துக் காண்பித்துள்ளார்.

இந்த தடவை நமது தேவ ஊழியத்திற்கான எந்த ஒரு திட்டமும், நோக்கமும் எனது மனதில் ஏற்படு முன்னரே ''தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்'' *(ஏசாயா 55 : 3)* என்ற தேவ வசனம் என் உள்ளத்தைப் பற்றிப் பிடித்து இடைவிடாமல் ரீங்காரமிட்டுக் கொண்டே இருந்தது. இந்த தேவ வசனத்தை நானாக என் மட்டாகத் தெரிந்து கொண்டு அதை தியானம் செய்யாத போதினும் அது தானாக என் உள்ளத்தில் வந்து திடீரென ஒட்டிக் கொண்டது. அந்த தேவ வசனம் திரும்பத் திரும்ப என் உள்ளத்தில் மணி ஓசை போல ஒலித்துக் கொண்டே இருந்தது. அந்த நாட்களில் நான் கர்த்தருடைய

பிள்ளைகளுக்கு எழுதின கடிதங்களில் எல்லாம் முகப்பில் அந்த தேவ வசனத்தையே நான் குறிப்பிட்டுக் கொண்டே இருந்தேன். அது எனக்கு மிகவும் ஆச்சரியத்தைக் கொடுப்பதாகவிருந்தது. அதையடுத்து நான் அந்த தேவ வசனத்தை தேவ பெலத்தைக் கொண்டு அதிகமாக தியானிக்கத் தொடங்கினேன். தாவீது ராஜாவுக்கு ஆண்டவர் அருளிய கிருபைகள் எத்தனை எத்தனை ஏராளம் என்று அவருடைய வாழ்க்கையை நாம் அலசி ஆராய்ந்தால் தெரிய வரும்.

சாமுவேல் தீர்க்கன் ஈசாயின் வீட்டிற்குச் சென்றபோது ஈசாய் தனது ஏழு குமாரர்களை அவருக்கு முன்பாகக் கடந்து போகப்பண்ணிய போது தனக்கு கடைக்குட்டியான ஒரு செல்ல மகன் இன்னும் உண்டு என்ற பாசமுள்ள வார்த்தையை உச்சரியாமல் அமைதியாக இருக்கும்போது சாமுவேல் தீர்க்கனே அதைக்குறித்துக் கேட்டு ஆடுகளை மேய்த்துக் கொண்டிருக்கும் தாவீதை வரவழைத்து அவனை இஸ்ரவேலின் ராஜாவாக அபிஷேகம் பண்ணுகின்றார். குடும்பத்தினர் தாவீதை அற்பமாக எண்ணியபோதும், பெற்ற தந்தையே அவனை மறந்தபோதினும் தேவன் தாவீதை மறவாமல் நினைவுகூர்ந்து அவன்மேல் தமது கிருபைகளை அள்ளிப் பொழிந்தருள்வதை நாம் காண்கின்றோம்.

சிங்கம் எத்தனை பலவானான மிருகம் என்பதை நாம் நன்கறிவோம். அதினுடைய கூர்மையானதும் பலமுமான வாயின் பற்கள், கால்களின் நீண்ட கூர்மையான நகங்கள், அதின் உடம்பின் மகா வலிமைக்கும், பலத்திற்கும் முன்பாக யாரால் அதை எதிர்த்து நிற்க முடியும்? காட்டு விலங்குகளுக்கெல்லாம் அதுதான் ராஜா. மிகுந்த பலசாலியான யானை கூட அதினண்டை நெருங்க முடியாது. எந்த ஒரு பராக்கிரமசாலியையும் சிங்கம் தனது இரும்பு போன்ற பலமுள்ள பாதத்தால் அது ஒரு அறை அறைந்தால் அந்த மனிதன் பச்சைக் களிமண்ணைப்போல சிதைந்து மாண்டு போவான். ஆனால், ஜீவனுள்ள தேவனின் அளவற்ற கிருபை தாவீதோடு இருந்ததால் அந்தச் சிங்கத்தின் தாடியைப் பிடித்து அதை தனது கரத்திலிருந்த தடியால் அடித்துக் கொன்று போட்டதாக நாம் பார்க்கின்றோம் (1 சாமு 17 : 35) அப்படியே தனது மந்தையின் ஆட்டைப் பிடித்துக் கொண்ட ஒரு பயங்கரமான கரடியையும் அவர் கொன்றதாக அதே அதிகாரத்தில் நாம் வாசிக்கின்றோம்.

ராஜாவாகி சவுல் தாவீதைக் கொல்லுவதற்காக எவ்வளவோ பிரயாசம் எடுக்கின்றான். தனக்கு எதிரே சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்த நிரபராதியான

தாவீதின் மேல் தனது ஈட்டியை ஓங்கி எறிகின்றான். ஒரு மயிரளவில் அவர் தப்பிக்கொள்ளுகின்றார். எல்லாம் தேவனுடைய அளவற்ற கிருபையே. சவுலும், அவனது படைகளும் இரவும் பகலும் தாவீதைத் தேடி கொல்லுவதற்காக காடு, மேடு, வனாந்திரமாக அலைந்து திரிகின்றனர். ஆண்டுக்கணக்காக அவருடைய பிராணனுக்காக பதிவிருந்து தேடுகின்றனர். ஆனால், ஆண்டவருடைய மட்டற்ற கிருபை அவரை எந்த ஒரு சேதமுமில்லாமல் பாதுகாத்து வழிநடத்துவதை நாம் ஆச்சரியத்துடன் வாசிக்கின்றோம். கடைசியாக ஓரிடத்தில் சவுலும் அவனது படைகளும் தாவீதை சுற்றி வளைத்து எங்கும் தப்பி ஓடாதபடி சூழ்ந்து கொண்ட நேரம் ஒரு ஆள் வந்து பெலிஸ்தர் தேசத்தில் படையெடுத்து வந்திருக்கின்றார்கள் என்று சவுலுக்கு அறிவிக்கவும் (1 சாமு 23 : 26-27) அவன் தாவீதைவிட்டுவிட்டுச் செல்லுவதை நாம் ஆச்சரியத்துடன் காண்கின்றோம். தேவனுடைய சுத்தக் கிருபை அதை நடப்பித்தது. எத்தனை எத்தனையோ யுத்தங்களை தாவீது முன்னின்று நடத்தினார். திரளான மாந்தரின் ரத்தத்தைச் சிந்தினார். அவைகள் எல்லாவற்றிலும் தேவனுடைய கிருபை சத்துருக்களின் பட்டயங்களுக்கு அவரைப் பத்திரமாகப் பாதுகாத்தது. அப்சலோம் தனது தகப்பனாகிய தாவீதைக் கொல்லுவதற்கு அகித்தோப்பேல் சொன்ன முற்றும் சரியான ஆலோசனையைத் தள்ளிவிட்டு ஊசாயின் வாய்மொழியைக் கேட்டு அந்த வாய்மொழியிலேயே அவனும் கர்வாலி மரத்தில் தொங்குண்டு சாவதற்கு கர்த்தருடைய அநாதி தேவ கிருபை அருமையாக வழிவகுத்துக் கொடுத்து உதவியது. தமது தாசனாகிய தாவீதுக்கு கிருபைகளை வாரி வாரி வழங்கி அவனைத் தமது கிருபையினால் மூழ்க்கடித்துவிட்டு அந்த தேவனே மாம்சமாகி கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் (யோ 1 : 14) அந்த தாவீதின் மைந்தனாய் அவதரித்தது (மத் 22 : 45) நமக்கு ஆச்சரியத்திலும் ஆச்சரியமாகவிருக்கின்றது. அல்லேலூயா.

தாவீது ராஜா எழுதிய சங்கீதங்கள் முழுவதும் ஆண்டவருடைய கிருபையால் நிரம்பி வழிவதை நாம் ஆச்சரியத்துடன் பார்க்கின்றோம். ஆண்டவருடைய அளவிட முடியாத கிருபைகளைத் தனது வாழ்வில் முழுக்க முழுக்க அனுபவித்த அவர் ''கர்த்தாவே, உமது கிருபை எவ்வளவு அருமையானது! அதினால் மனுப் புத்திரர் உமது செட்டைகளின் நிழலிலே வந்தடைகிறார்கள்'' (சங் 36 : 11) என்று அருமை பெருமையாக எழுதி வைத்ததுடன் ''என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும், கிருபையும் என்னைத் தொடரும்'' (சங் 23 : 6) என்ற விசுவாசத்தின் நம்பிக்கையோடு எழுதினார். ''தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகள்" (ஏசாயா 55 : 3)

என்று தேவன் குறிப்பிடும் அந்த வார்த்தையைக் கவனித்தீர்களா? தேவனுடைய அந்த நிச்சயமான கிருபைகள் அவரோடு இருந்திராத பட்சத்தில் நொடிப் பொழுதில் அவர் அதோகதியாயிருப்பார் அல்லவா? அந்த நிச்சயமான கிருபைகளை பரதேசிகளாகிய நமக்கும் நித்தியமாக தருவதாக வாக்களிக்கும் அவருடைய மகத்தான அன்புக்கு நாம் என்ன ஈட்டைச் செலுத்த முடியும்?

''கேதுரு மரங்களால் செய்யப்பட்ட வீட்டில் நான் வாசம் பண்ணும்போது தேவனுடைய பெட்டி திரைகளின் நடுவே வாசமாயிருக்கிறதே'' (2 சாமு 7 : 2) என்று தாவீது ராஜா தனக்குள்ளாகப் புலம்பும் போது தேவன் தம்முடைய நாம மகிமைக்காக கட்டப்படப்போகும் மாட்சிமையான தேவாலயத்துக்குத் தேவையான சகல பொருட்களையும் சவதரித்துக்கொள்ளத்தக்கதான கிருபைகளை தாவீதுக்கு கட்டளையிட்டு, எல்லாப் பொருட்களையும் சேர்க்கச் செய்து இறுதியில் தேவாலயத்தின் வேலையை சாலொமோன் ராஜாவைக்கொண்டு சுலபமாக நிறைவு பெறச் செய்வதை நாம் ஆச்சரியத்துடன் பார்க்கின்றோம்.

எனது உள்ளத்தில் தொடர்ந்து நிழலாடிக்கொண்டிருந்த அந்த ''தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை'' குறித்து நான் தியானிக்கையில் தாவீது ராஜாவுக்கு தேவாலயம் கட்டத் தேவையான திரளான பொருட்களைக் கொடுத்து உதவி தமது மாட்சிமையான கிருபைகளை வெளிப்படுத்திய தேவன் நமது இமாச்சல் பிரதேச தேவ ஊழியத்திற்குத் தேவையான எல்லா பொருளாதாரங்களையும் கொடுத்து உதவும்படியாக நான் அவரை நோக்கிக் கெஞ்சி நின்றேன். தமது வாக்கின்படியே தேவன் அதை நிறைவேற்றிக்கொடுத்தார். அல்லேலூயா.

உபவாச ஜெப ஆயத்தம்

ஒரு தேவ ஊழியம் நித்தியமான பலனைக் கொடுக்க வேண்டுமானால் அந்த ஊழியத்திற்காக நாம் ஜெபிப்பது மட்டும் போதாது, அந்த ஊழியத்திற்காக நாம் உபவாசிக்க வேண்டும். கர்த்தருடைய மட்டற்ற அன்பின் கிருபையால் வழக்கம்போல இந்த இமாச்சல் பிரதேச தேவ ஊழியத்திற்காகவும் நான் எனது நீண்ட உபவாச ஜெபத்தை கர்த்தருடைய பெலத்தால் எனது கரங்களில் எடுத்தேன். எனது கடுமையான சர்க்கரை நோய் பெலவீனங்களுக்கு மத்தியில் இப்படிப்பட்ட நீண்ட உபவாச ஜெபத்தை நம்மால் எடுத்து கர்த்தருக்கு மகிமையாக முடிக்க முடியுமா என்று நான்

அதிகமாக யோசித்தேன். நான் எந்த ஒரு நிலையிலும் உபவாசிக்க கூடாது என்று மருத்துவர் எனக்கு கண்டிப்பாகக் கூறியிருக்கின்றார் என்றால் தேவப்பிள்ளைகளாகிய நீங்கள் கட்டாயம் ஆச்சரியம் அடைவீர்கள். ஆண்டவர் எனக்கு இந்த உபவாச ஜெப நாட்களை வெற்றியோடு எடுத்து முடிக்க கிருபை தந்தே ஆகவேண்டும் என்று உபவாசம் ஆரம்பமாவதற்கு வெகு முன்னரே நான் கர்த்தரின் பாதங்களில் மன்றாடி வந்தேன். அன்பின் ஆண்டவர் எனது பரிசுத்த ஆவலை தமது நாம மகிமைக்காக நிறைவு செய்தார். உபவாசம் தொடங்குவதற்கு சில தினங்கள் முன்னரே சரீரத்தை அதற்காகப் பக்குவப்படுத்தி ஆகார அளவுகளை கணிசமாக குறைத்து குறிப்பிட்ட அந்த நாளிலிருந்து முழுமையான உபவாசத்தில் அமர்ந்தேன். வரவிருக்கும் இமாச்சல் பிரதேச தேவ ஊழியத்திற்காக எனது உபவாச நாட்களில் எல்லாம் மிகவும் பாரத்தோடு தேவ சமூகத்தில் நான் மன்றாடி வந்தேன். உபவாச நாட்களில் எப்பொழுதும் நான் வழக்கமாக இருப்பதைப்போன்று பகல் முழுவதும் தண்ணீர் முதலாக குடியாமல் இருந்து மாலையில் சூரிய அஸ்தமன காலத்திற்குப் பின்னர் முதலாவது ஏதாகிலும் குடித்துவிட்டு இரவு ஒரு ஆகாரம் மட்டும் சாப்பிட்டேன். அந்த ஆகாரமும் அதிகமாக சாப்பிட இயலாது. எனது உபவாச நாட்கள் எல்லாம் மிகவும் ஆசீர்வாதமாகவிருந்தன. உபவாச நாட்களில் நாள்தோறும் கூடுதலான மணி நேரங்களை ஆண்டவருடைய பாதங்களில் ஜெபத்தில் செலவிட்டேன். அவ்வப்போது எனது ஜெபங்களில் தேவனுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து என்னைத் தாழ்த்தி ஜெபித்தேன். இந்த உபவாச ஜெபங்களில் மாத்திரமல்ல எனது தனி ஜெபங்களில் எல்லாம் நான் கர்த்தருக்கு முன்பாக இவ்விதமாக தேவ கிருபையால் ஜெபித்து வருகின்றேன். தேவப் பிள்ளைகளாகிய நீங்களும் உங்கள் ஜெப வேளைகளில் தேவனுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து உங்களைத் தாழ்த்தி ஜெபிக்கப் பிரயாசப்படுங்கள். மிகவும் தேவாசீர்வாதம் காண்பீர்கள். நாம் அந்தவிதமாக ஜெபிக்க வேண்டும் என்பதற்காக நம் அன்பின் நேசரும் தமது பிதாவுக்கு முன்பாக முகங்குப்புற விழுந்து ஜெபித்து (மத் 26 : 39) நமக்கு மாதிரியைப் பின் வைத்துச் சென்றிருக்கின்றார்.

இன்னும் மலை உச்சியின் விழிம்பிற்குச் செல்

இந்த தேவ எக்காள இதழின் ஆரம்பத்தில் நீங்கள் வாசித்த தேவ மனிதர் செல்வின் குயிஸ் அவர்களின் வாழ்க்கைச் சரித்திரத்தில் குறிப்பிடும் கதையில் காணப்படுவதைப் போன்று தேவன் தமக்காகப் பெரிய காரியங்களைச் செய்யும்படியாக நம்மிடம் சொல்லுகின்றார். ஆனால், நமது அவிசுவாசத்தின்

நிமித்தமாகவும், மன பயத்தின் காரணமாகவும் நாம் அந்தக் காரியங்களைச் செய்ய மிகவும் தயக்கம் காண்பிக்கின்றோம். அந்தச் சமயங்கள் ஒவ்வொன்றிலும் தேவன் நம்மை செங்குத்து மலையின் உச்சி விழிம்பிலிருந்து முன்னுக்கு நம்மைத் தள்ளிவிட்டு நாம் நமது செட்டைகளை அடித்து வானவீதியில் பறந்து செல்ல தமது கிருபையை நமக்குத் தருகின்றார். இந்த தடவை நாங்கள் மேற்கொண்ட இமாச்சல் பிரதேச தேவ ஊழியங்களிலும் அதே காரியம்தான் நடந்தது. கரங்களில் எந்த ஒரு பொருளாதார வசதிகளும் போதுமான அளவு நிறைவாக இல்லாத சூழ்நிலையில் நான் இந்த ஊழியத்தைச் செய்ய முன் வந்தேன்.

தனது 2500 அநாதைக் குழந்தைகளுக்கு முன்பாக வைக்க எந்த ஒரு ஆகாரமும் சமையல் அறையில் இல்லாத நிலையில் சாப்பாட்டு மணியை அடித்து பிள்ளைகளைச் சாப்பாட்டுத் தட்டுகளை எடுத்துக்கொண்டு சாப்பாட்டு அறைக்கு வரச் சொல்லிவிட்டு மாபெரும் விசுவாச தேவ மனிதர் ஜியார்ஜ் முல்லர் தனது அநாதைக் குழந்தைகளின் பசி நிலையை தேவனிடம் சொல்லுவதற்காக தன் ஆண்டவரண்டை முழங்காலூன்றுவதற்காக தனது அறை வீட்டுக்குள் பிரவேசித்தது போல எனது காரியமும் இருந்தது. இன்னும் ஒரு கணிசமான ஒரு பெரிய தொகை தேவ ஊழியத்தின் பாதையில் நமக்குத் தேவைப்படும்போதே அந்த தேவையை தேவன் எப்படியாவது தமது நாம மகிமைக்காக பூர்த்தி செய்வார் என்ற நிச்சயமான நம்பிக்கையோடு நான் இங்கிருந்து புறப்பட்டேன். விசுவாசத்தைக் கனப்படுத்துகின்ற தேவன் நம்மை எந்த ஒரு தாழ்ச்சியும் இல்லாமல் வெகு அற்புதமாகக் காரியங்களைச் செய்தார். ''ஆராய்ந்து முடியாத பெரிய காரியங்களையும், எண்ணி முடியாத அதிசயங்களையும் செய்கிற தேவன்'' (யோபு 9 : 10)அல்லவா அவர்?.

உங்கள் உருக்கமான ஜெபங்கள் நடப்பித்த அற்புதங்கள்

இமாச்சல் பிரதேச தேவ ஊழியத்திற்குப் புறப்படுவதற்கு முன்னர் அச்சிட்டு நான் உங்களுக்கு அனுப்பிய 2005 ஆம் ஆண்டின் இரண்டாம் தேவ எக்காள இதழ் அச்சிடப்பட்ட பின்னர் அந்த நாட்களின் ஒரு ராக்காலத்தில் திடீரென நான் எனது படுக்கையிலிருந்து எழுந்து ஒரு முக்கியமான செய்தி அந்த இதழில் அச்சிடப்படாமல் விடுபட்டதைக் குறித்து மிகவும் துக்கம் அடைந்தேன். அச்சு வேலை எல்லாம் முடிவுபெற்று பத்திரிக்கைகளை அச்சகத்தார் நமக்கு அனுப்பப் போகின்ற கடைசி நேரம் அது. ஏற்கெனவே, நான் அந்தச் செய்தியை தேவ எக்காளத்தில் கட்டாயம் அச்சிட அவர்களுக்கு

அனுப்பியும் எப்படியோ அது அச்சிடப்படாமல் விடுபட்டுப் போயிருக்கின்றது. இமாச்சல் பிரதேச தேவ ஊழியத்திற்கு நாங்கள் வாகனங்களுடன் செல்லுகின்ற காரியத்தையும், அதற்காக தேவ எக்காள அன்பான குடும்பத்தின் மக்களை பாரத்தோடு ஜெபிக்கும்படியாகவும் நான் அதில் கேட்டிருந்தேன். அச்சாகி தயாராக இருக்கும் தேவ எக்காளத்துடனேயே அந்தச் செய்தி கட்டாயம் அச்சிடப்பட்டுச் சேர்க்கப்பட வேண்டும் என்பதை உணர்ந்த நம் அச்சகத்தார் உடனே அந்தச் செய்தியை 4 பக்கங்கள் கொண்ட ஒரு கைப்பிரதியைப் போன்று அச்சிட்டு அந்த தேவ எக்காள இதழுக்குள்ளேயே வெளியே தெரியாமல் நேர்த்தியாக வைத்துவிட்டனர். கர்த்தருக்கு ஸ்தோத்திரம்.

தேவ எக்காளத்தோடு அச்சிடப்பட்டு வரவேண்டிய அந்தச் செய்தி தனித்தாளில் ஒரு ஜெபக்குறிப்பைப் போல வெளி வந்ததும் தேவனுடைய அநாதி கிருபையாகவே இருந்தது. காரணம், அது பிரத்தியேகமாக வந்ததினால் தேவப் பிள்ளைகள் அதற்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து பாரத்தோடு ஜெபித்தார்கள். அந்த ஜெபக் குறிப்பைத் தனியாக எடுத்து தங்கள் வேதாகமங்களில் வைத்து உள்ளத்தின் பெருமூச்சோடு அந்த ஊழிய நாட்களில் எல்லாம் அனுதினமும் ஜெபித்து வந்திருக்கின்றார்கள். தனிமை ஜெபங்களிலும், சபை ஆராதனைகளிலும், உபவாச ஜெப கூடுகைகளிலும், வீடுகளில் கூடி ஜெபித்த ஜெபக்கூட்டங்களிலும் தேவ மக்கள் உள்ளத்தின் பாரத்தோடு அதற்காக ஜெபித்திருக்கின்றார்கள். அப்படியாக தேவ மக்கள் ஜெபித்து வந்த காரணத்தினால்தான் இந்த தடவை எங்கள் தேவ ஊழியத்தின் பாதையில் நாங்கள் எதிர்கொண்ட பெரிய எதிர்ப்புகளையும், சத்துருவான பிசாசின் போராட்டங்களையும் நாங்கள் வெற்றியோடு மேற்கொள்ள முடிந்தது. அத்துடன் நாங்கள் எல்லாரும் பாதுகாப்பாக உங்கள் மத்தியில் திரும்பி வரவும் முடிந்தது. இல்லையெனில், தேவ ஊழியர்களாகிய நாங்கள் எல்லாரும் மதமாற்றத் தடைச்சட்டம் அமுலில் உள்ள இமாச்சல் பிரதேசத்திலுள்ள ஏதாவது ஒரு சிறைக்கூடத்திலேயே நாங்கள் இருக்க வேண்டியதாக இருந்திருக்கும். ஒரு அரசியல் கட்சி தனது ஹிந்தி தினசரி பத்திரிக்கையான ''தைனிக் ஜாக்கரண்'' என்ற பத்திரிக்கை தனது பத்திரிக்கை நிருபர்களை அநேகமாக நாங்கள் எங்கள் வாகனங்களுடன் ஊழியங்களுக்குச் செல்லும் இடங்களுக்கெல்லாம் அனுப்பி வைத்து நாங்கள் எந்த எந்த இடங்களுக்குச் சென்று கொண்டிருக்கின்றோம், என்ன என்ன கிறிஸ்தவ இலக்கியங்களை மக்களுக்கு விநியோகித்துக் கொண்டிருக்கின்றோம் என்ற விபரங்களை எழுதி வந்ததுடன், நாங்கள் கட்டாய மதமாற்றம் செய்கின்றோம்,

கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள இந்து மக்களை தங்கள் நெற்றியில் பொட்டு வைக்கக்கூடாதென்று வற்புறுத்துகின்றோம், கிராம மக்களின் பொருளாதார நிலைகளை கேட்டு அறிகின்றோம், ஒவ்வொரு இந்து கிராமங்களிலும் நாங்கள் கிறிஸ்தவ தேவாலயங்களைக் கட்டப் போகின்றோம் என்பது போன்ற விஷமத்தனமான பொய்களை எல்லாம் தனது பத்திரிக்கையில் எழுதியதுடன், கிறிஸ்தவ இலக்கியங்களைக் கொடுத்துக் கொண்டிருந்த ஒரு இடத்தில் உள்ளூர்வாசிகள் எங்களை அடி, அடி என்று அடித்துத் துவைத்து எடுத்துவிட்டதாகவும் எழுதினார்கள். அதின் மறைவான வேண்டுகோள் என்னவெனில், கிறிஸ்தவ ஊழியர்களை நாங்கள் நன்கு அடித்துவிட்டோம், அவர்கள் உங்கள் இடங்களுக்கு வரும்போது நீங்களும் தைரியமாக எங்களைப் போல அவர்களை அடித்து நொறுக்குங்கள் என்பதுதான். எங்கள் ஊழிய சம்பந்தமான புகைப்படங்களை தங்கள் ஹிந்தி தினசரியின் முகப்பு முன் பக்கத்திலேயே போட்டு விபரம் எழுதியிருந்தார்கள். அவர்களுடைய இறுதிக்கட்ட முயற்சியாக இமாச்சல் பிரதேசத்திலுள்ள ''குளு'' என்ற இடத்தில் எங்களை காவல் நிலையத்திற்கும் கொண்டு சென்றனர். ''கர்த்தர் உங்களுக்காக யுத்தம் பண்ணுவார், நீங்கள் சும்மாயிருப்பீர்கள்'' (யாத்14:14) என்ற தேவ வார்த்தையின்படி இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் உங்கள் உருக்கமான ஜெபங்களைக் கேட்டு எங்களுக்காக யுத்தம் செய்து சாத்தானுடைய எல்லா சதி ஆலோசனைகளிலிருந்தும் எங்களைப் பாதுகாத்தார். அது குறித்த தெளிவான விபரம் கர்த்தருக்குச் சித்தமானால் பின்னர் நான் உங்களுக்கு எழுதுவேன்.

தேவ எக்காளத்தின் அந்த தனித்தாளில் உங்களை ஜெபிக்கும்படியாகக் கேட்டுக்கொண்ட எல்லாக் காரியங்களுக்கும் அன்பின் ஆண்டவர் விடை கொடுத்திருக்கின்றார் என்றால் நீங்கள் மிகவும் ஆச்சரியம் அடைவீர்கள். அதில் ஒரு ஜெபக் குறிப்பு என்னவெனில் நாங்கள் கொண்டு செல்லும் ஏராளமான தேவனுடைய பிரசுரங்களை ரஸ்தா மார்க்கத்திலுள்ள சுங்கச்சாவடிகளில் உள்ள அதிகாரிகள் அவைகள் விற்பனைக்கான புத்தகங்கள் என்று கூறி தேவையில்லாமல் எங்களிடம் பணம் வசூலியாதிருக்க உங்களை ஜெபிக்கச் சொல்லிக் கேட்டிருந்தேன். அந்த ஜெப வேண்டுகோளை அன்பின் ஆண்டவர் உங்கள் ஜெபங்களைக் கேட்டு அப்படியே நிறைவேற்றிக் கொடுத்தார். 157 அட்டைப் பெட்டிகளில் பாக்கிங் செய்யப்பட்ட அந்த ஏராளமான பிரதிகளை உன்னா என்ற இடத்திலிருந்து சம்பா என்ற இடத்திற்கும், சம்பாவிலிருந்து காங்டா என்ற இடத்திற்கும், காங்டாவிலிருந்து பாலன்பூருக்கும், பாலன்பூரிலிருந்து குளு என்ற இடத்திற்கும் மினி லாரிகளை

நாங்கள் வாடகைக்கு அமர்த்திக் கொண்டு சென்றோம். லாரிக் கட்டணமாகவே நாங்கள் ரூபாய் 9000 கொடுத்தோமென்றால் அதின் எண்ணிக்கை, அதின் எடையை நீங்கள் ஒருவாறு யூகித்துக் கொள்ளுவீர்கள் என்று நான் நம்புகின்றேன். ஒரே ஒரு சுங்கச் சாவடியில் மாத்திரம் ஒரு மனிதர் காப்பிச் செலவுகளுக்காக ரூபாய் 30 கேட்டிருக்கின்றான். அதை அந்த வாகனத்துடன் சென்ற நம்முடைய தேவ ஊழியர் பாஸ்டர் என்.சாமுவேல் அவர்கள் உடனே கொடுத்திருக்கின்றார்கள். நாங்கள் எங்கள் இரு வாகனங்களுடனும் சென்று கொண்டிருந்த ஒரு இடத்தில் ''பறக்கும் படை'' என்ற ஒரு விற்பனை வரி பிரிவினர் எங்கள் வாகனங்களை சோதனையிட்டனர். மக்களுக்கு இலவசமாகக் கொடுக்கக்கூடிய கிறிஸ்தவ புத்தகங்கள் மாத்திரம் எங்களிடம் இருப்பதை அறிந்து அவர்கள் எங்களை ஒன்றும் செய்யவில்லை. ஆனால், எங்கள் வசம் கிறிஸ்தவ கேஸட்டுகள் இல்லை என்பதை திட்டமாக எங்களிடம் கேட்டு ஊர்ஜிதம் செய்து கொண்டார்கள். ஒருக்கால் அவைகள் எங்கள் வசம் இருந்திருந்தால் நாங்கள் அவர்களுடைய அபராதத்திற்கு கட்டுப்பட வேண்டியதாக இருந்திருக்கும். கர்த்தர் காத்துக்கொண்டார்.

எங்கள் ஊழிய நாட்கள் முழுமையிலும் எங்கள் ஒவ்வொருவருக்கும் கர்த்தர் நல்ல சுகத்தைத் தரும்படியாக உங்களை ஜெபிக்கக் கெட்டிருந்தேன். அப்படியாகவே உங்கள் அன்பின் ஜெபங்களைக் கேட்டு எல்லா வியாதி பிணிகளிலிருந்தும் ஆண்டவர் எங்களை விலக்கிக் காத்துக் கொண்டார். பொதுவாக, இப்படிப்பட்ட ஒவ்வொரு ஊழியங்களிலும் நான் குடிக்கும் தண்ணீர் எனக்கு ஒத்துக்கொள்ளாமல் இருமலினால் சொல்லொண்ணா பாடுகளை நான் அனுபவிப்பேன். இருமலின் கடுமை காரணமாக இரவில் தூக்கமில்லாமல் கஷ்டப்படுவேன். ஆனால், அன்பின் கருணாகரக் கர்த்தர் உங்கள் ஜெபம் கேட்டு இந்த தடவை இருமல் என்னை அணுகாதபடி முற்றுமாகக் காத்துக்கொண்டார்.

எங்களுடைய ஆகார விசயங்களிலும் அன்பின் ஆண்டவர் எங்களுக்கு இரக்கம் காண்பித்து நல்ல சுத்தமான ஆகாரங்களை நாங்கள் பெற்றுக்கொள்ள ஏற்ற இடங்களை எங்களுக்கு காண்பித்து எங்களை வழிநடத்தினார். அந்தக்காரியங்களை எல்லாம் நினைத்துப் பார்க்கும்போது உண்மையாய்த் தம்மை நோக்கி கூப்பிடுகிற தம்முடைய அடியாருக்கு தேவன் எத்தனை சமீபமாக இருக்கின்றார் என்பதைக் காணமுடிந்தது. எல்லாம் தேவ மக்களாகிய உங்களுடைய உருக்கமான ஜெபங்கள்தான்.

''நான் உங்களைப் பணப்பையும் சாமான் பையும் இல்லாமல் அனுப்பினபோது ஏதாகிலும் உங்களுக்குக் குறைவாயிருந்ததா?'' (லூக்கா 22 : 35) என்ற தேவ வாக்கின்படி எங்களுடன் கொண்டு சென்ற பணம் ஊழியத்தின் எல்லாத் தேவைகளையும் போதுமானபடி சந்திக்குமாஎன்ற கலக்கத்தோடிருந்த நிலையில் தேவன் எந்த ஒரு தாழ்ச்சியும் வைக்காமல் எங்களை அதிசயம் அற்புதமாக வழிநடத்தினார்.

ஊழியத்திற்குத் தேவையான தரமான கைப்பிரதிகள்

இந்த தடவை நமது ஊழியத்திற்குத் தேவையான பல்லாயிரக் கணக்கான சுவிசேஷப் பிரசுரங்களை நாம் ஏற்ற வேளையில் அச்சிட்டுக் கொண்டு செல்ல அன்பின் ஆண்டவர் நமக்குக் கிருபை செய்தார். அதற்கான முழுப் பொருளாதாரங்களையும் அவர் நமக்குத் தந்து உதவினார். நாம் அச்சிட்டு எடுத்துச் சென்ற தேவனுடைய பிரசுரங்கள் நல்ல விலையுயர்ந்த காகிதத்தில் சிறப்பாக அச்சிடப்பட்டவைகளாகும். விலை குறைந்த கந்தை தாட்களில் நாம் அவற்றை அச்சிடவில்லை. ஒவ்வொரு ஆண்டும் நாம் இந்தவிதமாகவே நமது தேவனுடைய பிரசுரங்களை அச்சிடுகின்றோம். அதைப் பெற்றுக் கொள்ளுவோரில் பலரும்கூட அவைகள் அழகாக இருக்கின்றன என்று சொல்லி வாங்கிப்படிக்கும் அளவிற்கு அதின் தரம் உள்ளது. கர்த்தருக்கே மகிமை. ''சாந்தி மார்க்கம்'' என்ற ஹிந்தி மொழி லூக்கா சுவிசேஷம் 20000 பிரதிகள் அலகாபாத்திலுள்ள வேதாகம சங்கத்தினர் மூலமாக பெங்களூரில் அச்சிடப்பட்டு நமக்குக் கொடுக்கப்பட்டது. அந்த சுவிசேஷப் பங்குகளில் எல்லாம் இமாச்சல் பிரதேசத்திலுள்ள அப்போஸ்தல சபையின் தேவ ஊழியர் சங்கர்தாஸ் அவர்களின் முழு முகவரியும் பின் தொடர் ஊழியத்திற்காக அச்சிடப்பட்டிருந்தது. இந்த சுவிசேஷங்களுக்கென்றே இந்திய வேதாகம சங்கத்தினர் பிரத்தியேகமாக ஒரு லாரியை ஒழுங்கு செய்து பெங்களூரிலிருந்து அலகாபாத்துக்கு அனுப்பியிருக்கின்றார்கள். அதை ஏற்றி வந்த லாரி ஜபல்பூருக்கும், அலகாபாத்துக்கும் இடையிலிருந்த தேசீய நெடுஞ்சாலைப் பாலம் ஒன்று மழை வெள்ளம் காரணமாக அடித்துச் செல்லப்பட்டுவிட்டபடியால் அந்த இடத்திலேயே ஒரு வார காலம் நின்று அலகாபாத் வந்திருக்கின்றது. ஒவ்வொரு லூக்கா சுவிசேஷத்துடனும் வேதாகம சங்கத்தின் 7 இலவச சுவிசேஷ துண்டுப்பிரதிகளை ஒன்றிணைத்து ஒரு பிளாஸ்டிக் பையில் போட்டு எங்களுக்கு அனுப்பி வைத்தனர். நாட்கள் ஆகிவிட்டதால் உள்ளூரிலுள்ள தொழிலாளிகளைக் கொண்டு வந்து ஒரு பாக்கெட்டுக்கு

40 பைசா வீதம் கூலி கொடுத்து வேலையை முடித்து தனி லாரி ஒழுங்கு செய்து அதை இமாச்சல் பிரதேசத்திலுள்ள உன்னா என்ற பட்டணத்திலுள்ள தேவ ஊழியர் பாஸ்டர் சங்கர்தாஸ் அவர்களுடைய வீட்டிலேயே கொண்டு வந்து டெலிவரி செய்தார்கள். நாங்கள் ஆர்டர் செய்திருந்த நிறைய படங்களுடன் கூடிய பெரிய ஹிந்தி மொழி யோவான் சுவிசேஷங்கள் 1500 ஐயும் சேர்த்து அனுப்பியிருந்தார்கள்.

ஒட்டன்சத்திரத்திலுள்ள கர்த்தருடைய பரிசுத்த தேவ ஊழியர் டாக்டர் செல்வின் ஐயா அவர்களின் ''சமாதான காரணர்'' என்ற தமிழ் கைப்பிரதியான சிறு புத்தகத்தை ஹிந்தியில் மொழி பெயர்த்து சுமார் 12000 பிரதிகளும், ''உங்கள் வாழ்வின் உற்ற நண்பன்'' ''தேவன் உங்களை நேசிக்கின்றார் என்பது உங்களுக்குத் தெரியுமா?'' என்ற ஹிந்தி கைப்பிரதிகளை வகைக்கு 10000 வீதம் 20000 பிரதிகளை சிவகாசியிலுள்ள ''ஓரேப் அச்சுக்கூடத்தினர்'' மிகவும் சிறப்பாக அச்சிட்டு ஏற்ற சமயத்தில் உன்னாவுக்கு அனுப்பியிருந்தார்கள். நாம் கேட்டுக்கொண்ட எண்ணிக்கைக்கும் அதிகமாகவே அவர்கள் நம் அன்பின் ஆண்டவருடைய நாம மகிமைக்காக அவற்றை அச்சிட்டு அனுப்பி யிருந்தார்கள். அந்த பரிசுத்த தேவப் பிள்ளைகளைக் கர்த்தர் தம்முடைய காயப்பட்ட கரம் நீட்டி தொட்டு ஆசீர்வதிப்பாராக.

2005 ஆம் ஆண்டு ஜூலை மாதத்திலேயே ஒரு அருமையான தேவப்பிள்ளை நமது வாகன ஊழியத்தில் நாம் பயன்படுத்துவதற்காக ''இந்திய வேதாகம இலக்கியம்'' சென்னை ஸ்தாபனத்திலிருந்து 106 பெட்டிகள் நிரம்பிய அழகான ஹிந்தி மொழி யோவான் சுவிசேஷங்களை முற்றும் இலவசமாகப் பெற்றுத் தந்தார்கள். அந்த அழகான யோவான் சுவிசேஷங்கள் வெளிநாட்டில் அச்சிடப்பட்டவைகள் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது. அன்பின் ஆண்டவர் அவர்களை ஆசீர்வதிப்பாராக. அந்த 106 பெட்டிகளையும் லாரி மூலமாக பஞ்சாப் மாநிலத்திலுள்ள லூதியானா பட்டணத்திற்குக் கொண்டு செல்லக்கூடிய லாரிக்கட்டணம் ரூபாய் 8000 த்தையும் அதை அங்குள்ள லாரி அலுவலகத்திலிருந்து டெலிவரி எடுத்து இமாச்சல் பிரதேசத்திலுள்ள உன்னா பட்டணம் கொண்டு போய் அங்குள்ள கர்த்தருடைய ஊழியர் சங்கர்தாஸ் அவர்கள் வீட்டில் கொடுக்கும் செலவுகள் அனைத்தையும் ஒரு அருமையான தேவப்பிள்ளை பொறுப்பெடுத்தார்கள். அத்துடன் 2005 ஆம் ஆண்டு மேற்கொள்ளவிருந்த நம்முடைய இமாச்சல் பிரதேச தேவ ஊழியத்திற்கும் கணிசமான ஒரு பெரிய தொகையை காணிக்கையாக அவர்கள் நமக்கு அளித்தார்கள். அந்த தேவப் பிள்ளையை அன்பின் பரலோகத் தகப்பன் தமது

ஆணி கடாவுண்ட கரம் நீட்டி ஆசீர்வதிப்பாராக. அவர்களுடைய பலன் பரலோகத்தில் இருப்பதற்காக கர்த்தருக்கு துதி ஏறெடுக்கின்றேன். ஆக, நாங்கள் செய்யவிருந்த தேவ ஊழியத்திற்குத் தேவையான தேவனுடைய பிரசுரங்கள் அனைத்தும் மிகவும் பத்திரமும், பாதுகாப்புமாக சரியான நேரங்களில் நாங்கள் எங்கள் ஊழியத்தை ஆரம்பிக்கவிருந்த உன்னா பட்டணம் போய்ச் சேர்ந்துவிட்டது . கர்த்தருக்கே மகிமை. ''இந்திய வேதாகம இலக்கியம்'' என்ற ஸ்தாபனத்திலிருந்து நம்முடைய ஊழியத்திற்கு 106 பெட்டிகள் ஹிந்தி மொழி யோவான் சுவிசேஷம் நமக்கு இலவசமாகப் பெற்றுத் தந்த அந்த அன்பான தேவப் பிள்ளையே மிகவும் சிரமம் எடுத்து நீண்ட தூரம் ரயிலில் பிரயாணம் செய்து தனது கஷ்டங்களின் மத்தியில் மேற்கண்ட பெட்டிகளை உன்னாவுக்குக் கொண்டு போய்ச் சேர்த்தார்கள் என்பதை நான் இங்கு குறிப்பிட ஆசைப்படுகின்றேன். அன்பின் ஆண்டவர் அந்த அருமையான தேவ மகனை ஆசீர்வதிப்பாராக.

எங்களை ஒன்றிணைத்த தேவன்

இந்த இமாச்சல் பிரதேச வாகன தேவ ஊழியத்தில் நம் அன்பின் பரம தகப்பன் நாங்கள் மொத்தம் 10 பேரை ஒன்றாக இணைத்தார். இதில் நாங்கள் வாடகைக்கு எடுத்திருந்த வாகனங்களின் டிரைவர்கள் ஜஸ்வந்த்ராய் மற்றும் அவினாஷ் தாக்கூர் இருவரும் அடங்குவார்கள். அந்த மக்களும் எங்களைப் போல தேவ ஊழியத்தில் பங்கெடுத்தவராவார்கள். அத்துடன் நமக்கு நேரிட்ட உபத்திரவங்களில் நம்மோடு கூட தோளோடு தோள் கொடுத்து நின்ற அருமையானவர்களாவார்கள். கர்த்தர் அந்த அன்பான மக்களை ஆசீர்வதிப்பாராக.

நமது இமாச்சல் பிரதேச தேவ ஊழியத்தில் கலந்து கொள்ளுவதற்காக நம்முடைய சகோதரன் பாஸ்டர் என்.சாமுவேல் அவர்கள் உத்தராஞ்சல் மாநிலத்திலுள்ள பித்தோர்கார்ட் என்ற இடத்திலிருந்து வந்து கலந்து கொண்டார்கள். அவர்கள் புறப்படும் சமயம் உத்தராஞ்சல் மாநிலத்தில் கன மழை பெய்ததால் நிலச்சரிவுகளைக் கடந்து மிகுந்த கஷ்டத்துடன் சுமார் ஒரு வாரம் முன்கூட்டியே தனது இடத்திலிருந்து புறப்பட்டு வந்து இமயமலைகளின் அடிவாரத்திலுள்ள ஹல்த்வானி பட்டணம் வந்து அங்குள்ள நமது அன்பான சகோதரன் பாஸ்டர் எம்.சி. ஜேம்ஸ் அவர்களுடைய வீட்டிற்கு வந்து தங்கி அங்கிருந்து அவர்கள் இருவரும் ஒன்றாக வந்து சேர்ந்தார்கள். அன்பின் ஆண்டவர் தாமே தமது மகத்துவமான ஊழியம் எந்த ஒரு தடையுமின்றி நடப்பதற்காக தமது பிள்ளைகளை பத்திரமாக கரம் பிடித்து நடத்திக்கொண்டு வந்தார்.

டில்லியிலிருந்து வழக்கமாக நமது தேவ ஊழியத்தில் கலந்து கொள்ளும் நமது அன்பு சகோதரன் பாஸ்டர் ரோமில்டன் அவர்களும், இமாச்சல் பிரதேசத்திலுள்ள தேவ ஊழியர்கள் பாஸ்டர் சங்கர்தாஸ் அவர்களும், பாஸ்டர் ஜாண் அவர்களும், இந்த தடவை புதிதாக



உடுமலைப்பேட்டையிலிருந்து அன்பின் ஆண்டவர் இயேசுவுக்காக வைராக்கியமான இந்து மக்கள் நிறைந்த பழனி போன்ற பட்டணங்களின் தெருக்களிலும், வீதிகளிலும் நின்று தேவனுடைய சுவிசேஷ கைப்பிரதி ஊழியத்தை மிகுந்த தைரியமாக பலத்த எதிர்ப்புகள், கொலை மிரட்டல்கள் மத்தியில் மிகுந்த தைரியமாகச் செய்து வரும் பரிசுத்த தேவப்பிள்ளை சகாயராஜ் அவர்களும், நமது மூத்த சகோதரன் நார்ட்டன் அவர்களும், பாவியாகிய நானும் இந்த தேவ ஊழியத்தில் கலந்து கொண்டோம்.

இந்த தடவை எங்களுடைய அனைத்து ரயில்வே பிரயாணங்களுக்கும் தேவையான முதல் வகுப்பு பயணச் சீட்டுகளை கர்த்தருக்காக எடுத்துத்தர எனது பிள்ளைகள் முன் வந்தனர். அப்படியே எடுத்துத்தர மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். ஆனால், நாங்கள் அதை ஏற்றுக்கொள்ளவே இல்லை. எளிமையாக நமது ஊழியங்களைச் செய்யும் போதே தேவனுடைய கிருபை நமது ஊழியங்களில் நிரம்பி வழியும், நல்ல ஆசீர்வாதமான ஆத்தும ஆதாயம் அதில் காணப்படும் என்று கூறி அதை நாங்கள் முற்றுமாக அன்போடு

நிராகரித்துவிட்டோம். இறுதியாக, இந்த தடவை எங்களது ரயில்வே பிரயாணத்திற்கான இரண்டாம் வகுப்பு டிக்கெட்டுகள் அனைத்தையுமே பிள்ளைகளே எங்களுக்கு எடுத்துக் கொடுத்தனர். கர்த்தர் அவர்களை ஆசீர்வதிப்பாராக. கர்த்தருடைய அளவற்ற ஆசீர்வாதம் எங்களுடைய ஊழியத்தில் திரளாக இருக்க வேண்டும் என்பதற்காக வழக்கம் போல ஆண்டுதோறும் நான் எனக்கென்று வாங்கும் எந்த ஒரு புது வஸ்திரத்தையும் இந்தத்தடவை வாங்கவில்லை. அத்துடன் மூடிப்படுக்க ஒரு புதிய போர்வையைக் கூட நான் வாங்க மனமற்று பழைய போர்வை ஒன்றே நானே துவைத்து எடுத்துக்கொண்டேன். அப்படிப்பட்ட எங்கள் அற்பமான தியாகங்களைத் தேவன் கனப்படுத்தி எங்கள் மூலமாகச் செய்யப்பட்ட தமது ஊழியங்களை அநேக ஆயிரங்களுக்கு ஆசீர்வாதமாக்கிக் கொடுத்தார். கர்த்தருக்கே மகிமை.

சகோதரன் நார்ட்டன் அவர்களும், சகாயராஜ் அவர்களும், நானும் டில்லி போய்ச் சேர்ந்ததும் எங்களைச் சந்திக்க பாஸ்டர் ரோமில்டன் அவர்களும், ஏற்கெனவே அன்று காலை உத்திராஞ்சல் மாநிலத்திலிருந்து டில்லி வந்து சேர்ந்திருந்த பாஸ்டர் ஜேம்ஸ் அவர்களும், பாஸ்டர் என்.சாமுவேல் அவர்களும் எங்களைச் சந்திக்க இரயில் நிலையம் வந்திருந்தனர். ஒரு தடவையும் இல்லாதவிதத்தில் அன்றைய தினம் சென்னையிலிருந்து டில்லி வரும் தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் இடையில் ஏற்பட்ட மற்றொரு ரயில் விபத்து காரணமாக சில மணி நேர கால தாமதத்துடன் நண்பகல் நேரம்தான் டில்லிக்கு வந்து சேர்ந்தது. அன்றைய தினம் நள்ளிரவு வாக்கில் புறப்படும் இமாச்சல் எக்ஸ்பிரஸ் ரயிலில் நாங்கள் ஏறி உன்னா என்ற இடத்திற்குப் புறப்பட்டோம். அன்பின் ஆண்டவர் எங்களுக்கு நல்ல இளைப்பாறுதலை இரவில் தந்தார். குளிர் சற்று அதிகமாகவிருந்தது. பொழுது விடிந்து வரவர எங்களை ஏற்றிச் சென்ற ரயில் பஞ்சாப் மாநிலத்தின் செழுமையான வயல் வெளிகளின் வழியாக வந்து கொண்டிருந்தது. சரியாக காலை 7 மணிக்கெல்லாம் நங்கல் அணைக்கட்டு ஸ்டேஷனுக்கு அது வந்து சேர்ந்தது. அந்த எழுத்தைப் பார்த்ததும் நான் வியப்படைந்தேன். ஆம், ஆசியாவிலேயே பிரமாண்டமான பக்ரா நங்கல் அணையும், அதையொட்டிய பெரும் மின் நிலையமும் அதற்குச் சமீபமாகத்தான் உள்ளது. பியாஸ், சட்லஜ் என்ற இரு பிரமாண்டமான வற்றாத நதிகளை இரண்டு மலைகளுக்கு மத்தியில் கொண்டு வந்து ஒரு மாபெரும் சிமெண்ட் சுவரால் அந்த இரண்டு நதிகளையும் தடுத்து நிறுத்தி மாநிலங்களுக்கு செழிப்பையும், செல்வத்தையும்,

மகிழ்ச்சியையும் கொண்டு வந்துள்ள மனிதனின் அறிவையும், திறமையையும் என்னவென்று சொல்லுவது?

எங்கள் ரயில் நங்கல் அணைக்கட்டு ஸ்டேஷனுக்கு வரவும் டிக்கெட் இல்லாமல் பிரயாணம் செய்த சில ரயில் பயணிகளை ஒரு ரயில்வே பெண் அதிகாரி தனியாக மடக்கிப்பிடித்து வைத்திருப்பதை நாங்கள் ஆச்சரியத்துடன் கவனித்தோம். சீக்கிய பெண்மணியான அவர்கள் இன்றும் தங்கள் தைரியத்தையும், உண்மையையும் கட்டிக் காத்து வருவதை அறிந்து உள்ளம் நெகிழ்ந்தோம். குறிப்பிட்ட நேரமான காலை சுமார் 7 : 45 மணிக்கெல்லாம் எங்கள் ரயில் உன்னா ரயில் நிலையத்தை வந்தடைந்தது. எங்களுடைய வருகையை எதிர்நோக்கி தேவ பிள்ளைகளான பாஸ்டர் சங்கர்தாஸ் அவர்களும், பாஸ்டர் ஜாண் அவர்களும், அவர்கள் நமது தேவ ஊழியத்திற்காக ஒழுங்கு செய்திருந்த 2 வாகனங்களுடன், வாகனங்களின் டிரைவர்கள் ஐஸ்வந்த்ராய் மற்றும் அவினாஷ் தாக்கூர் இருவர்களுடனும் ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்தனர். நாங்கள் எல்லாரும் ஒன்றுகூடி கர்த்தருடைய நாமத்தை உயர்த்தப்போகும் பரலோகப் பணியைக் குறித்து எண்ணி கர்த்தருக்குள் களிகூர்ந்தோம். நாங்கள் எல்லாரும் வசதியாக தங்கக்கூடிய வகையில் பேருந்து நிலையத்துக்கு அருகிலேயே ''மாயா'' என்ற ஒரு லாட்ஜை பாஸ்டர் சங்கரும், பாஸ்டர் ஜாணும் ஒழுங்கு செய்திருந்தார்கள். தேவப்பிள்ளைகளாகிய நாங்கள் எல்லாரும் ஒரு அறையிலேயே தங்கிக்கொள்ள வசதியாக குறைந்த கட்டணத்தில் டார்மிட்டரி அறையை ஆயத்தம் செய்திருந்தார்கள். நல்ல சுத்தமானதும், குளிப்பதற்கு வெந்நீர் வசதி கொண்டதும், காற்றோட்டம் நிறைந்ததுமான அந்த அறை எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாக இருந்தது. அதின் வாடகையும் நியாயமானதாகவே இருந்தது. நாங்கள் எல்லாரும் அந்தக் காலை வேளையில் ஒன்றாகக் கூடி கர்த்தர் எங்களுடைய வாழ்க்கையில் தம்முடைய ஜீவனுள்ள நல்ல நாமத்தை மகிமைப்படுத்த பாவிகளாகிய எங்களுக்கு கொடுத்த மற்றுமொரு அற்புத வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்த அவருடைய அன்புக்காக அவருக்கு துதி ஏறெடுத்ததுடன் வரப் போகும் ஊழியங்களைக் கர்த்தர் பொறுப்பெடுத்து நடத்திக் கொடுத்து ஆசீர்வதிக்க நாங்கள் பாரத்தோடு ஜெபித்துவிட்டு அன்றைய நாளின் தேவப்பணிகளில் இறங்கினோம். நாங்கள் எங்கள் ஆகாரத்தை சுத்தமாகவும், குறைந்த செலவிலும் சாப்பிட வசதியாக ஒரு சீக்கிய சர்தாரின் ஹோட்டல் எங்களுடைய மாயா லாட்ஜ்க்கு மிகவும் அருகாமையிலேயே இருந்தது. கர்த்தருக்குத் துதி உண்டாவதாக.

தேவனுடைய சுவிசேஷப் பிரதிகளை ஒழுங்குபண்ணிக் கொண்டோம்

நாங்கள் உன்னா பட்டணம் சென்றடைந்த அன்றைய தினமே எங்கள் காலை ஆகாரத்தைச் சாப்பிட்ட பின்பு நாங்கள் எல்லாரும் ஒன்றாக அமர்ந்து பாஸ்டர் சங்கர்தாஸ் அவர்களுடைய வீட்டிற்கு 3 இடங்களிலிருந்து வந்து



சேர்ந்திருந்த ஏராளமான தேவனுடைய பிரசுரங்கள் அடங்கிய பெட்டிகளைத் திறந்து அவைகளை வகைப்படுத்தினோம். குறிப்பாக சென்னையிலிருந்து வந்திருந்த ஹிந்தி மொழி யோவான் சுவிசேஷத்தினுள் ''சமாதான காரணர்'' ''உங்கள் வாழ்வின் உற்ற நண்பர்'' ''தேவன் உங்களை நேசிக்கின்றார் என்பதை நீங்கள் அறிவீர்களா?'' என்பது போன்ற மூன்று பிரதிகளையும் வைத்தோம். இந்த வேலை மிகவும் கடினமான வேலையாக இருந்ததால் உன்னாவிலுள்ள



சில தேவ ஊழியர்களையும் பாஸ்டர் சங்கர்தாஸ் அழைத்திருந்தார்கள். எந்த ஒரு எதிர்பார்ப்பும் இல்லாமல் அந்த அன்பான தேவப் பிள்ளைகள் எங்களுடன் அமர்ந்திருந்து 2 நாட்கள் முழுமையிலும் பணிசெய்தனர். கர்த்தர் அந்த அன்பான தேவ மக்களை ஆசீர்வதிப்பாராக. கர்த்தருடைய பெரிதான கிருபையால் 2 நாட்களில் அந்த வேலை முடிவடைந்துவிட்டது. தேவனுடைய பிரசுரங்களை நாங்கள் பிரித்தெடுத்து வகைப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்தபோது எடுத்த சில படங்களையும், தேவ ஊழியத்திற்காக நாம் பெற்றிருந்த ஏராளமான பார்சல்களில் ஒரு பகுதியையும் நீங்கள் காணலாம். அத்துடன், 3 பிரதிகளும் யோவான் சுவிசேஷத்தினுள் வைக்கப்பட்டு அட்டைப்பெட்டிகளில் நிரப்பப்பட்டு தனிமைப்படுத்தி வைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு படத்தையும் கூட நீங்கள் பார்ப்பீர்கள்.

சகலத்தையும் நேர்த்தியாகச் செய்யும் நம் அன்பின் தேவன்

நாங்கள் 2 முழுமையான நாட்களுக்கு உட்கார்ந்து மேற்கண்ட பணியை முடித்ததும் அவைகளை ஒரு லாரியில் ஏற்றிக்கொண்டு உன்னாவிலிருந்து சுமார் 400 கி.மீ. தொலைவிலுள்ள சம்பா என்ற இடத்திற்குக் கொண்டு செல்லுவதற்காக பாஸ்டர் சங்கர்தாஸ் அவர்கள் ஒரு லாரியை ஒழுங்கு செய்திருந்தார்கள். உன்னா பட்டணத்தில் லாரி ஓட்டுனர் சங்கம் இருப்பதையும், அவர்களுடைய அனுமதியின் பேரில்தான் நாம் நமக்குத் தேவையான லாரி ஏற்பாடு செய்ய வேண்டும் என்ற காரியத்தையும் பாஸ்டர் அவர்கள் அறிந்திராத காரணத்தால் மற்றொரு நபருடைய வாகனத்தை ஒழுங்கு செய்துவிட்டார்கள். அதினால் எழும்பக்கூடிய சிக்கல்களை லாரி தருவதாக வாக்குப்பண்ணிய மனிதன் நன்றாக அறிந்திருந்தபோதினும் சங்கத்திற்குத் தெரியாமல் தனது காரியத்தை முடித்துக்கொண்டு விடலாம் என்ற துணிச்சலில் நள்ளிரவில் வந்து பார்சல்களை ஏற்றிச் சென்றுவிடுகின்றேன் என்று கூறவே பாஸ்டர் சங்கர்தாஸ், பாஸ்டர் ஜாண் மற்றும் பாஸ்டர் என்.சாமுவேல் மூவருமாக அந்த நள்ளிரவிலேயே அந்த ஊரில் எந்த ஒரு சுமை தூக்கும் மக்களும் கிடைக்காத காரணத்தால் அவர்களே மிகுந்த கஷ்டத்துடன் பெட்டிகளை ஏற்றி முடிக்கவும் லாரி ஓட்டுனர் சங்கத்தின் தலைவன் எப்படியோ விபரம் கேள்விப்பட்டு அந்த நள்ளிரவிலேயே பாஸ்டர் சங்கர்தாஸ் அவர்களின் வீட்டிற்கு வந்து அவர்களுடன் பெரிய சண்டை போட்டு மரியாதை இல்லாத வார்த்தைகளால் அவர்களைத் திட்டி, அடிப்பதற்குக்கூட கைபோடவும் முயற்சித்த

வேளையில் கர்த்தர் அவர்களை உங்கள் ஜெபம் கேட்டு பாதுகாத்தார். அவனுடைய உத்தரவின் பேரிலேயே லாரியில் ஏற்றப்பட்ட அனைத்துப் பெட்டிகளையும் கீழே இறக்கிவிட்டார்கள். இறக்கினதுதான் தாமதம் அந்த வண்டிக்காரன் லாரியை எடுத்துக்கொண்டு ஓட்டம் பிடித்துவிட்டான். இப்பொழுது லாரி ஒட்டுனர் சங்கத்தின் தலைவன் தனது லாரியைக் கொண்டு வரச் சொல்லி அந்த லாரியில் எங்களுடைய பார்சல்களை எல்லாம் ஏற்றும்படியாகச் சொல்லியிருக்கின்றான். தேவப்பிள்ளைகள் அந்த இராக்காலத்தில் பட்ட பாடுகளைக் கர்த்தர் ஒருவரே அறிகின்றவராக இருக்கின்றார். கண்களில் கண்ணீர்விட்டு வாய்விட்டு அழாத குறை ஒன்றுதான். முதலில் ஏற்றிய பார்சல்களை எல்லாம் இறக்கி லாரி சங்கத் தலைவனின் லாரியில் ஏற்றியிருக்கின்றனர்.

இதில் ஒரு அதிசயம் என்னவெனில், ஒருக்கால் அந்த லாரி சங்கத்தின் தலைவன் அந்த நள்ளிரவில் வந்து ஏற்கெனவே ஏற்றப்பட்ட பார்சல்களை பலத்த சண்டைபோட்டு இறக்கியிராத பட்சத்தில் 20 பெட்டிகள் லாரியில் ஏற்றப்படாமல் உன்னாவில் விடப்பட்டிருக்கும். காரணம், முதலில் வந்த லாரி சற்று சிறியதானதால் எல்லாப் பார்சல்களையும் அதில் ஏற்ற முடியாமல் விடுபட்டிருக்கிறது. இப்பொழுது தேவகிருபையால் எல்லாப் பார்சல்களும் லாரியில் ஏற்றப்பட்டாயிற்று. கர்த்தருக்கே மகிமை. இந்த அற்புதம் அங்கு

நடந்த காரணத்தால் கஷ்டப்பட்டு லாரியில் பார்சல்களை ஏற்றி இறக்கிய நமது தேவ ஊழியர்கள் கர்த்தருக்குள் ஆரவாரித்தார்கள். ஆ, தேவன் எத்தனை நல்லவர்! ஆண்டவருடைய வழிகள் எல்லாம் ஆச்சரியமானவைகள்! ''உமது வழி கடலிலும், உமது பாதைகள் திரளான தண்ணீர்களிலும் இருந்தது, உமது காலடிகள் தெரியப்படாமற் போயிற்று'' (சங் 77 : 19) என்று சங்கீதக்காரர் சொல்லுகின்றார் அல்லவா?

வாகன தேவ ஊழியத்தில் கலந்து கொண்ட கர்த்தருடைய பிள்ளைகளையும், தேவனுடைய ஜீவனுள்ள பிரசுரங்களை நாங்கள் செல்லும்



இடங்களுக்கெல்லாம் சுமந்து கொண்டு வந்த எங்கள் வாகனங்களையும், அவைகளின் ஓட்டுனர்களையும் நீங்கள் இந்தச் செய்தியில் காணலாம். வாகனங்களில் ஒன்று சில லட்சங்கள் மதிப்புள்ள ''ஸ்கார்ப்பியோ'' வண்டியாகும். வேறு எவரும் தங்கள் வாகனத்தைக் கொடுக்க முன் வராததால் பாஸ்டர் சங்கர்தாஸ் அவர்கள் இந்த வாகனத்தை ஒழுங்கு செய்திருந்தார்கள். வாடகை இந்த வண்டிக்கு ரூபாய் 50 மாத்திரம் கூடுதலாகும். இந்த வாகனத்தையும் ஆரம்பத்தில் நான் குறிப்பிட்ட ''தைனிக் ஜாக்கரண்'' என்ற பத்திரிக்கை மறவாமல் கோடிட்டுக் காட்டு எழுதியது. ''கர்த்தாவே, எழுந்தருளும், உம்முடைய சத்துருக்கள் சிதறடிக்கப்படுவார்களாக, உம்மைப் பகைக்கிறவர்கள் உமக்கு முன்பாக ஓடிப்போவார்களாக'' (எண்ணா 10 : 35) இமாச்சல் பிரதேச தேவ ஊழியத்தின்போது தேவனுடைய பிரசுரங்களைப் பெற்றுக் கொண்ட மக்களின் சில படங்களையும் நீங்கள் காணலாம்.



தேவ மனிதர் செல்வின் குயிஸ் தன் நேச இரட்சகரண்டை சென்றுவிட்டார்கள்.

கர்த்தருக்குள் எனக்கு அருமையான தேவப்பிள்ளைகளே,

இந்த இதழின் முகப்பில் காணப்படும் தேவ மனிதர் செல்வின் குயிஸ் அவர்கள் கர்த்தருக்குள் நித்திரையடைந்த செய்தியை லண்டனிலிருந்து மின் அஞ்சல் மூலமாக எனக்குத் தெரிவித்திருக்கின்றனர்.

எந்த ஒரு மரண உபாதையும் இல்லாமல் மிகுந்த தேவ சமாதானத்தோடு ஜனுவரி மாதம் 9 ஆம் தேதி நண்பகற் காலம் தனது படுக்கையைச் சுற்றி நின்ற தேவப்பிள்ளைகளிடம் தன் ஆண்டவருக்கான தனது பூலோகப் பணி முற்றுப்பெற்றது என்றும், தான் தனது நித்திய விண்வீட்டிற்குச் செல்ல ஆயத்தமாக இருப்பதாகவும், தனது அருமை இரட்சகர் இயேசுவை அங்கு விரைந்து சந்திக்கப் போவதாகவும் மிகுந்த களிகூருதலோடு சொல்லியிருக்கின்றார்கள். கர்த்தருக்கே மகிமை.

தேவ மனிதர் செல்வின் குயிஸ் அவர்களுக்கு நான் எழுதின கடிதம் அவர்களின் மரணத்திற்கு 3 நாட்களுக்கு முன்பாக அவர்களுக்கு கிடைத்திருக்கின்றது. அதிலே நான் அவர்களது வாழ்க்கைச் சரித்திரத்தை சுமார் 60 பக்கங்களில் நேர்த்தியாக நமது தேவ எக்காளத்தில் மொழி பெயர்த்திருப்பதையும், அந்த தேவ எக்காள பிரதியை பதிவுத்தபாலில் அவர்களுக்கு அனுப்பப் போவதையும் எழுதியிருந்தேன். அந்தக் கடிதம் அவர்களுக்கு மிகுந்த சந்தோசத்தை அளித்திருக்கும் என்று நாம் நிச்சயமாக நம்பலாம். தனது சுயசரிதையை தமிழில் மொழிபெயர்க்கும் படியாக எனக்கு அனுமதியளித்துஅந்த மொழிபெயர்ப்பு வேலையைச் செய்யும்படியாக அவர்களின் சுயசரிதை புத்தகம் ஒன்றை எனக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்த தேவ மனிதர் அல்லவா அவர்கள்!

''நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்(அப் 20 : 29) என்ற அப்போஸ்தலனின் வார்த்தையின்படி தேவனுடைய பரிசுத்த சபையை கள்ள உபதேச ஓநாய்கள் கடித்துப் பட்சித்துக் கொண்டிருக்கும் இக்கடைசி நாட்களில் தன்னால் முடிந்தவரை அந்த ஓநாய்களின் வாய்களுக்கு தேவ ஜனத்தை தமது வல்லமையான சுத்த சத்திய எழுத்துக்களால் பாதுகாத்த அந்த சிலுவை வீரருக்காக நாம் நம் ஆன்பின் ஆண்டவருக்கு துதி செலுத்துவோம்.

DEVA EKKALAM

REGISTERED NEWS PAPER
Regn. No. M : 8850 / 1970





Edited and Published by N. Samuel

MAILING ADDRESS : N. Samuel, Editor, "Deva Ekkalam",
Post Box No. 6, Kotagiri - 643 217, Nilgiris.

Coonoor Printing Press